மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

கணபதி துணை.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

கச்சியப்பமுனிவரர் அருளிச்செய்த

# திருத்தணிகையாற்றுப்படை மூலமும்

புரசை-அஷ்டாவதானம்

## சபாபதிமுதலியாரவர்களியற்றிய

விருத்தியுரையும்.

---

இவை

சித்தாந்தசரபம்—அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

திரு - பக்தவத்ஸலம் பிள்ளை

B.A., M.B.P.I., அவர்கள்

உதவியைக்கொண்டு

ஷை உரையாசிரியரது தமையனார் குமாரர்

புரசை-த-குப்புசாமிமுதலியாரால்

---

இராமநிலைய விவேகானந்த அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

---

விரோதிகிருது ௵ புரட்டாசி ௴ ௧௫ ௳: 1911 ௵ செப்டம்பர் ௴ 30 ௳

முதற்பதிப்பு: காப்பி ௧௦௦௦.

[ரிஜிஸ்தர் காபிரைட்.] [விலை அணா 12.]

உ

கணபதி துணை.

# பதிப்புரை.

ஒருநூலை அச்சிடுதல் முதலியவைகள், எத்தகைய பெருநூல்களையு மெல்லைகண்ட வித்துவ சிகாமணிகளுக்கே யுரித்தாக விருக்க, கல்வியறிவீனனாகிய யான் இந்நூலையும் இவ்வுரையையும் அச்சிற் பதிப்பிக்கத் துணிந்தது யாதெனில் "கேட்டதெல்லாம் பாலிக்குங் கேடிலாத் தாதாவும், வீட்டுநெறி காட்டும் வியன்குருவு—நாட்டமென, வுண்ணின்று நாயேற் கொளிகாட்டுஞ் சிற்பரனு, மெண்ணின்றபோரு ரிறை." என ஆன்றோர்களாற் றுதித்துள்ள அருட் பெருங் கருணைக்கடவுளாகிய முருகப்பெருமான் திருவருள் விலாசத்தினை இந்நூலின்கண் விளக்கமாகச் செப்பி யிருத்தலினாலும், ஸ்ரீ கச்சியப்பமுனிவரர், தம்மானுக்காகிய கந்தப்பையருக்கு வயிற்றிலே குன்மநோ யுண்டாயபொழுது இத்திருத்தணிகை யாற்றுப்படையைச் செய்து கொடுத்தவளவில் அம்மானுக்கர் திருத்தணிகை முருகக்கடவுள் சந்நிதியிற் படனஞ் செய்ய வாரம்பித்த சொற்ப தினத்திற்குள் அந்நோயை மாற்றியருளிய அருட்டிறம் வாய்ந்த நூலாக விருத்தற் பற்றியும், பாராயணத்திற்குத் தக்க நூலாகவிருத்தலினாலும், கல்வித்தேர்ச்சி யில்லாத எனையொத்த அறிவிலர்களும் இந்நூலின் சொற்பயன் முதலியவைகளை எளிதிலுணர வேண்டுமென்னுங் கருத்துட்கொண்டும், இந்நூலிற்கு இவ்வுரை செய்தவராகிய புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியாரவர்கள் எனது சிறிய தந்தையாகையால் சுதந்திர அபேட்சை வரம்புகடந்தெழுந்த மேலீட்டாலும் அச்சிற்பதிப்பிக்கத் துணிந்தேன்.

"முக்குண வசத்தான் முறைபிறழ்ந் தறைவரே, அதிமதி நுட்பமோ டதிகலை கற்பினும், விதியது வசத்தால் விதிவிலக் கயர்ப்பார்" என்றான்றோர்கள் கூறியிருப்பதால், நிரக்ஷர குக்ஷியாகிய

அடியேன் பதிப்பித்த இப்பதிப்பில் அபரிமிதமாகப் பிழைகளிருக்குமென்பது திண்ணமே யாயினும், 'உருவுகண் டெள்ளா துளந்தேருமேலோர், பொருணலந் தோராமு னுந்தீபற, புன்சொல்கண் டெள்ளா ரென்றுந் தீபற." எனச் சான்றோர்கள் கூறியிருப்பதனால் நமது தணிகைப்பெருமான் திருவருள் விலாசத்தினையே பொருளாகக் கொண்டு இப்பதிப்பிலுள்ள தவறுக ளனைத்தையும் என்னுடையதாகவே பாவித்துப் பொறுத்தருளி என்னைச் சீர்திருத்துதலோடு இந்நூலைப்போலவே இன்னும் சில நூல்களைப் பதிப்பிக்க எண்ணி யான் செய்துவரும் முயற்சிகள் ஒவ்வொன்றும் கருதியவண்ணம் எமக்கு நிறைவேறும்படி எம்மை ஆசீர்வதிக்க வேண்டு மெனவும் இலக்கணத்தினு மிலக்கியத்திலும் வரம்புகண்ட புலவர் சிகாமணிகளைத் திரிகரண சுத்தியாகப் பிரார்த்திக்கின்றனன்.

திருக்கயிலாச பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் மரபில் அனுக்கிரகம் பெற்றவரும், தமிழ்ப் பாஷை தழைத்தோங்கும் வண்ணம் அவதரித்த மகான்களுள் ஒருவருமாகிய கச்சியப்ப முனிவரார், அருட்பொலிவுடன் அழகிய இலக்கிய இலக்கணப்பொலிவு மமைந்துள்ள நூலும், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய திருமுருகாற்றுப்படையோ வீது எனவிற்பனர் யாவரும் கண்டு களித்துப் பொற்புறச் சந்தேகிக்கத் தக்கதூஉம் ஆன அரிய பெரிய அலங்காரங்கள் வயங்கத்திருவாய்மலர்ந்தருளிய இத்திருத்தணிகையாற்றுப்படையின் அருமை பெருமையினை எனது சிறிய தந்தையாகிய புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியாரவர்கள் கண்ணுற்று, அப்படையுட் சிறந்த சொற்சிறப்பு பொருட் சிறப்பு முதலிய நயங்களை நன்கெடுத்து விளக்குவதாகிய இவ்விருத்தி யுரையைப் பவவருடம் வைகாசிமீ"த்தில் எழுதி முடித்து வைத்தனர். ஷெ உரையாசிரியர் காலத்திற்குப் பிறகு, இவ்வுரையை அச்சுவிமான மேற்ற அபேட்சைகொண்டு பலவருடங்களாக முயற்சித்தும் கூடிவாராமையா லதுவே பெருங் கவலைகொண்ட மனத்தனாக விருக்குநாளில், ஓர் நாள் ஸ்ரீ சுந்

தரமூர்த்தி சுவாமிகள் "பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கு மடியேன்." என்று திருத்தொண்டத்தொகையில் அருளிச்செய்த சொல்லுதற்கரிய பெருஞ்சிறப்பினையுடைய குலச்சிறை நாயனார் திருவவதார மாட்சிமையைப் பெற்ற கருணீகர் குலதிலகரும், பக்த சிரோமணியும், சீரறம் வளர்க்கும் செல்வரும், தன்னருமைப் பெயருக்கேற்பத் தன்னை யடுத்தவர்பால் இரக்கமுடையவரும். ஸ்ரீ கிருஷ்ண சைதன்னிய கிரந்த கர்த்தாவும், எனதின்னுயிரனைய நண்பருமாகிய திரு. பக்தவச்சலம் பிள்ளை பீ. ஏ. அவர்களைச்சந்தித்து இந்த அச்சுவிஷயத்தி லெனக்குள்ள கவலையைத் தெரிவித்துக் கொண்டதற்கு, இனி இதன் பொருட்டுக் கவலை அடையற்க என்று சொல்லித் தாமே அச்சிட்டுத் தருவதாக வாக்களித்து அங்ஙனமே அவர்கள் செய்த பேருதவியினாலேயே இவ்வுரையை அச்சுவிமானத்தி லேற்றுவித்தேன். இம்மகோப காரியவர்கட்கு யான் செயற்பாலதொன்று மின்றாயினும், "ஆதிவாணி வீரம் விசயஞ் சந்தானந் துணிவுதனம், அதிதானியஞ் சவுபாக்கியம் போக மறிவழகு, புதிதாம் பெருமை யறங்குல நோயின்மை பூண்வயது, பதினாறுபேறுந் தருவாய் மதுரைப்பராபரனே" என நிறைமொழியாளர்களால் ஆசீர்வதித்தலாகிய இப்பேறு பதினாறையும் வள்ளலாகிய காரிபோன்ற இவ்வுபகாரிக்கு அருளல் வேண்டு மென்று தணிகைப் பெருமான் திருவடித்தாமரைகளை வணங்குகின்றனன்.

இந்நூலினை அச்சிடுங்காலத்துச் சிறிதும் தமது தேகத்தின் எய்ப்பிளைப்பை மதியாது மனச்சலிப்பின்றி, இரவும் பகலும் உடனிருந்து, பரிசோதனை பத்திரங்களைப் பரிசோதித்துக் கொடுத்த பரோபகாரதயாளகுண சீலரும், சைவசிகாமணியும், சைவசித்தாந்த லீலாவினோத வல்லபவித்வமணியும், என்பாலெப்போதும் நீங்காத வுள்ளன்புள்ள வருமாகிய சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்களுக்கு மனப்பூர்வமாக மிக்க வந்தனஞ் செய்கின்றனன்.

புலவர் பெருமான்களுக்கும் செல்வச் சிகாமணிகளுக்கும் உரித்தாக விருக்கும் இக்காரியத்தை ஆரம்பித்த யான் பூர்த்தி செய்யவில்லையே என்கிற கவலையும், அதனால் விளையும் இழிவையு மடையா வண்ணம் இதனை விக்கினமின்றி முற்றுவித்த எனது ஆத்மார்த்த மூர்த்தியாகிய ஆபத்சகாய விநாயகக்கடவுளின் திவ்விய திருவடிகளை மனமொழிமெய்களாற் சதாவணங்குகின்றனன்.

இங்ஙனம்

இவ்வுரையாசிரியர் தமையனார் குமாரன்

புரசை-த-குப்புசாமி முதலியார்.

கணபதி துணை.

---

## இந்நூலாசிரியராகிய

# கச்சியப்ப முனிவரர் சரித்திர சங்கிரகம்.

இந்நூலாசிரியர் தொண்டைமண்டலத்திலே, தணிகையம்பதியிலே, பரம்பரைச் சைவவேளாளர் குலத்திலே, அபிஷிக்தர்மரபிலே அவதரித்து, ஒழுக்கம் அன்பு அருள் முதலிய நற்குணங்களுடன் வளர்ந்து, கல்விகேள்விகளிற்சிறந்து, சிவக்ஷேத்திர யாத்திரை செய்யத்தொடங்கி, பல சிவஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, நவகோடி சித்தபுரமாகிய திருவாவடுதுறை யாதீனத்தையடைந்து, திருக்கைலாய பரம்பரை அத்துவித மெய்கண்ட சந்தானத்துப் பரமாசிரியராகிய நமசிவாய சுவாமிகளைத் தரிசித்து, அக்காலத்திற் சின்னபட்டத்தி லெழுந்தருளியிருந்த ஞானாசிரியராகிய பின்வேலப்பதேசிகரிடத்தே சைவசந்நியாசமும் சிவதீட்சையும் பெற்றுக் கொண்டனர். பின்னர், அகத்தியர் வரத்தால் அவதாரஞ் செய்து, வடமொழி தென்மொழி மகோததி பருகித் திராவிடமகாபாஷியந்தந்தருளிய மாதவச் சிவஞானயோகிகளிடத்தே இலக்கிய இலக்கண நூல்களும், தருக்கமும், மெய்கண்ட சாஸ்திரம் பதினான்கும், பண்டார சாஸ்திரம் பதினான்கும் மற்றும் பல நூல்களும் கற்றுணர்ந்து, ஆசிரியர் சிவஞான யோகிகள் பன்னிருமாணவகருட் சிறந்து, கவிச்சக்கிரவர்த்தியாக விளங்கித் திருவானைக்கா புராணம், பூவாளூர்ப்புராணம் பேரூர்ப்புராண முதலியமொழி பெயர்த்து, திருத்தணிகை யடைந்து சொல்வளம், செய்யுணடை, சந்தம், பொருட்சுவைமலிய, சீவகசிந்தாமணியுந் திகைத்துப் பின்னிடைய, இதற்குமேலொரு இலக்கியமில்லை யென்னும்படி மாட்சிமை பொருந்திய பேரிலக்கியமாகத் திருத்தணிகைப் புராணத்தை யருளிச்செய்து, தமது மாணாக்கரிற் சிறந்த கந்தப்பையருக்கு வயிற்றிலே குன்மநோ

யுண்டானபோது. இவ்வரிய பெரிய தணிகையாற்றுப்படையினைப் பாடி அவர் நோயை மாற்றியருளினார். பின்பு சென்னைமா நகரினை யடைந்து விநாயகபுராணம் பாடியரங்கேற்றுகையில் அச்சபைக்கு வந்தபெரிய பிரபு வாகிய ஐயாப்பிள்ளை, இஃதென்ன இராமாயணமோ என்னச்சிறிது பரிகசிக்க, உடனே முனிவர் இராமாயணத்தில் ஆறு செய்யுளில் நூறுகுற்றமேற்றக் கண்டபிரபு வானவர் நூறுவராகனும் உயர்ந்த பீதாம்பரங்களும் சமர்ப்பித்து வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொள்ள, அவர் முன்னிலையிலே புராணத்தை யரங்கேற்றி முடித்து ஷெடி நூறுவராகனையும் மற்றையர் அடியுறையாகத் தந்த இரண்டாயிரம் வராகனையுங்கொண்டு, திருவாவடுதுறை ஆதீன பரமாசாரியராகிய நமசிவாய மூர்த்திகள் சந்நிதிமண்டபப் பணிசெய்வித்தருளினர். பின்னர் காஞ்சிமா நகரினையடைந்து தமது ஆசிரியர் கட்டளையைச்சிரமேற்கொண்டு ஆசிரியரியற்றிய காஞ்சிபுராணத்து இரண்டாங்காண்ட மியற்றியருளி, கச்சியானந்தருத்திரேசர் வண்டுவிடுதூது, கச்சியானந்தருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி, பஞ்சாக்ரவந்தாதி இன்னோரன்ன பற்பல நூல்களியற்றிக் காஞ்சிபுரத்திலே சாலிவாகன சகாப்தம் ௧௭௧௨ க்குச்சரியானசாதாரண௵ சித்திரை௴ ௧௧௳யாகிய மங்களவாரத்திலே, புனர்பூச நட்சத்திரத்திலே, பூர்வபட்சத்துச் சத்தமியுங்கூடிய கும்பலக்கினத்திலே சிவசாம்பிராச்சிய மெய்தப்பெற்றனர். சுபம்.

கணபதி துணை.

---

இந்நூலின் உரையாசிரியராகிய

மகாவித்துவான்

புரசை அஷ்டாவதானம்

# சபாபதிமுதலியாரவர்கள்

## சரித்திரம்.

ஜெயங்கொண்ட தொண்டைமண்டலத்திலே, முப்பானிரண்டு தலங்களுளொன்றாயதூஉம், எண்ணெண்கறம் வளர்த்த காமாட்சி சமேதராக ஏகாம்பரேசர் ஒருமாவின்கீழ்த் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருப்பதூஉமாகிய காஞ்சிமாநகரத்தின் குணதிசையில், ஐந்துயோசனை தூரத்தில், அறுமுகச்சிவனார் திருவருள் விலாசம் தரும்புந் திருப்போரூர்த் தலத்திற்கு உத்தரத்தில் மூன்று நாழிகை தூரத்திலுள்ள **தையூர்** என்னுங்கிராமத்தில், வேளாண்மரபியற்றிய தவப்பேற்றால் **தையூரான் முதலியார்** என்பவரொருவரிருந்தனர். இவர் தமக்குப் புத்திரப்பேறின்மையின் தம்மரபிற் **சாமி முதலியா**ரென்பவரைச் சுவிகாரங்கொண்டனர். இச்சாமிமுதலியாருக்குத் தந்தையார் (தையூரான் முதலியார்) தம்மரபிலுள்ள **வள்ளியம்மாள்** என்னும் ஒரு பெண்மணியை விவாகஞ்செய்து வைத்தனர்.

மேற்படி சாமி முதலியாரும், அவரது கற்பின் மிக்க மனைவியாராகிய வள்ளியம்மாளும் இல்லறம் நடாத்தி வருகையிலிவர்கட்கு இவர்கள் தவப்பேற்றால் **இரிசப்ப முதலியா**ரென்பவர் பிறந்தனர். இவருக்குப் பத்து பன்னிரண்டுவயது ஆனசமயத்தில், இவர் தந்தையார் சாமி முதலியார் தேகவியோகமாயினர். இவர் தேகவியோக

மான சின்னாட்குப் பின்னர் தையூரிற் பஞ்சம் நேர்ந்தமையின், ஸ்ரீ வள்ளியம்மாள் தனது குமாரராகிய ஸ்ரீ இரிசப்ப முதலியாரை ஸ்ரீ தையூரினின்றும் அழைத்துக்கொண்டு, சென்னையை அடுத்த பூவிருந்தவல்லியைச்சார்ந்த செம்பரம்பாக்கத்திற்கு வந்து சேர்ந்தனர். அவ்வூரிலும் அவ்வூரைச்சூழ்ந்த கிராமங்களிலும் பஞ்சம் முதலிய இடையூறுகள் உண்டாயிருந்தபடியால், அவ்விடத்தும் சீவனத்திற்கு அநுகூலப்படாமையின், இனிச் சபாபதி முதலியாரவர்கட்குத் தாய்க்குடும்பமாக நேரிடும் தமது சுற்றத்தாருடன் ஸ்ரீ செம்பரம்பாக்கத்தினின்றும் சென்னைக்கு வடக்கேயுள்ள புழல் கிராமத்திற்கு வந்து சிலநாளிருந்து, அங்கும் சரியான சீவனம் கிடையாமையின், ஸ்ரீ வள்ளியம்மாள் தன் குமாரராகிய ஸ்ரீ இரிசப்ப முதலியாரை அழைத்துக்கொண்டு சென்னையைச்சார்ந்த புரசைப்பாக்கத்தினையடைந்து நிலையுற்றனர். இவர்களுடன் வந்த ஸ்ரீ தாய்மரபினர் சென்னையைச்சார்ந்த அட்டபாளையத்திற் சேர்ந்து, தோட்டப்பயிர் குத்தகை முதலியவைகளால் சீவனம் செய்து வந்தனர், பிறகு ஸ்ரீ வள்ளியம்மாள் தன் குமாரராகிய இரிசப்ப முதலியாரை அக்காலத்தில் புரசையி லிருந்துகொண்டிருந்த ஒரு ஐரோப்பிய துரையினிடமிருந்த பசுக்கூட்டங்களை மேய்க்கும் ஆட்களுக்குத் தலைவராகவிருந்து அலுவல் பார்த்துவந்த ஒருவர் முகாந்தரத்தில் பசுக்கூட்டங்களைமேய்க்க நாளொன்றுக்கு இரண்டணா கூலிக்கு அமர்த்திவைத்தார். ஸ்ரீ இரிசப்ப முதலியாருக்குப் பதினைந்து பதினாறு வயதான காலத்தில், ஸ்ரீ இரிசப்ப முதலியாரை வேலைக்கு வைத்தவர் காலமாய் விடவே, ஸ்ரீ துரை ஸ்ரீ இரிசப்ப முதலியாரையே பசுக்கூட்டங்களைப் பாதுகாத்து வரும்வேலை முதலியவைகளுக்குத் தலைவராக மாதச்சம்பளத்திற்கு வைத்துக்கொண்டு வெண்ணெய் பால் தயிர் தவிர, மோரினை இரிசப்ப முதலியாரையே யெடுத்துக்கொள்ளும்படி ஸ்ரீ துரை உத்தரவு செய்தார். அவ்வாறே மோரை நாடோறும் தன் தாயாராகிய ஸ்ரீ வள்ளியம்மாளிடத்தில்* கொண்டுவந்து கொடுக்க, அந்த அம்மாள் அம்மோருடன் புரசையைச்சார்ந்த குளத்

தூர், அமிஞ்சிகரை, அரும்பாக்கம், கோயம்பேடு, மதுரவாயல் முத லிய கிராமங்களுக்குப்போய் பால் தயிர் விலைக்கு வாங்கி வந்து மோரினைச்சேர்த்துச் சென்னைக் கோட்டை மேட்டிலிருந்த குடி களுக்கு விற்பனை செய்துவந்து அவற்றாற் கிடைக்கும் பொருளுத வியினால் சீவனம் செய்துவருந் தருணத்தில், ஷை வள்ளியம்மாள் தன் குமாரராகிய இரிசப்ப முதலியாருக்குச் சென்னை அட்டபாளை யத்தில் தங்கியிருப்பதாக மேலே சொல்லப்பட்டுள்ள ஷை தாய்க் குடும்பத்தில் மங்கத்தம்மாளுடைய குமாரத்திகளாகிய தெய்வயானை அம்மாள் முனியாத்தை அம்மாள் என்னும் பெண்களிருவர்களில் இளைய குமாரத்தியாகிய ஐந்துவயதுள்ள முனியாத்தை அம்மாளை விவாகஞ்செய்து வைத்தார். ஷை இரிசப்ப முதலியாருக்கு விவாக மான சின்னாட்களுக்குப் பின்னர், மேற்காட்டியுள்ள துரை சென் னையை விட்டுத்தன் சுதேசத்திற்குப் போய்விடவே, தங்கள் சொந் தத்திலேயே ஷை இரிசப்ப முதலியார் அனேக பசுமாடுகளையும் எருமைமாடுகளையும் பதின்மூன்று வேலைக்காரர்களைக்கொண்டு பாதுகாத்து வந்தார். அம்மாடுகளால் இறைவன் பிரசாதித்த வெண் ணெய் பால் தயிர் முதலியவைகளை விற்பனை செய்து விசேஷ திர வியம் சம்பாதித்து மிக்க மதிப்படைந்து அது முதல் வெண்ணெய்க் கார இரிசப்ப முதலியாரென யாவருமழைக்கும்படி பிரபலமுற்றுச் சுகமாக வாழ்ந்துவந்த காலத்தில், இந்த இரிசப்ப முதலியாருக்கும் முனியாத்தை அம்மாளுக்கும் நற்றவப்பயனாக மூன்றுபுத்திரர்களும் பதினொரு புத்திரிகளும் பிறந்தார்கள். மேற்கண்ட மூன்று புத்திரர் களில் மூத்தவர் பெயர் வேங்கடாசல முதலியார் இளையவர் பெயர் சபாபதி முதலியார் இவரே யிச்சரித்திரத்தலைவர்.

மேற்கண்ட மூன்றுபுத்திரர்களுள் ஒருவரும் இச்சரித்திரத் தலைவருமாகிய சபாபதி முதலியார் பாற்கடலிடை மதியந்தோன்றி னாற்போலவும்,சலஞ்சலத்தினின்று வெண்டாளம் உதித்தாற் போல வும் சுபவோரையில் அவதரித்தார்.

இச்சபாபதிமுதலியாரைச் சுக்கிலபட்சத்துச் சந்திரன்போல் தாய்தந்தையர்கள் அகமகிழ்பூத்துவளர்க்க, அவர்நாளுக்குநாள் அன்பு அறிவு அடக்கம் ஆசாரம் முதலிய வெல்லாம் உடன்வளர வளர்ந்து, தக்கபிராயத்தில் சோடசாவதானம் சாமிநாதக்கவிராயர் மாணுக்கரும், புரசையில் தெருப்பள்ளிக்கூடம் வைத்துக்கொண்டிருந்தவருமாகிய புதுவை அச்சுத வுபாத்தியாய ரிடத்தில் அட்சராப்பியாசஞ் செய்யப்பெற்றுச் சிற்சில இலக்கியமும் இலக்கணமுங்கற்று அவதானமும்பழகினர். பின்னர் அக்காலத்திருந்த சென்னைத்துரைத்தனக் கல்விச்சாலையில் ஆங்கிலேயமுந் தமிழும்பயின்று பாடசாலையில் இருபாஷையினும் பரீட்சைகளிற்றேறிப்பரிசுபெற்று, கல்விச்சாலையினின்று நீங்கி, அக்கல்விச்சாலையிலேயே தமிழ்த்தலைமைப்புலமை நடத்திவந்த வித்துவான் (ஜட்ஜி) வி—தாண்டவராயமுதலியாரிடம் தமிழ்ப்பயின்று வந்தனர். அவ்வித்துவான் சுதேச நீதியதிபர் உத்தியோகம் பெற்று இச்சாப்பூருக்குப் போய்விட, காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் வாசித்துக்கொண்டே, சென்னை இராஜாங்கத்தில் அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆபிசிலும், தங்கசாலையிலும் ௧௧௪ ரூபாய் மாதம் சம்பளமாகக்கொண்டு உத்தியோகஞ் செய்துவந்தனர். சென்னையினின்று தங்கசாலை எடுபட்டபின் சுயார்ச்சித திரவியத்தினையே ஆதாரமாகக்கொண்டு வாழ்ந்து வந்தனர். பின்னர் காஞ்சிபுரம் சரவணதேசிகர், மழவை மகாலிங்கையர், திருத்தணிகை விசாகப்பெருமாளையர், மேற்சொல்லிய கல்விச்சாலையின் புலவர்களாகிய வித்துவ சிரோமணி கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், புதுவை நயனப்ப முதலியார் ஆகிய இவர்களிடத்து ஐந்திலக்கணங்களும், சாஸ்திரங்களும், புராணங்களும் பயின்றனர்.

இச்சபாபதிமுதலியாரவர்கள் தமக்குக் கல்வி கற்பித்துக் கொடுத்த போதகாசிரியர்களைத் தாம்பாடிய திருப்போரூர்ப் புராணத்தினும் ௸ ஊரில் அவதானஞ்செய்த காலத்தினுந் துதித்துள்ளார் அவை வருமாறு.

## திருப்போரூர்ப் புராணத்திலுள்ள

### குருவணக்கம்.

அச்சுதன் பரம னம்புய ஞதி யருண்மகா லிங்கமெய் வடிவாய்ச்
சச்சிதா னந்த சரவணற் பெறுமோர் தாண்டவ ராயதற் பரமாம்
விச்சுவ வுருவ விமலனை யுள்கு மெய்ந்நெறி தந்தெனை யெடுத்தாள்
கச்சியம் பதிவாழ் சபாபதிக் குரவன்காண்மலர் நாடொறும் பணிவாம்.

ஷெ ஊரில் அவதானம் செய்தகாலத்தில் பாடிய

## கடவுள் வணக்கம்.

### வெண்பா.

ஆயமறை யோர்பரவு மையகதிர் வேன்முருகா
சேய வுணர்வினர்கள் செல்வமே—தூய
வருண னனைய வழகாநீ யிந்தத்
தருணத்தி னின்கருணை தா.

## குருவணக்கம்.

### வெண்பா.

மருவுமஞ் ஞான மயக்கமறுத் தெம்மை
யிருமை பெறவாண்ட வின்பக்—கருணைமிகும்
அண்ணலிருந் தென்புதுவை யச்சுத நற்குரவன்
வண்ணமலர்த் தாள்தலைக்கொள் வாம். (க)

எங்கண் மணியிதயத் தின்பொருள்சென் னிக்கணிபொன்
னங்கமல மாந்தமிழ்ச்சென் னைக்கல்விச்—சங்கத்தின்
ஏண்டவ ராயினரு மேத்துமுதன் மைப்புலமைத்
தாண்டவ ராயகுரு தாள். (உ)

பரவுமஞ் ஞானமெனும் பவ்வமொழித் தெம்மை
யருமா நிலந்தன்னி லாண்ட—கருணையெலாந்

தங்குதிருக் காஞ்சிச் சபாபதி யாசிரியன்
பங்கயத்தாள் சென்னிவைப் பாம். (ரு)

என இவர் இவ்வாறு தோத்திரஞ்செய்திருப்பதால், முறையே இவர் மேற்கண்டவர்களிடத்திலேயே பெரும்பான்மையும் பாடங்கேட்டுத் தேறினவரென்று விளங்குகின்றது. முதலியாரவர்கள் சீட்டுக்கவிக ளெழுதுங்காலத்தில்,"தாண்டவராய தேசிகன் வரப்பிரசாதம்" எனவும்; "சென்னை யம்பதிச்சங்கத்தருந்தமிழ் முதற் புலமையை அமைவுறநடாத்து தாண்டவராய குருசாமியடிமைக்கு மடிமை அஷ்டாவதான கனவிற் பனசபாபதி யகங்கனிந்தெழுது நிருபம்," எனவும்; நூல்கள் அச்சிடுங்காலத்தில் காஞ்சிபுரம் வித்துவான் சபாபதி முதலியார் மாணாக்கர் எனவும் வரைவது இவரது வழக்கம். இவ்வாறு பற்பல வித்துவான்களாகிய பன்மலரிடத்தும் செந்தமிழாகிய பைந்தேறல் பருகிப் புலமைக்களி சிறந்துலவும் வித்வச்சுரும்பெனவும் "கவியே கமகன் வாதிவாக்கியெனப், புவிமேற் சொல்லும் புலவர் நால்வர்." என இலக்கண விளக்கத்தார் கூறியவாறு நாற்பெரும் புலமை படைத்தவராய், முருகக்கடவுளின் றொண்டராய், கல்விப் பெருங்கடல் நிலைகண்டு நன்குணர்ந்த காளமேகமாய், அனேக நன் மாணாக்கர்களுக்குக் கல்விகற்பித்துக்கீர்த்தியுற்று விளங்கினர். இவர் தக்க பருவம் அமைந்தபோது முன் தமக்கு இளமையில் பிரதம போதகாசிரியராகிய மேற்கண்ட புதுவை அச்சுத உபாத்தியாயரிடத்து அஷ்டாவதானம்பயின்றுபுரசை ஸ்ரீ கங்காதரேஸ்வரர் ஆலயத்திலும், மயிலையிலும், செங்கற் பட்டிலும், புதுவையிலும், திரிசிரபுரம் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் ஆலயத்திலும், மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் மடாலயத்திலும், திருப்போரூர் (முருகக்கடவுள்) தேவஸ்தானம் ஒன்பதாவது பட்டம் ஸ்ரீ முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் ஷை தேவஸ்தானத்தில் நடத்திய கும்பாபிஷேக காலத்தில் ஷை முருகக்கடவுள் சந்நிதியிலும், கச்சி ஸ்ரீ ஏகாம்பரநாதர் சந்நிதியில் ஆயிரக்கால் மண்டபத்திலும் அரும்புலவர்களும் அதிசயிக்க அஷ்டாவதானஞ் செய்தனர். இவர் அவதானஞ்செய்யுங்காலங்களில் கண்ட

பத்திரிகை சொல்லுந்திறமை எத்தகையஅவதானிகளானும் மிகவும் வியக்கத்தக்கதாக விருக்கும். இவர் பாடியவண்ணப்பாக்களைக் கண்டார் இவரைவண்ணக் களஞ்சியமெனக்கொண்டாடாதா ரொருவருமில்லை. புலவர்கள் பாடவேண்டியபிரபந்தங்கள் தொண்ணூற்றாறும் பாடவல்லவரென்பது அவராலியற்றப்பட் டுள்ளதாகிய இதன்கீழ் வரைந்துள்ள பிரபந்தங்களாலும் அவராலியற்றி அச்சாகிவெளிவந்திருக்கும் பிரபந்தங்களாலும் தேறலாம், அவைவருமாறு:— திருப்போரூர்ப்புராணம், திருப்போரூர்க்கலம்பகம், ஷெடியூர் அலங்காரபஞ்சகம், ஷெடியூர்யமகவந்தாதி, ஷெடியூர் பதிற்றுப்பத்தந்தாதி, ஷெடியூர் பிரணவாசலவெண்பாமாலை, ஷெடியூர் திரிபந்தாதி, ஷெடியூர்நான்மணிமாலை, ஷெடியூர் இருசொல்யமகமாலை உரையுடன், ஷெடியூர் சதகம், ஷெடியூர் பிரணவாசலசதகம், ஷெடியூர்வெண்பாமாலை, ஷை யூர்ஆதினம் ஸ்ரீசிதம்பரசுவாமிகள்சரித்திரவசனகாவியத்துடன்சேர்ந்தபதிற்றுப்பத்தந்தாதி, ஷெடியூர்ப்புராணசரித்திரச்சுருக்கவசனகாவியம், திருத்தணிகை இரட்டைச்சொல் யமகமாலை உரையுடன், புரசைப்பதிற்றுப்பத்தந்தாதி, ஷெடியூர் வெண்பாமாலை, ஷெடி யூர் இரட்டைச்சொல் யமகமாலை உரையுடன், திருப்போரூர் குறவஞ்சி, திருவொற்றியூர் வடிவுடையம்மை பதிற்றுப்பத்ததாந்தி, ஷெடி அம்மை தோத்திரச் சந்தமாலை, பழநிவெண்பாமாலை, அருணைவெண்பாமாலை. மயிலை வெண்பாமாலை, காஞ்சி வெண்பாமாலை, காஞ்சிக்குமர கோட்டக்கலம்பகம், சென்னைக்கந்தசாமி வெண்பாமாலை, சென்னைக்கந்தசாமி புராணம் நாட்டுப்படலம் நகரப்படலம்வரையில் இன்னும் அனேகவண்ணங்களும் திருப்போரூர்ப்புராணகீர்த்தனையுடன் சேர்த்துப் பாடிய ஸ்காந்த கீர்த்தனையும், அனேக தனிக்கீர்த்தனைகளும், பதங்களும், வண்ணங்களும் பாடியிருக்கின்றனர். முதலியார் நூல்களியற்றி யிருக்குந்திறமையும் கல்வித்திறமையுஞ் செவியுற்றுங் கண்ணுற்றும் ஷெடி முத்துக்குமாரத் தம்பிரான்சுவாமிகள் திருப்போரூர் மான்மியம் வடமொழியிலிருந்ததைத் தமிழில் யாப்பாகச்செய்தளிக்க வேண்டுமெனக்கேட்க, தண்டியலங்காரத்திலே "பெருங்காப்பிய நிலைபேசுங்காலை" எனக்கூறப்பட்ட

விலக்கணங்கள் நிரம்பப்பெற்றதூஉம், சொல், பொருள், தொடை நடை முதலிய நயங்களமையப்பெற்றதூஉம், கந்தக்கடவுள் கல்யாண குணங்கள் மலிந்து கிடப்பதூஉம், சித்திரக்கவிகள் விசித்திரமாயிருப்பதூஉமாகிய ஷெ திருப்போரூர்ப் புராணம்பாடி ஷெ திருப்போரூரிலேயே இவரது ஆசிரியராகியகாஞ்சிபுரம் வித்துவான் சபாபதிமுதலியார் முன்னிலேயில் ஷெ மடாதிபரும் அனேக பிரபுக்களும்கூடியிருந்த சபையில் அரங்கேற்றுவித்தனர். அன்றியும் இவர் நூல் செய்யுந்திறமையன்றி உரைசெய்யுந்திறமை யுண்டென்பதையும் இத் திருத்தணிகையாற்றுப்படை விருத்தியுரையினாலும், சென்னையிலுள்ள கலாரத்நாகரம், ரிப்பன் அச்சுக்கூடம் முதலிய அச்சாபீஸ் தலைவர்களாலும் இன்னும் சிலராலும் அச்சிட்டிருக்கும் ஸ்ரீமத்தாயுமான சுவாமிகள் திருப்பாடற்றிரட்டில் திருவருள் விலாசப்பரசிவ வணக்கமாகிய முதன் மூன்றுபாடல்களின் உரைகளினாலும், திருத்தணிகை இரட்டைச்சொல்ய மகமாலை உரையினாலும், திருத்தணிகையாற்றுப்படை பதவுரை, கந்தரனுபூதி விருத்தியுரை, ஸ்ரீ மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழுரை, ஸ்ரீ கங்காதரேஸ்வரர் இரட்டைச்சொல்யமகமாலை உரைமுதலிய வற்றாலும் காணலாம். இவரது வாக்குவல்லபத்தையும் பிரசங்க சாதுரியத்தையும் வியந்து புகழாதாரில்லை. இவர் செய்யுளியற்றும் விரைவும் யாரேனும் நூதனமாகச் செய்யுளியற்றித் தன்னிடத்துத் திருத்திக் கொடுக்கும்படி கொண்டுவந்து படித்தால், தான் அச்செய்யுளை இரண்டாம் முறை, நெட்டுருப்பண்ணிய பழம்பாடல் ஒப்பித்தல்போலச்சொல்லுவர். அதுமட்டோ? காலம் இடங்கட்குத்தக்க பிரகாரம் நூதனம் நூதனமான யுக்திகள் வேண்டியவாறு அவரது வாயினின்று சனித்துக்கொண்டிருக்குமானல், அவர் பெருமை இத்துணைத்தென்று சொல்லற்பாலதா? அன்றியும் இவர் முருகப்பெருமான் றிருவருளை முற்றும் நிரம்பப்பெற்றவரென்பது அவ்வவ்வமயங்களில் பாடியருளிய அனேகந்தனிப்பாடல்களாலுந் தெற்றென விளங்கப்பெறும். அவைகளிற் சில வருமாறு.

தாம் வைத்துக்கொண்டிருந்த வெள்ளித்தூள் பரணையை
ஒருவர் அபகரித்துக்கொண்டபோது,

அள்ளித்தூள் பணித்தன்பர் வினையனைத்து மொழிக்குமுரு கையா செந்தேன், துள்ளித்தூள் பரிமளங்கூர் பொழிற்றணிகா சலக்குகனே தொல்லைக் கான்மேற், றள்ளித்தூள்பதத்தாலேபெண்ணுக்கு மால்மருகாதமியேன் வைத்த, வெள்ளித்தூள் பரணைவிட்டுப் போனவித மின்னதென்று விளம்பு வாயே.

என்று பாடியதும்,மறுநாள் அவருக்குத் தெரியாமல் கொண்டு வந்து அவர் வீட்டுப் புறக்கடை வீட்டிறப்பில் அப் பரணையைக் களவாடியவர் வைத்துவிட்டதும், பின்னர் தன்னிடத்தில் படித்த ஒருவர் குருவுக்குத் தப்புத்தாளம் போடுவேனென்று கூறியதைக் கேள்வியுற்றபோது,

காளம்போ தாவெழுந்து கைக்கொண்டன் றுட்கொண்ட கரிய கண்டன், வாளம்போ டெதிர்க்குமரு வலர்களரியெனுங் கங்கா தரனூர் வாழும், நீளம்போ டைகள்சூழ்ந்த புரசையினி னிலவு குருவினுக்குத்தப்புத், தாளம்போ டுவெனன்ற சீடனுக்கென் பிரதி செய்யத் தக்கதந்தோ.

என்று கூறினர், பின்னர்த்தமக்கு நீர்ச்சுருக்கு நோய்கண்டபோது,

பார்ச்சுருக்கிக் கவர்ந்த பொற்கண் ணசுரனைமாய்த் தோன்மருகா பழைய சென்ம, வேர்ச்சுருக்கு மாதவர்வாழ் தணிகைவள்ளி தெய்வானை வியக்குங் கொண்கா, கார்ச்சுருக்கி வெனிலேவி ருது கட்டி யாளுமிந்தக் காலந்தன்னில், நீர்ச்சுருக்காம் நோயைவைத் தே னிப்படிநீ வருத்துகின்றாய் நிகழ்த்து வாயே.

என நோய் நீங்கியது. ஓர்காலத்தில் சென்னையில் இரவும் பகலும் பத்துநாள் வரையில் மழை அதிகமாகப் பெய்து வீடு முதலியவைக ளிடிந்து விழுந்து கொண்டிருக்கையில்,

மழையேநீ யின்னுமிந்த வாறாகப் பெய்தா
லழையே யெவர்க்கு மல்லாமல்—பழசான

கட்டடங்க ளெல்லாங் கலகலத்துப் போய்விடுமால்
மட்டடங்கி மேல்வருடம் வா.

என்று பாடியவுடனே மழைநின்றது. அஷ்டாவதானம் சபாபதி முதலியாரவர்கள் கல்விமானாக இருந்ததுடன் இவரது வாசஸ்தலமாகிய புரசைப்பாக்கம் பெரியசாலையில் வடவண்டையில் அவர் வசித்திருந்த அவரது 86-87 எண்களுள்ள கிருகங்களையும், டிெ வாடையில் 89-வது டிெசாலையில் தென்னண்டைவாடையில் 29-30&3( எண்களுள்ள வீடுமனைகளையும், இன்னும் டிெ சாலையிற் கடை வீதியிலும் டிெ புரசையைச்சார்ந்த மேடவாக்கம் முதலிய இடங்களிலும் அவருக்கு இருந்துள்ள வீடுகள் பங்களாக்கள் தோட்டம் கடைகள் முதலியவைகளினாலும், இங்ஙனம் பரமாநந்தன் என்று கையொப்பமிட்டு இஃது புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியாரவர்கள் சமுகத்திற்குக் கொடுப்பது என்று மேல்விலாசமும் எழுதியிருந்த மிகப்பழைய நிருபம் ஒன்று முதலியாரவர்கள் கைப்பெட்டியிலிருந்து கிடைத்ததில்,

## மட்டு விருத்தம்.

கார்நிறமே னிக்கடவுள் பாற்சென் றேயென்
கலியையுரைத் தணிகலையீ யென்னக் கானில்
பார்புகழ்பொற் கலையைமுன மெறிந்தே னென்றான்
பங்கயனொற் கின்றுபா ரதிக்கே யென்றான்
நீர்முடிமேற் கலையொன்றே யென்றா னீச
னீதிவழு வாதவர்சூழ் *தையூர் வாழுஞ்
சீர்பெருகி வளர்சபா பதிபூ பாலா
சித்தம்வைத்து நீயேனு மருள்செய் வாயே.

* டிெ பு-அ-சபாபதி முதலியாரவர்களுக்கு முதலில் சிலகாலம் தையூர் அஷ்டாவதானம் சபாபதி முதலியாரென்று பெயர் வழங்கி வந்ததும் உண்டு.

என்று எழுதிஇருந்த இச்செய்யுளினாலும், ஷெ பு-அ-சபாபதி முதலியாரவர்கள் 1886ஞு ஆகஸ்டுமீ 26உ எழுதிவைத்துள்ள அவர்களது வம்சாவளி முதலியவைகளினாலும் ஷெ முதலியாரவர்கள் விசேஷசெல்வவானாக இருந்தாரென்பதும் சந்தேகமற விளங்குகின்றது. இன்னோர் பூதவுடம்பையொழித்துப்புகழுடம்பு நிறுவித் தமது உபாசனாமூர்த்தியாகிய சுப்பிரமணியப்பெருமான் திருவருளால் 1886ஞு ஆகஸ்டுமீ 28உக்குச்சரியான வியஞு ஆவணி மீ 14உ சனிவாரம் அபரபக்கம் சதுர்த்தசி ஆயிலியம் பரிகயோகம் பத்ரவாகரணம் சிங்கலக்கினம் இத்தியாதி கூடிய சுபதினத்தில் காலை சுமார் ஐந்தரை மணிக்கு கந்தரது கைலாயம் அடைந்தனர்.

1886ஞு ஆகஸ்டுமீ 26-ந்தேதியில் ஷெ பு-அ-சபாபதி முதலியார் அவர்கள் தம் வீட்டில் எழுதிவைத்த வம்சாவளியைக் கொண்டும், பொன்னேரித் தாலுக்காவைச் சார்ந்த விச்சூர் கிராமத்திலிருந்த நயனப்ப முதலியாருடைய குமாரர்களாகிய ஜெகநாத முதலியார் * தாமோதர முதலியார் வெங்கடகிருஷ்ண முதலியார் ஆகிய இம்மூவரில் ஷெ ஜெகநாதமுதலியாருக்கு ஷெ பு-அ-சபாபதி முதலியாரவர்களுடைய தமக்கைமார்களில் சுந்தராம்மாளையும் ஷெ தாமோதரமுதலியாருக்கு முத்தம்மாளையும் கலியாணஞ் செய்யப்பட்டது. ஷெ ஜெகநாத முதலியாருக்கு ஷெ சுந்தரம்மாள் வயிற்றில் அப்பாசாமி முதலியாரென்று ஓர் பிள்ளையும் தணிகைமலை அம்மாள் பத்மாவதி அம்மாள் என இரண்டு குமாரத்திகளும் பிறந்தார்கள். ஷெ பொன்னேரித் தாலுக்காவைச்சார்ந்த அடம்பாக்கம்பேடு என்னுங் கிராமத்திலிருந்த கனகராய முதலியாருக்கு ஷெ பு-அ-சபாபதி முதலியாரவர்களது பெரியதாயாரும் அவரது தாயாராகிய முனியாத்தை அம்மாளுக்குத் தமக்கையாருமாகிய தெய்வயானை அம்மாளை கலியாணஞ் செய்யப்பட்டது. இவர்களுக்கு

* ஷெயாருக்கு விச்சூர் வித்துவான் தாமோதர முதலியாரென்றும் தாமோதரக்கவிராயரென்றும் பெயர்வழங்குதலுமுண்டு.

முத்துகிருஷ்ண முதலியார், தருமராய முதலியார், சின்னசாமி முதலியார் என மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள். இம்மூவரில் மேற்கண்ட தருமராய முதலியாருக்கு முதல் தாரமாகிய வடுவாத்தை அம்மாள் காலமாய்விட்டதும் ௸ பு-அ-சபாபதி முதலியார் தமது தமக்கையாராகிய மேற்கண்ட சுந்தராம்பாளுடைய ஜேஷ்ட குமாரத்தியான மேற்கண்ட தணிகைமலை அம்மாளை மேற்கண்ட தமது பெரியதாயார் தெய்வயானை அம்மாள் குமாரராகிய ௸ தருமராய முதலியாருக்கு இரண்டாந்தாரங் கலியாணஞ்செய்து வைத்தார். ௸ பு-அ-சபாபதி முதலியாரவர்கள் தகப்பனார்காலந் தொடங்கி ௸ பு-அ-சபாபதி முதலியாரவர்கள் குடும்பமும் ௸ தருமராய முதலியாரவர்கள் குடும்பமும் ஏக குடும்பமாக வாழ்ந்துகொண்டிருக் கின்றார்கள். (௸ பு-அ-சபாபதி முதலியாருக்கு ஒக்கப்பிறந்த தமயனாராகிய வெங்கடாசல முதலியாருக்கு முதல் தாரம் காலமாய்விட்டதும், மேற்கண்ட பத்மாவதி அம்மாளை ௸ வெங்கடாசல முதலியாருக்கு இரண்டாந்தாரங் கலியாணஞ் செய்யப்பட்டது) ௸ பு-அ-சபாபதி முதலியார் அவர்கள் பெரிய தாயார் குமாரராகிய ௸ தருமராய முதலியாரவர்களுக்குப்புத்திரராக ௸ பு-அ-சபாபதி முதலியாரவர்களது மூத்த சகோதரியாகிய மேலே கண்ட சுந்தரம்பாளுடைய குமாரத்தியான ௸ தணிகைமலை அம்மாள் வயிற்றி லுதித்தவரும் இந்நூலை அச்சிற்பதித்த வருமாகிய பு-த-குப்புசாமி முதலியாரைக் கொண்டுந் தெரிந்து இச்சரித்திரம் எழுதலாயிற்று.

இங்ஙனம்:

மணவழகு.

# திருத்தணிகை யாற்றுப்படை உரைக்கு உரையாசிரியர் கூறிய

## அவையடக்கம்.

எந்நூற்கு மினிதினுரை யியற்றவல்ல புலவர்பல ரிருப்ப நாணு, தந்நூற்குள் விளைபொருளின் வகைமையுண ராவிழுதையறிந்தேன் போல, விந்நூற்கு விரித்தவுரை கண்டுணர்ந்தோர் நாகரவண் டீர்க் குங்கோடுந், தந்நூற்கு ளெழுத்தாமென் றொருவாற்று னேக்குவ போற்றுங்கொள் வாரால்.

இலக்கணமு மிலக்கியமு மெனப்பலவுண் டவையனைத்து மினிதி னோர்ந்த, புலப்பொருளின் மிகுங்கயிலைப் பரம்பரையாந் துறைசைவரு புனித வாய்மை, நலத்தகைய கச்சியப்ப முனிவனை வில் தணிகையாற் றுப்ப டைக்குச், சொலப்புகுசிற் றுரையை நல்லோர் சினவாரென் வெளிற்றறிவாற் றொகுத்த தாலே.

# முகவுரை.

பொதுவகையால் ஆற்றுப்படையாவது தொல்காப்பியம் புறத்திணையியலுள் "தாவினல்லிசை" என்னுஞ் சூத்திரத்தில் "ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச் சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" என்றதனால் தத்துவ முதலியவனைத்துங் கடந்து நின்ற பரம்பொருளது சார்பினால் ஒருவன் தான் பெற்ற பெரும்பேறாகிய கந்தழியைப் பெறாதானொருவற்குப் பெறுமாறு வழிப்படுத்தலையுடைய தென்னும் பொருளதாம். இச்சூத்திரத்தில் பெருவளமென்றது கந்தழியை. அது மேற்கூறிய இயலில் "கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்" என்ற சூத்திரத்துட் கூறப்பட்டது. கந்தழியென்பது ஒரு பற்றுமின்றித் தத்துவமனைத்துங் கடந்து அருவாய்த் தானே நிற்கும் நிலைமைத்தான பரம்பொருளாம். அதனையடைவித்தற் பொருட்டிந்நூல் இயற்றினவாறென்றுணர்க.

திருத்தணிகையாற்றுப்படை யென்பது திருத்தணிகைக் கடவுளிடத்தே வழிப்படுத்தலை யுடையதென ஆகுபெயரும் உருபும் பயனுந்தொக்க தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித் தொகையுமாகி இந்நூற்குக் காரணப்பெயராய் நின்றது. தணிகாற்றுப்படையென வழங்குதலு முண்டு.

உ

கணபதி துணை.

# திருத்தணிகையாற்றுப்படை

## மூலம்.

விநாயகர் காப்பு.

### நேரிசை வெண்பா.

சீரார் தொடைபுனைந்த செம்பாவை முன்புபோ
லேரார் தணிகை யிளவற்கு—நேராகக்
கூட்டுமால் வேற்றுருவங் கொள்ளாமை யெப்பொருளுங்
காட்டுமா லங்கைக் களிறு.

நூல்.

பொன்மலைத்திருவிற் பன்னகநெடுநாண்
மாயப்பகழி தாயக்குரிசின்
முரணமையிருகாற் றிரண்மறைப்புரவி
யலர்மறைவாழ்க்கை வலவத்தேரும்
வழங்குதற்கமையா வண்மையினிசைக்கும்
பெருந்தகு பாடற்றிருந்திசைப்புலவ
ரறன்கடைக்ககலாப் பிறங்குதம்முளத்திற்
சாலாக்கல்வி மாலார்க்ககலா
வரன்மாண்டமைந்த வுரன்மாண்பலகையிற்
றண்டாவிருப்பி னெண்டோண் முதல்வனோ
டானாதுபயிலிய வருமறைக்கேள்வி
மாயிருந்தமிழ்க்கடல் வடமொழிக்கடலென்
றாயிருகடலு மாற்றலிற்கடையா
வையந்திரிபெனு மழல்விடம்படாது

# திருத்தணிகையாற்றுப்படை மூலம்.

வெய்யசெம்பொருளெனு மிளிர்கிஞ்சுகைத்திர
ளாராக்காதலி னாதுகைப்பவு
மூன்றுவிரலமுந்தா துடறசைதிணிந்து
கான்றமேந்தெரியற் கருங்குழன்மகளிர்க்
கணங்குளநீஇ யாருயிர்கவர்க்கும்
வளங்கவின்கொழிக்கும் விளங்குசீரினையும்
பல்வகைத்தொழிலும் பண்புறநவின்று
சிந்தைவழிச்செலு மைந்துநிலைபெறீஇய
ரளவினைத்திறத்தி னயராயாக்கையு
மளகைக்கோமா னுளமழுக்கறப்ப
நிலந்தினக்கிடந்த நெடுநிதிச்செல்வமு
நீடின்றிரியு நிலைமைநாடி
யேற்போரங்கைக் கொடைக்கடனிறுத்து
நோற்போர்நோற்கும் நோன்மைசாலறனெனு
முறுதியாக்க மெய்யெனக்கழலவும்
வணைத்திரள்புரள்விற் றிணைத்தெழுந்திணைக்கணம்
விலங்கின்வழங்கும் விழுக்கனல்செறித்து
மொளிறுவேலுழுவத் துருத்தெழுந்தடர்த்துக்
குளிறுவார்முரசும் பிளிறுமால்யானையும்
வைத்தபல்படையும் வழாதுகைக்கொண்டு
பராபவத்தெவ்வர் வரிசையினிறுக்கும்
திறைகெழுரிமை முறைநேர்நடாவியும்
தத்தந்தொழிலிற் றலைநின்றுவளர்க்கும்
பொருளெனும் வெறுக்கை போற்றுதநழுவவும்
மிஞிறுந்தேனும் வெறிகவர்தும்பியும்
கஞலிப்பட்குரல் கஞற்றுவசுழலும்
இருடிஞ்சுமலர்பொழின் மருள்சில்லோதிப்
பூவார்சோலைப் புறத்தகப்படுத்து

மேவாத்தடைஇய விதுக்குறைகடுக்கும்
திவளொளிமாண்டகு வவுநுதல்வாணுதல்
தீங்கதிரமிழ்த்த திங்கட்பிளவி
னீங்குகார்க்கறையு நிலாத்தவழ்வெண்மையும்
விராயுருக்கொண்டென மிளிர்மதர்மழைக்கட்
செங்குமுதத்துச் சிறுமதிகிடந்தெனச்
செவ்வாயகத்த செயிர்தீர்வெண்பல்
விலங்குபாய்கதிர்க்குழை வீழ்ந்துசெகிற்றயல்வர
வள்ளையிறெழூக்கிய வள்ளெழிற்செஞ்செவி
செவ்வாய்கவுட்டுணைச் சேல்விழிநெற்றி
யில்வாயுறப்பா னின்சுவைபமிழ்த
வுறுகொடையாற்றி வறிதுகொடைகாட்டும்
வளைநிதிதன்னைக் குடுமிகைக்கொண்டம்
வளைமேல்கொண்டு வயங்கொளிதோற்றும்
பதுமமாநிதி யிதுவெனக்கவன்று
தாவாவுறுவர் மேவாவுள்ளமு
மோவப்படமென வுஞற்றுறுதிருமுகப்
பருவாய்ப்பொற்குழை மகரமீனுஅன்
றைதுமீக்கிடத்தலி னைங்கணைக்கிழவோன்
வெய்துதன்றுணை விளக்கியவுயர்த்த
வணங்குதவழ்கொடியினிணங்குபணைவேய்த்தோட்
காம்புபுடையடுத்த கதிர்மணிக்குன்றின்
தோள்புடையடுத்த சுடர்ப்பூட்கொங்கை
குவிமுலைத்துணைகொள் சவிமணிமார்பிற்
றத்தமதேணி கடவாதுதணிய
நல்லுருநின்றுணர்த்துந் தள்ளாக்குறியி
னணிவயிற்றெழுகிய மணிமயிர்வல்லி
நெடுகுபயிரொழுக்கு நெடுவழிப்படர்ந்து

கடுமுலைக்கோட்டுக் களிறுபடவெடுத்த
படுகுழியனைய பயம்படுகொப்பூழ்
நடுநின்றுவாழ்வோர் நலத்தொடுமுரண
நடுநின்றுதேய்ந்த விடுகுகொடிமருங்குல்
வையகமுயிர்த்தோன் மதிபுனைந்தியற்றலிற்
கைபுனைந்தியற்றாங் கதிர்மணித்திண்டேர்
கடாதருக்கொண்டோடுந் தடாதபோல்குற்
கீழ்மேலாகக் கிளர்ந்தெழினத்தகு
வாழையொடுபொரூஉம் வார்ந்தசெறிகுறங்கின்
வெற்றுருதாமரை மேவந்தொழில்செய
வீற்றிருந்தருளும் விரைமலரேய்க்கு
மலத்தகமலர்ந்த நலத்தகுசீரடி.
மயிலியன்மருளு மிபன்மடமாதரைச்
சிலம்பிழைவே செயல்குறியிவற்றுன்
நாலவகைப்பேதமு மாலறத்தெரிந்து
மருந்துமந்திரத்துந் திருந்தாவிழைவேற்றித்
தேயம்பயிற்சி சேட்டையியல்பே
யின்பத்துறையே யிருவகைத்தொழிலே
யிங்கிதவகையே யிவைநனிநாடி.
யிருவகைப்பொழுதொடு மேற்பமருவிய
மூன்று காலமு மூன்றுவேகமு
மொப்பக்கலவி யுளுற்றுபேரின்ப
வவாவுளம்பொதிந்துகொண் டழற்றுவெம்படர்
தவாதுபிறைபோலத் தணிவின்றிவளர [நோய்
வுவாமதிபோல வுருவேதபவும்
கடவுட்பொங்கரும் தடமருப்பாவும்
சிந்தாமணியு நந்தாநிதிகளும்
கலன்முதலன வளம்பலகொழிப்ப

பல்வகைக்கணமும் பணிந்தெழுந்தேத்த
தெவ்வுத்தானவ ரவ்வித்தேங்க
விரிகதிர்ப்பிழம்பு மரிமான்றவிசிற்
களிகூர்நெஞ்சாற் காவல்வைகு
மொளிகூர்மகவா னுறுபதமாதி
யெளிதினுய்த்தளிக்குந் தெளிவினைப்போலாது
பார்முதிர் புணரிப் பாயற்கடவுள்
வார்மதுப்பொகுட்டு மறைமலர்ப்புத்தேள்
என்றிவர்தமக்கு மெய்தற்கரிய
சரியைகிரியை யோகத்தவநிலைப்
பெயர்பொச்சாப்பப் பிறக்கணித்தகவு
மோனநாடக முனாற்றிய திருவருள்
ஞானநாடக நவிலியமாறனா
மானாமலப்பகை நோனாதுகழலத்
தானானந்தத் தனியுயிர்மடங்கக்
கட்காண்குருமுதற் கடவுளாகி
உயிரோயவத்தை யுணர்த்துந்தன்மை
யருளினியல்பே யாங்கதன்பயனே
பெரும்பெயர்த்திறமே பெற்றவர்முறையென்
றனைவகையேழு மிறப்பத்தெரிப்பத்
தாழாதுகேட்டு வீழாதுசிந்தித்
தங்கைக்கொண்ட வமிழ்தெனத்தெளிந்து
பொங்குபேரின்பம் புணராதுபுணரு
நிட்டைகூட நிலையதுநீங்கவும்
பஃறிறப்பகைஞர் படையொடுநேர்ந்தென
வெஃறிறங்காட்டாது வீற்றுவீற்றுடற்றும்
பிணிக்கோட்பட்டுப் பேதுறுமனத்தான்
முந்தையோரீட்டு முழுநிதிச் செல்வமும்

பொய்ம்மையாளர் புகழெனத்தேய
நோய்ப்பகையாளர்க்கு நொடிந்தென்சிதரிற்
பல்வகைமருந்துக்குப் பகர்விலைதொலைச்சி
யதுவெனவெறுவி யதன்றுமற்றிதுவென
முன்னைநாண்மருந்தை முறைமுறையிகழாப்
பின்னைநாண்மருந்தைப் பெட்டுவாய்மடுத்துப்
பண்டைநோய்மேலும் பருகுபன்மருந்தான்
மண்டுநோய்வேறு மரீஇக்கிளர்ந்துருப்ப
வுழைத்தவெம்மொழிவழி யொழிகிலையல்லைகொல்
பெருத்துநோய்தெறுமென மருத்துவனொழியத்
தெய்வத்திறத்தாற் றீர்வுகாண்பாமென
வுள்ளூர்வயின்வயிற் றெள்ளிதினேங்கும்
புரிமுறுக்கவிழ்க்கும் பூம்புனற்றீர்த்தமும்
பல்வகைத்தெய்வப் பசும்பொற்கோட்டமும்
படிந்தும்பணிந்தும் பயன்காணாமை
பணியயற்புறநகர் மணிகெழுகோட்டமும்
விரதநியதிப் பரவுகடனுதிப்
பல்வேறுதொழிலொடு படர்ந்துபணிந்தேத்தியுங்
கவலைநெஞ்சங் கையறுபிணையச்
சேட்சென்றோரா அல் செய்தெனவலித்து
மிக்கநோய்க்கிரங்கு மொக்கல்புறந்தழுவ
வறுமைக்கவற்சியு மிறுகுறப்பிணிப்ப
வில்லுந்தமரு மிசைபயினுடு
மென்மெலக்கழீஇ விரிகதிர்ப்படையா
லிருள்கால்சீய்க்கு மெழுபரித்தேரோன்
கடுஞ்சினந்திருகிய கொடுமைகூரமயத்து
முளிமுதன்முருக்கிய முழங்கழல்போழ்ந்து
வளியுலாய்ப்புறத்தும் வழங்குநர்த்தெறூஉம்

மேவாத்தடைஇய விதுக்குறைகடிக்கும்
திவளொளிமாண்டகு வவுநுதல்வாணுதல்
தீங்கதிரமிழ்த்த திங்கட்பிளவி
னீங்குகார்க்கறையு நிலாத்தவழ்வெண்மையும்
விராயுருக்கொண்டென மிளிர்மதர்மழைக்கட்
செங்குமுதத்துச் சிறுமதிகிடந்தெனச்
செவ்வாயகத்த செயிர்தீர்வெண்பல்
விலங்குபாய்கதிர்க்குழை வீழ்ந்துசெகிற்றுயல்வர
வள்ளையிறொழுக்கிய வள்ளுழிற்செஞ்செவி
செவ்வாய்கவுட்டுணைச் சேல்விழிநெற்றி
யில்வாயுறப்பா னின்சுவையமிழ்த
வுறுகொடையாற்றி வறிதுகொடைகாட்டும்
வளைநிதிதன்னைக் குடுமிகைக்கொண்டும்
வளைமேல்கொண்டு வயங்கொளிதோற்றும்
பதுமமாநிதி யிதுவெனக்கவன்று
தாவாவுறுவர் மேவாவுள்ளமு
மோவப்படமென வுஞற்றுறு திருமுகப்
பருவாய்ப்பொற்குழை மகரமீனுமுன்
றைதுமீக்கிடத்தலி னங்கணைக்கிழவோன்
வெய்துதன்றுணை விளக்கியவுயர்த்த
வணங்குதவழ்கொடியினிணங்குபணைவேய்த்தோட்
காம்புபுடையடுத்த கதிர்மணிக்குன்றின்
தோள்புடையடுத்த சுடர்ப்பூட்கொங்கை
குவிமுலைத்துணைகொள் சவிமணிமார்பிற்
றத்தமதேணி கடவாதுதணிய
நல்குறுநின்றுணர்த்துந் தள்ளாக்குறியி
னணிவயிற்றொழுகிய மணிமயிர்வல்லி
நெடுகுபயிரொழுக்கு நெடுவழிப்படர்ந்து

முயலகனாதி மொய்ப்பிணியுழவரும்
பாப்புக்கோளாதிப் பலவகைக்கடிஞரும்
பேய்கோட்படுநரும் பித்துமீக்கூர்நரு
முறைப்புக்குறைநரு மொண்குணமிழநரு
மின்னபஃறிறத் தெனவருமன்றிக்
கல்விவேட்டவருங் கான்முளைவீழ்நருஞ்
செல்வம்வீழ்நருந் தேயநாடுநரு
மலர்முலைமடவார் கலவிகாமுறுநரு
மிரண்டறுகலப்பி னின்பநச்சுநரு
மினையபல்வேறு நினைவினரெவரும்
வாட்டுவதணப்பவும் வேட்டனமணப்பவு
மேற்கொண்டெழுந்து மேனாணோர்ந்த
பொற்கிழித்திரளும் பூந்துகின்முடையும்
மணிப்பூட்பேழையும் வார்தருகவரியும்
பைம்பொற்கவிகையுஞ் செம்பொற்சிவிகையு
மூர்தியுங்கொடியும் வார்விசிமுரசுஞ்
சூட்டுவாரணமுந் தோகையமயிலுந்
தத்தமக்கியன்ற தழீஇனர்போது
மோசைதிக்கதிர்க்கு மாசனப்பெருக்கங்
காண்டொறுங்காண்டொறு மீண்டியகளியே
னுடங்குசென்றிறப்பா னொருபட்டெழலுந்
துன்னியவிழுமநோய் தன்னநீங்க
வுறுதுயர்யாக்கை சிறிதுவலியெய்த
வொய்யெனக்கிளர்ந்த வுவகைநெஞ்சத்துப்
படர்பேரூக்கம் பிடர்பிடித்துந்த
வெழுந்தனனிம்மென வேகுதனொடுங்கி
யடிபெயர்த்தோறு மனார்ப்பிணிநழுவ

வுவரிநீரிற் றவவெழுமகிழ்வா
லவன்மிசைபாடாஅ வனைத்துநெறியாகச்
சென்றனனடுத்து மன்றனகர் நுழைதலும்
வெருவுநோயிருகூற் றுருகூறாவிலங்கக்
காட்சியார்வங் கைமிகந்தீர்த்தலின்
நறுமணங்கமழு நந்திநதிக்குடையா
தெழுமுனிவரர்த மெழுசுனையாடா
தலைமலைப்பகைஞ னருட்கயம்படியாது
நாகவண்சுனை நன்புனறோயாது
விண்டுதீர்த்த மேவரக்குளியா
தலரவணிருஞ்சுனை யழிபுனன்முழுகா
தெத்துயர்த்திரளு மத்தினத்தகற்றுஞ்
சரவணப்பொய்கைத் தடம்புனற்றிளைந்து
மென்மெலக்குன்ற மீமிசையிவர்ந்து
காலைநண்பகன் மாலைப்போதும்
வைகல்வைகன் மலர்மூன் றுதெரிக்கும்
நீலப்பைஞ்சுனை நேர்கண்டுதொழுது
புரண்டனர்சூழும் பொற்பினர்மிடைதலி
னடியிடப்படாஅ வாரிடைவீதி
யொதுங்குபுபைப்பைய வொருமுறைசூழ்ந்து
தூவுமெண்ணிலத்துத் தோயாதுவெறுத்த
தேவர்கள்குழுவுந் தேயத்தொழுதியுந்
தடைஇயவாய றடையாதுநுழைந்தாங்
கொருவர்மெய்மணிப்பூ ணொருவர்மெய்வடிச்செய
நெருங்கிச்சென்று நித்திலவாணகை
வள்ளிநாயகி மணத்தினைமுடித்த
கள்ளவேழக் கடவுளைப்பணியா
வீரரொன்பதின்மர் வார்கழறாழ்ந்துமற்

றாவயின் வதியு மமரரைத் தொழுது
பூதப்பகுப்பும் பூதகாரணமு
மிந்தியக்கூட்ட மிரண்டுமுக்குணமு
நந்துமாங்காரமு நலத்தகுகாரணமு
மிறுவாய்மாயை யெழுவாயெழுஞ்
சுற்றமென்னத் தோன்றியவைந்தும்
விராய்நின் றியக்கி மராதுநின் றொளிரு
மாராவின்ப வருணிலையம்ம
தீராமலப்பிணி தீர்த்தருள்கொழிப்ப
வருட்டிருவுருவுகொண் டவிர்மணித்தவிசின்
ஞானசத்தியுங் கிரியாசத்தியும்
வானவர்கோமான் வளம்பயின்மகளுங்
கானவர்நலங்கூர் கன்னியுமென்ன
விரண்டுபாலு மிருந்தனர்களிப்பக்
கண்டமெய்யடியர் கலவினர்போற்றக்
காணுவண்ணவர் கலவாதேத்தக்
கட்கடையொழுகுங் கருணைநோக்கமொ
டினிதுவீற்றிருக்கு மெழினோர்காண்டலு
மெஞ்சுநோய்துவர விரியல்போக
விஞ்சுநாற்பொருளு மேவந்துதுவன்ற
வாற்றாக்கடிந்துய ரருநரகுழப்பவர்
நோற்றமுன் னூழ்நனி நூக்கலுநொடிப்பி
னுயிடைநின்று மாயிருந்துறக்கம்
புக்குழிப்பொலிவித் தொக்கதோற்றத்து
விம்மிதமகிழ்ச்சி மெய்தவவீக்க
வொருகதிவிட்டுமற் றொருகதியடைந்தவர்
மயங்கறிவென்ன வுயங்குமுன் னுயங்க

லெய்யோனாகி யிறுமாப்பெய்தி
செய்முறைதெரியாது திருமுன்னிற்ப
விருமைப்பயனு மெளிதினுற்றளிக்கும்
பூதியுந்திருவுருப் பூச்சுநன்களித்திட்
டென்னைத்தன்வச மாக்கியவுலகை
யென்வசமாக்கி யென்றுமோரியல்பி
னின்றதன்னிலையி னீங்காதிருத்தி
விடாதுவிட்டருள மெய்யருண்மேற்கொண்
டொழியாதொழிந்து வழிவருகின்றன
னத்தகுபெருமா னருள்விளையாடலைச்
சற்றிதுகேண்மதி தவமேம்படுந
விச்சொன்றின்றி விளைவுமிக்காக்கியும்
விச்சுமிக்கிருப்ப விளைவுமுழுதொழித்தும்
மொளிதலைவளர்ப்ப வொளிகளைத்தணித்து
மழுக்கினைக்கழுவ வழுக்கினையேற்றியு
முறுந்தொழிலாளர்க் குறுதுசேணகன்றும்
வறுந்தொழிலாளர்க் குவந்துடன்கலந்தும்
விதித்தநல்விதிகளை விலக்கெனவுவர்த்தும்
விலக்கினைவிதியென மேதகநயந்து
மித்தகுதொழின்மை நித்தலுமியற்றிப்
பொற்றபேரின்பருள் பெற்றியனஃதான்
றிருமுதுகுரவ ரெழுவாய்ச்சுற்றமொடு
துயரிலங்குலகந் தோற்றுதற்பொருட்டுத்
தந்தையென்ன வைந்துமுகனாகியு
மன்னையென்ன மனோன்மணியாகியும்
முன்முறைதந்தையர் தாயரென்ன
நாதஞ்சிவமென நலத்தகுவிந்து
மேதகுசத்தி வேறுவேறாகியும்

பின்முறை தந்தையர் தாயரென்ன
மகேசனுருத்திரன் மகேசையுமையாகியுந்
தமையனென்னத் தந்திமுகனாகியுந்
தனயனென்னத் தாமரைமருட்டு
மூவிருமுகமு முன்னான்குகரமு
மருவிவீற்றிருக்கு மொருதானாகியுங்
கடப்படுமிரண்டு கைகோளியங்க
நானவார்குழ னகையிழையானையைக்
கானவரரும்பெறற் காமருமாதினைக்
கற்பினிற்களவினிற் பொற்புறமணந்தும்
பொருட்டுறைமுழுதும் புரையின்றிநடப்ப
வண்டகோடிகளு மரைக்கணத்தலைவயின்
வறிதுநகைதோற்றி யிறைவதுபுரியு
மெறுழ்வலியாற்ற லெய்யான்போல
மந்திரந்தூது செலவிகன்மற்று
மாற்றிவெஞ்சூர்வலி காற்றியுலகோம்பியு
மெல்லாமறிந்தறி விக்குமவ்வியல்பைக்
கண்கூடாகக் காட்டுவனதாஅன்று
மூவகையுருவாய் மூவுலகுயிர்த்து
மூவகையுருவு முயங்காப்பரம்பொருள்
பந்தம்வீடு பல்லுயிர்க்கமைத்தும்
பந்தம்வீடு படாதபெருந்தகை
யாருயிர்க்குயிரா யமைந்தனநடாவியு
மாருயிர்காட்சிக் கணுகாவருந்திறற்
றுணையின்று தற்காண்டனிமுத
லளிகளினளியா வளிகளுஉங் களிய
னொளிகளினொளியா வொளிகளுஉங்கொளியன்

வெளிகளின்வெளியா வெளிகளுஉங்கு வெளிய
னளவினினளவா வளவினூஉங் களவ
னின்றொருவனை முன்னுபுசென்றவன்
பூங்கழற்சேவடி போற்றுதியாயின்
பேரருளுறத்த பேதுறு நோயுங்
காரணநோயுங் கையிகந்திரியக்
கடைக்கணித்தருளிக் கனையிறுற் பொருளுங்
கொடைக்கடனீயிர் குறித்தவளவையி
னெண்மடங்காற்றி யென்றுந்தீரா
வகம்படித்தொழின்மையி னழுத்துவனன்றே
யாடகப்பசும்பொற் பாடகச்சீறடி
நாடகமகளிர் நவற்றியவாடன்
சிலம்புகிண்கிணி தீங்குழன்முழுவ
முரசந்தூரி முழங்கொலியானும்
விண்டலமுரிஞும் வியன்மணிப்புரிசைக்
கொண்டல்கண்படுக்குங் கோபுரநிரைக
ளாடுகொடிசுமந்த மாடநெடுமாளிகை
யின்னனபிறவு மன்னுதலானு
மொலிதிரைக்கடலு மோங்குபல்வரையு
முடங்குதொக்கண்மீ யொண்டுறையாடி
யிருபகுப்பினவா யிருகரைமருங்கும்
நோற்றனவதியும் பேற்றினைத்தெரிக்கு
மும்மையுமளிக்கு மூவாமுழுமுத
லைம்முகனாகி யமர்ந்தவீரட்டமு
மறுமுகனாகி யமர்ந்தகீழ்க்கோட்டமும்
பொன்னுமணியும் புதுமலர்க்குவையும்
திரைக்கையிற்றாஉய்த் திளைத்தெழுந்தொழுகு
நந்தியாற்று நறும்புனன்மடுக்குங்

குரவகுகதிர்ச்சாலியுங் கொழுந்தீங்கரும்புங்
குலைப்பூங்கதலியுங் கோட்டெங்கினமுங்
கோள்கண்மீப்பரிக்கும் பாளைக்கமுகும்
வயின்வயிற்பொதுளி வளம்பலவுறந்த
முருகலர்ப்பண்ணை யொருபுறஞ்சூழ
வவரைதுவரை யரிற்கதிர்வரகு
சாமையிறுங்கு தகைதந்தனவிளையுங்
கொல்லைமுல்லை கோழிணர்ப்பூவையும்
பந்தர்மாதவி யுந்தியகோங்கும்
பைங்காற்கொன்றை பசும்பொற்சுண்ணமும்
வளியுளர்ந்தெடுப்ப மறுபுலவரைப்பும்
போர்த்தனகமழ்ந்து பொறிவண்டழைக்கு
மரும்புலப்புறவ மொருபுறஞ்சூழச்
செருந்திமந்தாரங் குருந்துவழைபாடலம்
கோங்குசண்பகம் வேங்கைமகிழ்சந்தனம்
குங்குமமரவங் கோழகிற்கப்புர
மில்லமாவிரை வில்லம்பாங்கர்
பிடர்ஞெமைநமையாண் டடர்வரையெகின்சே
வசோகந்தேக்கே யாத்திசூத
மருதுபோதி வஞ்சிகாஞ்சி
ஞாழல்புன்னை நரந்தைமாதுளை
பொகுட்டையிருப்பை பூஞ்சினைச்சாள
முன்னம்பலாசு முருக்கைவருக்கை
சோதிமாமரந் தொத்தினநாக
மன்றியனைத்துந் துன்றியகறிக்கொடி
மல்லிகைமுசுண்டை மற்றும்பரித்து
மணங்கமழ்காமர் வல்லியொன்றோ
யிணங்குபூத்தயர்ந்த ணிகழ்ச்சியைநாடி

வசைபடத் தத்த மிசைவிளக்குவபோற்
பொறிவரிச்சுரும்பும் வெறிநுகர்தேனுந்
தோகைமாமயிலுந் தொடிக்கட்பூவையுங்
கிள்ளையுங்குயிலுந் தெள்ளுகுரற்காட்டி
வண்டளிர்ப்பொதும்பர் மருங்குகால்வளைஇ
றுண்டளிநறுந்தே னொலாதுதிவளுந்
துதைமலர்ச்சினைய தருவைந்துடுத்த
பொன்னகர்வறுமையை முன்னிநக்காங்கு
வேரனரன்றுக்க வெண்மணிக்குப்பையும்
பிறழ்பற்பேழ்வாய்ப் பின்முன்பார்வைச்
சிங்கவல்லேறு பொங்குசினந்திருகி
யெழுந்துதாய்த்துமிப்ப விருங்கடாயானை
மத்தகம்பிளந்து மாயிருங்குன்றத்து
வெண்புனலருவி வீழ்வனபோலச்
சலசலவுக்க தாளக்குவாலு
நிலவுராய்த்தவழ நெமிர்ந்தனமிளிருங்
கவான்மலைப்புனத்துக்கதிர்த்தினைகாக்கு
முவாமதிமுகத்தா ரோச்சினர்விடுக்குங்
கவணையின்மணியோ கங்குறகானவர்
விலங்கினந்துரக்கு மிலங்குகூர்ங்கணையோ
வலைத்தரவிசும்பி னிலைத்தருகலன்கள்
பல்வகைமின்கொடி யொல்கிவீழ்ந்தென்ன
வெல்வளைநிரையும் பில்குகதிர்மணிப்பூங்
காழுந்தாமமுங் கவினத்ததைஇய
மண்டபமேடை மாடமேனிலைக
ளியங்காநிலைத்தே ரியங்குமணிப்பஃறேர்
விமானவூர்திகளும் வேற்றுமைதோற்று
வளம்பலதழீஇயெம் மருங்குமெய்யடியா

ரிடுமெகிற் றாபமு மெக்கரிற்குவைஇய
படரொளியூட்ட பளிதக்குப்பை
கான்றதீம்புகையுங் கழுமின்கெழுமி
யிமையார்நாட்ட மிமைப்பனசெய்ய
மல்லலாவண மறுகும்வீதியு
நாடொறுமெழிலா னவநவமாகி
யிமைக்குநர்நாட்ட மிமையாமைசெய்ய
மண்டலம்விண்டல மாற்றியதென்ன
விறும்பூதுபயவா வேர்குலாய்க்கிடந்த
திசைகாப்பாள ரிசைநிறைதேவ
ரலரவனெடுமா லாதியகடவுளர்
முழுதுக்குறையன்பின் முறைமுறைபழிச்சச்
சாறுநாளல்லது வேறுநாளறியா
துலகமுழு தோம்புபல்சிறப்பி
னிலைபெறுதணிகை மலைகிழவோனே.

**திருத்தணிகை யாற்றுப்படைமூலம்**

முற்றிற்று.

---

முருகன் றுணை.

---

முருகன் துணை.

# திருத்தணிகையாற்றுப்படை

## விருத்தியுரை.

### விநாயகர்காப்பு.

நேரிசைவெண்பா.

சீரார் தொடைபுனைந்த செம்பாவை முன்புபோ
லேரார் தணிகை யிளவற்கு—நேராகக்
கூட்டுமால் வேற்றுருவங் கொள்ளாமை யெப்பொருளுங்
காட்டுமா லைங்கைக் களிறு.

இதுகடவுள் வணக்கம்—என்பது இந்நூலிடையூறின்றிமுடிவு கூடற்பொருட்டு நூலாசிரியர் தாமெடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக்கடவுளாகிய மூத்தபிள்ளையாரை வணக்கஞ்செய்தல்.

நூல்கூறுவார் முதற்கண் மங்கல மொழிவகுத்துக் கூறவேண்டுதலால், மங்கலமும், எழுத்துத்தானமும், கணமும் நன்கியைந்த "சீரார்" என்றும், இந்நூற்பொருட்பயன் ஈண்டுப்பயப்பதாக நிற்றலானும், உலகியல் நடத்தற்கேதுவாகப் பிள்ளையார் வள்ளிநாச்சியாரைக் குறிச்சியின்கண் வதுவைவேய்ந்த கோலத்தொடு அத்திருமலைக்கண் வந்து வீற்றிருந்தமையானும் தொடைபுனைந்த செம்பாவையென்றும் கூறினர்.

திருத்தணிகையென்னும் அடையடுத்த பெயர்க்குச் சீர் என்னும் மங்கலச்சொல் பாலதானமும், சீரார் என்பது நேர்நேர்ஆகலின் உயிர்க்கணமும், தணிகையென்னும் அடையடுக்காத பெயர்க்கென்னின் குமாரதானமு மியைந்து நிற்றல் காண்க.

இத்திருமலைக்குச் செருத்தணியென ஒரு பெயருமுள்ளது. அது முன்னர்ச்சூரபன்மன் செய்த போர்த்தொழிலினும், பின்னர்

MAHAMAHOPADHYAYA
U. SWAMINATHA IYER LIBRARY

வேடர்கள் செய்தபோர்த்தொழிலினும் பிள்ளையார் தணிந்து வந்து வீற்றிருந்த காரணத்தாலாயது. அதனைக்காந்தம் வள்ளியம்மை திருமணப்படலத்தில் "செங்கண் வெய்ய சூர்ச்செருத் தொழி லினுஞ் சிலவேடர், தங்களிற் செயுஞ்செருத் தொழிலினுந்தணிந் திட்டே,யிங்கு வந்தியாமிருத்தலாற் செருத்தணியென்றோர்,மங்கல ந்தரு பெயரினைப் பெற்றதிவ் வரையே" என்னுஞ் செய்யுளிற் காண்க.

(இதன்பொருள்)ஐங்கைக்களிறு-ஐந்துகரமுள்ளயானை, முன்பு போல் - முன்னை நாட்கண் புணர்த்தினவாறுபோல, வேற்றுருவங் கொள்ளாமை-இற்றை நாட்கண் வேற்றுருவங்கொள்ளாமல், ஏரார் தணிகை இளவற்கு - ஏற்றமமைந்த திருத்தணிகைக்கண் இளைய பிள்ளையார்க்கு, சீரார்தொடைபுனைந்த செம்பாவை-எழுத்தசைகளா லாய சீரும், அச்சீர்தளையடிகளடுத்த தொடையுமாகிய வுறுப்புக்க ளால் தொடுக்கப்பட்ட செந்தமிழ்ச் செய்யுளை, நேராகக்கூட்டும்- நேர்மைப்பட வொப்புவித்து, எப்பொருளும்-(ஆற்றுப்படை யென் பதற்கேற்ற) எவ்வகைப்பட்ட பொருட்செறிவையும், காட்டும் - தெரிவித்தருளும்என்க. ஐங்கைக்களிறு முன்புபோல வேற்றுருவங் கொள்ளாமை தணிகையிளவற்குச் செம்பாவை நேராகக்கூட்டியெப் பொருளுங்காட்டுமென முடிக்க. இளவற்குச் செம்பாவையென்பது விளக்கிற்கு நெய் என்பதுபோ னின்றது. முன்புபோல் என்றதற் கேற்பஇற்றைநாளென்பது வருவிக்கப்பட்டது. ஏர்புஎன்பதுகுறை ந்து நின்றது-கூட்டும் என்பது வினையெச்சமுற்று. ஆல் இரண்டும் அசைநிலைகள்.

[ஐங்கைக்களிறு முன்புபோல்வேற்றுருவங்கொள்ளாமைக்கூட் டுமென்றதால், செம்பாவைபோலும் வள்ளிநாச்சியாரை. முன் இரு கோடும் ஒருகரமுமுள்ள வனவேழவடிவாய்த் தோன்றி, இளவற் குக் கூட்டினவாறுபோ லன்றி, இற்றை நாட்கண் ஒரு கோடும் ஐங்கரமுமுள்ள வியற்கையுருவாய்த் தோன்றி நின்று செந்தமிழ்ப் பாவைக்கூட்டு மென்றவாறாயிற்று. நேராக என்றதால் முன் நாச் சியாரை வழித்தடை செய்து அச்சுறுத்திப் பின் புணர்த்தினவாறு

போலன்றி, இற்றைநாட்கண் அடியேனை அஞ்சல் செய்து இடையூறு நீக்கிச் செம்பாவை நேர்ச்சியுறுத்து மென்றதாயிற்று. இரட்டுறமொழிதலால் சீரார் தொடைபுனைந்த செம்பாவை யென்றதனை மென்மைமிக்க மணமாலை புனைந்த செம்பொற்பாவையென நாச்சியாருக்குரைக்க. செம்பாவை செம்பொற்பாவைபோல்வார் என விரிதலாலுவமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை நிலை. இதில் பாவையையென இரண்டனுருபு விரிக்க. செய்யுட் கெனின் அவ்வுருபுவிரிந்தே நின்றதாகலான். இவ்வகைத் தொடர்களை "வேற்றுமை யுருபுகளல்லாதனவும் வேற்றுமையுருபுகள்போல் வெளிப்படுமே" என்று கூறின நட்பவிதியாலுணர்க.)

## நூல்.

பொன்மலை என்பது முதல் ஆரா துகைப்பவுமென்னுமளவும் ஒரு முடிபு.

பொன்மலைத்திருவில் பன்னக நெடுநாண் மாயப்பகழித்தாயக் குரிசில் என்பது—மாமேருவாகிய பெருமையுள்ள வில்லிற்கும், சேடனாகிய நெடியநாணிக்கும், மாயோனாகிய அம்பிற்கும் உரிமையையுடைய இறைவனது,

(தாயக்குரிசில் என்றதால் ஏனையோர்க்கு அவை அவ்வாறு தற்குரிமையுடையவல்ல வென்பதாயிற்று.)

முரணமை இருகால் திரள்மறைப்புரவி அலர்மறை வாழ்க்கை வலவத்தேரும் — திங்களும் ஞாயிறுமாகிய சக்கரங்களையும், நால் வேதமாகிய பரிகளையும், அலர்ந்ததாமரைப் பூவின்கண் வாழ்தலுற்ற பிரமனாகிய பாகனையும் உடைத்தாகிய தேரும்,

(குரிசிலதுதேரும் எனக்கூட்டுக. முரண் என்றது-வெண்மை செம்மை இரவினும் பகலினுமாறி வருதல்பற்றி. திரள் என்றது-பலவாதல் பற்றி. அலர்ந்ததாமரை-திருமாலுந்தித்தாமரை மலர். உம்மை சிறப்பும்மை, முப்புரங்களையும் அழித்தற்கு உடம்படுதியென இந்திரன்முதலோர் வேண்டலும், இறைவனதற் கொப்பினது தவறு

ருகி அவற்றின்மேல்சென்றதொன்று, பொன்மலையும், பன்னகமும், மாயனும், சத்தமுருத்திரிந்து, முறையே வில்லும் நாணும் பகழியு மென்றாகியும், அவைதமக்கேற்ற போர்புரிதற்கு அமையாதனவாய் நின்றன வெனினும், தத்தமியற்கைத்தொழிலான் உலகைநிலை பெறுத்தலும், பூமியைச்சுமந்து தாங்கலும், உலகைக்காத்தலும் என்னு மத் தொழிற்கண் அமைவனவாய் நின்றமையின், இந்நூல் கேட்பார் ஊழ்வலியானுந் தீமையணுகாராய் நல்லவை பெறுவரென்பது கருதி நூலாசிரியர் அவ்வரலாற்றைக் குரிசிலுக்குவிசேடணமாகக்கூறின ரென்றுணர்க.)

வழங்குதற்கமையா வண்மயி னிசைக்கும் பெருந்தகு பாடல் திருந்திசைப் புலவர் அறன்கடைக்கு அகலாப்பிறங்கு தம்முளத்தின் — கொடுத்தற்கியலாத பெருநலமுடைமையால் பொருட்கிடனை சொற்களா லிசைக்கப்படுகின்ற மேதக்கபநுவ லுணர்ச்சியின்கண் அலேகாத புகழ்மையுடைய அறிஞரது பாவம் புகுதற்கிடங்கொடுக்க விரியாத தெளிந்த இதயத்தையொத்த,

[அறிஞரிதய மெனக்கூட்டுக.]

சாலாக்கல்வி மாலார்க்கு அகலா வரன்மாண்டு அமைந்த உரன் மாண் பலகையில்—நிரம்பாத கல்விமயக்கமுடைய புன் புலவரானு கியிருத்தற்கு விரியாத வரங்களால் மாட்சித்தாய் நிறைந்தபுலமை நிறுத்தலின்கண் வலிமைமிக்க சங்கப்பலகையினிடத்தே,

(புலவருளத்தையொத்த பலகையென்க.)

தண்டா விருப்பின் எண்டோண் முதல்வனோடு ஆறாது பயி லிய அருமறைக்கேள்வி—இடையறாத அருளொடு வீற்றிருந்த அவ் விறையனாருடன் பிரிவின்றிப் பயின்றுள்ள அருமையான வேத நெறியுணர்ச்சியாகிய இன்பத்தினையும்,

(இறையனார் சிவபிரானாதலால்எண்டோண்முதல்வனென்றார். வேதநெறிக்கு வேதமென்றது ஆகுபெயர். பயிலியவென்னும் எச்சப் பொது கேள்வியென்னும் தொழிற்பெயர்கொண்டது. இறைவனது தோரகிய நிலன் பிறராற்கவரப்படும் நிலையின்மையவான பொ ருள்களைத் தருவதாதலானும், அவ்வாறன்றிச் சங்கப்பலகை கற்று

வல்லசான்றோர் முகமாக அவர்க்கும் பிறர்க்கும் பயன்படும் நிலையுள்ளனவாகிய அறமுதலிய பொருள்களைப் பயப்பதாதலானும், அத்தேரும் வழங்குதற்கமையா வண்மையினென்றும், அத்தேர் இறைவன் திருவடியிடனும் நிலைகுலைந்து வாளாப்போந்ததாதலானும், கற்றுவல்ல புலவரது புலமையை இதுபோலச் சீர்தூக்கவல்ல மிக்க கடவுட்டன்மையின்மைத் தாதலானும், அதனினு மிப்பலகையிடத்தே மிக்க விருப்பினராய் வீற்றிருந்தமை தோன்றத்தண்டா விருப்பினென்றுங் கூறினர். வேண்டுதல்வேண்டாமையிலானுக்கும் அப்பலகைக்கண் வீற்றிருக்குமதோர் விருப்பந்தோன்றிற்றோலோ வெனின், அது தூய்மையுமந்திர வலியுமுடைத்தாதலானும், இறைவன்றானே நல்கநின்றதாதலானும், அப்பலகைக்கண் ஆரியத்தின் முதலெழுத் தைம்பத்தொன்றுள் ஆகாரமுதலிய நாற்பத்தெட்டெழுத்துக்களாகியநாற்பத்தெண்புலவரோடுதலைமையும்நிருவிகாரமும் ஏனைய அக்கரங்களனைத்தையுமியக்கும் ஆற்றலுமுள்ள அகரத்திற்கு முதல்வனாகிய விறைவன் நெடிது வீற்றிருந்தது தனது திருவருளாகலான் அவ்வருளையே விருப்பெனவுபசரித்தார்.)

மாயிருந் தமிழ்க்கடல் வடமொழிக்கடலென்று ஆயிரு கடலும் ஆற்றலின் கடையாஐயம்திரிபு என்னும் அழல்விடம்படாதுவெய்ய செம்பொருளெனும் மிளிர்தீஞ் சுதைத்திரள்—மிகப்பெரிய தமிழ்மொழியாகியகடலும் வடமொழியாகியகடலு மெனச்சான்றோரால் ராயப்படுகின்ற இருவகைக் கடல்களையும் அறிவாகிய மத்தினாற் கடைந்து (இது ஏகதேசவுருவகம்) ஐயமுந்திரிபுமான அழல்கின்ற நஞ்சமெழாமே மிக்க செவ்விய பொருளென்னும் தூய்மைத்தான வினிய அமிர்த புஞ்சத்தையும், (இவையுருவகம்)

(கடைந்தென்னு மெச்சம் ஆராது எனமேல் வரும்முதனிலைத் தொழிற் பெயர்கொண்டது. குற்றியோமகனோ வெனத்துணிவு கொள்ளாமை ஐயம். ஒன்றனை மற்றொன்றாகத்துணிதல் திரிபு.)

ஆராக் காதலின் ஆரா துகைப்பவும் — அடங்காத விருப்பத்துடனே அவற்றை நுகரவறியாமையால் வெறுக்கவும்,

(சுதையென்றதற் கேற்பக்கைப்பவென்றார். ஆராஎன்பதில்எச்சவிகுதிகுறைந்து நின்றது. இன் உருபுமயக்கம். உம்மை எதிரது தழீஇய எச்சவும்மை. தாயக்குரிசிலது தோராகியநிலனும்வழங்குதற் கமையாவண்மையுடைமையால், புலவருள்ளத்தினை யொத்த சங்கப் பலகையினிடத்தே அவ்வெண்டோண் முதல்வனோடுபயிலியஅருமறைக்கேள்வியும் தீஞ்சுதைத்திரளும்ஆராதுகைப்பவுமெனமுடிக்க.)

மூன்று விரல் என்பது முதல் கழலவும் என்னு மள வும் ஒரு முடிபு.

மூன்றுவிரல் அழுந்தாது உடல் தசை திணிந்து கான்றதேம் தெரியல் கருங்குழல் மகளிர்க்கு அணங்குளம் நிறீஇ ஆருயிர் கவர்க் கும்வளங்கவின் கொழிக்கும் விளங்குசீ ரிளமையும்—மூவிரல்கொண்டழுத்திடின் உள்ளாழாதபடி உடம்புதசை திண்ணியதாய் மணங்கமழ்கின்ற மலர்மாலை புனைந்த கரியகூந்தலுள்ள மாதரிடத்தே நோய்படும் உள்ளத்தை யொப்புவித்து, அரிய அறிவு முதலிய வற்றைத்திறைபடுத்தா நின்ற கட்டழகு கிளர்ந்த இனிமை மிக்க விளமைப்பருவமும்,

(உயிரினியற்கையாகிய அறிவையுயிரென்றதாகுபெயர்.)

பல்வகைத் தொழிலும் பண்புற நவின்று சிந்தைவழிச் செலும் ஐந்தும் நிலைபெறீஇயர் அளவினைத் திறத்தின் அயராயாக்கையும்—இயமநியம முதலியபல யோகவுறுப்புக்களையும், அதன் அதனதியல் பின்கட்குறையாமல் முறையேமுற்றி உட்புலனாகிய மனம் போன வாற்றால் செல்லாநின்ற ஐம்பொறிகளும், அவை நுகர்வனவாகிய வோசை முதலியவைந்து மடங்க அகப்படுத்தின அறவோர்க்குரிய ஒழுக்கங்களைப் பாகுபாடறிந்து நோற்கப் பெறுதவுடம்பும்,

(திறத்தின்-ஆற்றலுக்கேற்ப வெனினுமமையும்.)

அளகைக்கோமான் உளம் அழுக்கறுப்ப நிலந்தினக் கிடந்த நெடுநிதிச் செல்வமும்—அளகைக் கிறையான நிதிக்கிழவனும் தன் மனம் பொறாமையுறுமாறு மண் உருக்குலைக்கப் புதைபட்டுக்கிடந்த பெரிய பொருட் செல்வமும்,

நீடின்று இரியும் நிலைமைநாடி எற்போர் அங்கைக் கொடைக் கடன் இறுத்து நோர்ப்போர் நோற்கும் நோன்மைசால் அறனெனும் உறுதி ஆக்கம் ஒய்யெனக்கழலவும்—நிலைமையின் றிக்கழிகின்ற தன்மையையுள்ளுணர்ந்து இரப்பவர் கைக்கண் மறாத ஈகையாகிய கடப்பாட்டினைச் செய்து வண்மையை விரதமாக் கொண்டார் அதனையிகவாது காவாநின்ற பொருளமைந்த தருமமென்னும் உயிர்க்குறுதிபயக்கும் பேறு நிலைநில்லாமற் கழியவும்,

(இன்றி என்பது இன்று எனத்திரிந்து நின்றது. நீடுதல் நீடெனக் கடைகுறைந்தது. இளமையும், யாக்கையும், செல்வமும் இரியும் நிலைமைநாடிக்கொடைக் கடனிறுத்து நோற்கும் உறுதியாக்கம் கழலவும் எனமுடிக்க.)

வரைத்திர ளென்பது முதல் நேர்நடாவியும் என்னுமளவும் ஒரு முடிபு.

வரைத்திரள் புரள்வின் திரைத்தெழும் திரைக்கணம் விலங்கினவழங்கும் விழுக்கலன் செறித்தும்—மலைகள் திரட்சியாய்ப் புரளும் புரள்வையொத்த சுருட்டிமேலெழுகின்ற கடற்கணைலகள் ஒதுங்குமாறு அவற்றைப் பிளந்து ஓடுகின்ற பெரியவங்கமேற் சென்று பொருள்களையீட்டியும்,

(உம்மை எதிரது தழீஇய எச்சவும்மை.)

ஒளிறுவேல் அழுவத்து உருத்தெழுந்து அடர்த்து குளிறுவார் முரசும் பிளிறும்மால் யானையும்வைத்தபல் படையும் வழாதுகைக் கொண்டு—கூரிய ஆயுதங்கள் வழங்கப்படுகின்ற போர்க்களத்திடத்தே சினந்தெதிர்ந்து போர்புரிந்துவென்று (ஒன்னாரது) முழங்காநின்ற வார்கட்டிய முரசங்களையும், மதச்செருக்கால் ஆரவாரிக்காநின்ற பெரியயானைக் கூட்டங்களையும், அவரது ஆட்சியில் வைக்கப்பட்டிருந்த பலவாகிய மற்றைப்படைத்திரள்களையும் அறைபோதராவண்ணம் வயப்படுத்திக்கோடலால்,

(பல்படை என்றது இரதம், பரி, கரி, காலாள் முதலியவற்றை. கொள்ள என்பது கொண்டெனத் திரிந்து நின்றது.)

பராபவத் தெவ்வர் வரிசையின் இறுக்கும் இறைகே ழுரிமை முறைநேர் நடாவியும்—தோல்வியடைந்த ஒன்னார் கையுறையொடு செலுத்தா நிற்கும் திறைப்பொருளு மீட்ட லமைந்த அரசியலுரிமையைச் சிறப்பியல்பா னடாத்தியும்,

(ஒன்னார்த்தெறு பொருளைத் தெவ்வரிருக்குந் திறையென்றது. கடன்மேற் கலஞ் செரித்தும் அடர்த்து கொண்டு நேர் நடாவியும் எனமுடிக்க.)

தத்தம் தொழிலில் தலைநின்று வளர்க்கும் பொருளெனும் வெறுக்கை போற்றாது நழுவவும்—அமைச்சர் முதலியோர் தத்தம் ஆள்வினையின்கண் முயன்று இடையறப்பெறுக்கா நின்ற பொன்னென்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற செல்வப்பொருள் ஈட்டினரைப் பாதுகாவாமல் சொல்லாதேகவும்,

(பொருள் ஈட்டினர் மாட்டுச்சிறிது தவறுண்டாயின் அந்நிலையே தனது நிலையாமை இற்றெனக்காட்டி ஏளாபோதலால் அதன் விருப்பமின்மையை உணர்த்துமாறு அதற்கென வகுத்த பல பெயர்களுள் வெறுக்கப்படுவ தென்னும் பொருண்மைத்தாய வெறுக்கையென்பதனை அத்தன்மை நன்கு புலப்பட ஈண்டுப்பொருளெனும் வெறுக்கையென்றார். போகூழால் ஒருவன் மிடுக்குற்றுப் பற்றிப் போற்றினும் அது நிலையாமைத்தாதலின் போற்றினனை அவ்வூழ் காரணமாக எனைத்துணையும் தான் போற்றாது கைநெகிழ்விடுதலின் போற்றாது நழுவவும் என அதன் றொழிலாகவுபசரித்தார்.)

மிஞிறென்பது முதல் மாதரையென்னுமளவும் ஒருமுடிபு.

மிஞிறும் தேனும் வெறிகவர் தும்பியும் கலிப் பண்குரல் கலுற்றுவசுழலும் இருள் துஞ்சுமலர்ப்பொழில் மருள்சில் லோதி—மணத்த மதுக்கவர்கின்ற மிஞிறு தேன் தும்பியென்னும் வண்டினம் நெருங்கிப் பண்ணுங்குரலோசையும் கலப்பனவாய்ப் பாடிச்சுற்றுதற் கிடனான இருள்தங்கின மலர் செறிந்த பொழிலோவென மருளத் தக்க சில்லென்னுந் தலைப்பணியணிந்த கூந்தலினையும்,

(மிஞிறு-ஆண், தேன்-பெடை, தும்பி-வேறோர்வண்டின் சாதி. பொழிலும் எனச்சிறப்பும்மை விரித்து அது மருளத்தக்க வோதி யெனினுமமையும். இல் என்பது இன்மை மென்மை யென்னும் பொருட்டு.)

பூவார்சோலைப் புறத்தகப்படுத்து மேவரத்தடையிய விதுக்கு றைகடுக்கும் திவள்ஒளிமாண்ட குவவுநுதல்—அக்கூந்தலாகிய மலர் நிறைந்த சோலையினிடத்தே யுட்படுத்தி ஆண்டுத்தங்கும்படித்தடை யிட்ட குறைமதிபோல்கின்ற பாவின வொண்மைமிக்க பெரிய நுத லினையும்,

(குவவுநுதல் நரம்பு முரோமமுமில்லையாகத் தசைதிணிந்து மூன்று விரலளவும் அகன்றநுதல்.)

வாணுதல் தீங்கதிர் அமிழ்தத்திங்கள் பிளவின் நீங்குகார்க் கறையும் நிலாத்தவழ் வெண்மையும் விராய் உருக்கொண்டெனமிளிர் மதர்மழைக்கண்—விளக்கமுள்ள அந்நுதலாகிய தண்ணியகிரணத் திற்கிடனுன அமிர்தவுருவான அக்குறை மதியினின்று நீக்க முற்ற கரியகளங்கமும், அதன்நிலவின் வெண்மையும் விரவி இவ்வுருக் கொண்டாலொத்த மாசில்லாத மதர்த்த குளிர்ச்சியான கண்ணினை யும்,

(குறைமதிக்குக் களங்க மின்மையின் நீங்குகறையென்றனர். இதுவண்ணவுவமம், நிலவின்களங்கமும் வெண்மையும் ஒரோவழிக்க லந்துருக் கொண்டாலொத்த கண்ணெனவே அவை அங்ஙனமாகியு ருத்திரிதலின்மையால் வேறுவமம் அக்கண்கட்கமையா தென்றவா றாயிற்று.)

செங்குமுதத்துச் சிறுமதிகிடந்தெனச் செவ்வாயகத்த செயிர்தீர் வெண்பல்—செங்குமுதப்பூவினில் முந்நாட்பிறைகிடந்தா லொத்த தாய், செவ்வாயினிடத்து அழுக்கடையாத வெண்மைத்தான பல்வரி சையினையும்,

விலங்குபாய் கதிர்க்குழை வீழ்ந்து செகில்துயல்வர வள்ளையின் ஒழுக்கிய அள்ளெழில்செஞ்செவி—விலகிப்பரவாநின்ற ஒளியைய

யுள்ள குழைகள் நான்றுதோண்மேலிடத்தே அசையாநிற்ப வள்ளைப் பூவை நாலவிட்டாற் போலத் தாழ்ந்த அள்ளிக் கொள்ளும்படி செறிந்த அழகுள்ள செவியினையும்,

(செஞ்செவி வார்ந்து தாழ்ந்து மடற்சுழிவலஞ்சுழ முன்புறத்தே தள்ளின செவி.)

செவ்வாய்கவுட்டுணைச்சேல்விழிநெற்றி இவ்வாயுறுப்பான் இன்சுவை அமிழ்த உறுகொடையாற்றி வறிதுகொடைகாட்டும் வளைநிதி தன்னைக் குடுமிகைக்கொண்டு அவ்வளைமேல் கொண்டு வயங்கு ஒளிதோற்றும் பதுமமாநிதி இது வெனக்கவன்று தாவா உறுவர் மேவா வுள்ளமும் ஓவப் படமெனை உஞற்றுறு திருமுகம் — செவ்வாயும், இரண்டு கபோலங்களும், சேல் மீனை யொத்தகண்களும், நெற்றியுமான இந்நலனமைந்த வுறுப்புக்களைக்கொண்டு இனியசுவையுள்ள அமிழ்தமாகிய பெரியவண்மையைச் செய்து வறியகொடையைக் காட்டா நின்ற சங்கநிதியை அதன் தலையைக்கைப்பற்றி அதன் மேலதாய்ப்பொருந்தி மிக்க பொலிவை வெளிப்படுத்துகின்ற பெரியபதும நிதியிஃதென்று வியந்து கவற்சியாகிக் கேடில்லாத மாதவரது ஒன்றினும் பற்றாதவுள்ளமும் தன்னிலை பெயர்ந்து தடுமாறும்படி ஓவியப்படம்போல அயனாற் படைக்கப்பட்டுள்ள அழகிய முகத்தினையும்,

[உம்மை சிறப்பும்மை. ஒன்றினும் பற்றின்மையாவது வீடுபேறன்றி இம்மைமறுமைப் பொருள்களிற் பற்றாமை. தாவாவுறுவர் மேவாவுள்ளமும் ஓவ என்றுபாட மோதித்தாவரம்போல் சலித்தலில்லாத தவவலிமை ஏறினதுறவர் காதல் கூர்தலால் அவரதுள்ளமும் நிலைபெயர்ந் தொழிதற்குக்காரணமான முகமெனவுரைப்பது மொன்று. முகம் செவ்வாய் முதலியவுறுப்புக்களி னிருக்கையதாகலானும், அவற்றைக் காமநூலுடையார் அமிழ்த நிலைகளெனக் கோடலானும், முகம் அவற்றைக்கொண்டு அவ்வமிழ்தத்தினை வழங்குதலாகிய கொடையைக் காதலர்க்களிக்கின்றதென அதன் தொழி

லாகவுபசரித்தார். அம்முகம் சங்குபோன்ற கழுத்தின்மேலதாய் நிற்ற லின் அதனுருவாயுள்ள நிதி அவ்வா றமுதத்தினையளிக்க மாட்டாமையால், அதுதரும் ஏனையபொருள்களைவறிது கொடையென்றும் அது காரணமாகத் தன்னிற்றாழ்ந்ததாகலின், குடுமியைப்பற்றித் தோற்றார் பிடர்மேல் வென்றார் ஏறுதல் முறையாக மேல்கொண்டு என்றுங் கூறினர். இனிமுகத்திற்குவமம் தாமரையாகலின் அதனுருவாய் நின்று பயன்படும் பொருள்களையுதவா நின்ற நிதியே இதுவென வியப்பும், தம்மனத்தையுங் கவர்தலால் கவற்சியு மிக்கு அறமேவாரதுள்ளமும் நிலைதடுமாறும்படிப் படம்போல்வதா யமைந்தது என வணிந்துரைக்கப்பட்டது.]

பகுவாய்ப் பொற்குழை மகரமீனுஅன்று ஐது மீக்கிடத்தலின் ஐங்கணைக் கிழவோன் வெய்து தன்னாணை விளக்கியவுயர்த்த அணங்குதவழ் கொடியின் இணங்குபணை வேய்த்தோள் — அம்முகத்தின் பாங்கர் அங்காந்த வாயையுடைய சுறாமீன் வடிவாகப் பண்ணின பொன்னாலாகிய குழை தூங்கி, (பகுவாய்மகரப் பொற்குழை யெனமாறுக.) வேய்த்தோளின்மேல் அடர்ந்து அசைந்திருத்தலால், ஐந்துமலர்களாகிய அம்புகளையுடைய மன்மதன் கொடிதான தனது ஆணையையாவர்க்கும் புலப்படுத்துமாறு உயரநாட்டின விருப்பத்தோடு நிகழாநின்ற கொடிக்கம்பம்போலத்தம்மி லிணையொத்த பருத்த மூங்கில் போன்ற தோள்களையும்,

காம்புபுடையடுத்த கதிர்மணிக்குன்றின் தோள்புடையடுத்த சுடர்ப்பூண் கொங்கை — அம்மூங்கில்கள் பக்கத்தின்கண்நெருங்கியுள்ள ஒளிமிக்க மணிகளாற் பொலிந்த குன்றுகளைப்போலத் தோள்களினருகே நெருங்கின சுடரொளியைக்காலுகின்ற மணியணிகள் செறிந்தமுலைகளையும்,

குவிமுலைத்துணைகொள் சவிமணிமார்பில் தத்தமது எணி கடவாது தணிய நள்ளுநின் றுணர்த்தும் தள்ளாக்குறியின் அணிவயிற் றொழுகிய மணிமயிர்வல்லி — அக்குவிந்த கொங்கைகளே யேந்

மகாமஹோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

தின விளக்கமான அழகிய மார்பினிடத்தே அம்முலைகள் தமக்குரிய எல்லைகடவாமல் தங்கும்படி நடுநின்று வரையறையுணர்த்தாநின்ற நீக்கப்படாத அடையாளம்போல மென்மையான வயிற்றின்கண் ஒழுங்குறப்பொருந்தின கரிய உரோமவிரேகையினையும்,

நெடுங்குமயிரொழுக்கு நெடுவழிப்படர்ந்து கடுமுலைக்கோட்டுக் களிறுபட எடுத்த படுகுழி அனைய பயம்படு கொப்பூழ் — அந்நீண்டமயிரொழுக்கமான நெடிய வழியே சென்று பருமைதம்மு ளொத்த முலைகளாகிய கோட்டியானைக ளகப்படுமாறு அகழ்ந்த கொப்பம் போன்ற அச்சத்தைத் தருகின்றவுந்தியினையும்,

[கடுத்தல் ஒப்பு. பயம்படு என்பதனை ஒரு சொல்லாக்கி ஆழ்ந்த என்றுரைக்கினுமமையும்.]

நடுநின்று வாழ்வோர் நலத்தொடு முரணநடுநின்று தேய்ந்த இடுகுகொடி மருங்குல் — நடுவுநிலைமைக்கண் தங்கி நிகழ்வாரது ஆக்கத்தொடு மாறுகொண்டு நடுவேநின்று வறுமைகூர்ந்த இளகின கொடியை யொத்த இடையினையும்,

[நடுவு நிலைமைக்கண் நின்றவர்க்குப் பெருக்கமேயுளதாவதன்றித் தேய்வு உளதாகாதென்பது ஒருதலையா யிருந்தும், நடுநின்ற இடை அங்ஙனம் பெருகுதலின்றித் தேய்ந்தமையான் அவர் நலத்தொடு முரணவென்றார். இஃதோரிலக்கணை.]

வையகம் உயிர்த்தோன் மதிபுனைந்து இயற்றலின் கைபுனைந்தியற்றுங் கதிர்மணித்திண்டேர் கடாது உருக்கொண்டு ஓடும் தடாத பேர் அல்குல் — உலகங்களையீன்ற பிரமன் மதிமிக்குப்படைத்த வாற்றால் யவனர்கைத்தொழில் வல்லராயியற்றின கதிரொளியைச் செய்கின்ற திட்பமானதேரினை யொவ்வாமல், இத்தேர் அல்குலெனு முருவிற்றாய் ஆடவர் உள்ளந்தோறும் விரைந்து செல்லும் (செலவிற்) றடைப்படாத அகற்சியையுடைய அல்குலினையும்,

[யவனர் கையாலியற்றினதேர், இத்துணை வலிமைத்தன்றாமாகலின் அவ்வுருக்கொண்டோடும் தடாதபேரல்குலெனப்பட்டது.]

கீழ்மேலாகக்கிளர்ந்து எழின் அத்தகுவாழையொடு பொரூஉம் வார்ந்த செறிகுறங்கின் — பருத்த அரைமேலதாக வளர்ந்தெழுந் தால் (இது இல்பொருளுவமை) அப்புதுமைத்தான வாழையை நிகர்க்கின்ற நீண்டு அடர்ந்த தொடைகளையும்,

[வாழையொடு என்பது வேற்றுமை மயக்கம்.]

வேற்றொரு தாமரை மேவந்து தொழில்செய வீற்றிருந்தரு ளும் விரைமலரேய்க்கும் அலத்தகமலர்ந்த நலத்தகு சீரடி—வேறோர் தாமரைப்பூ விரும்பி யேவல் செய்யாநிற்ப, அரசிருக்கா நின்ற மண முள்ளதாமரைப் பூவைப்போல்கின்ற செம்பஞ் சூட்டிய அழகுள்ள மென்மையான கால்களையும்,

[வேறொருதாமரை செம்பஞ்சிற்குவமம். இது வண்ணவுவமம். சீர் என்னும் பலபொருளொரு சொல் * ஊறெட்டனு ளொன்றாகி யசீர்மையினையுணர்த்தி நின்றது.]

மயில் இயன் மருளும் இயல்மட மாதரை—மயிலினது சாயலை மருளுகின்ற சாயலையு மடப்பத்தினையு முடையமாதர்களை,

[சில்லோதிமுதல் சீரடியும் இயலுமுடைய மாதரையென முடிக்க.]

சீலமென்பது முதல் அழற்று நோய் என்னுமளவும் ஒரு முடிபு.

சீலம் விழைவே செயல் குறி இவற்றின் நால்வகைப் பேத மும் மாலறத்தெரிந்து—அவரது ஒழுக்கமும்உள்ளத்தின் வேட்கை யும் செய்கையும் குறியுமாகிய இன்ன கருவிகளால் நான்குவகை வேறுபாடுகளையும் ஐயப்பாடின்றி யுணர்ந்தவராய்,

[† "எண்ணேகார மிடையிட்டுக் கொளினுமெண் ணுக்குறித்தி யலுமென்மனார் புலவர்" என்றாராகலின் எண்ணேகாரத்தைச் சீல

---

* ஊறு எட்டாவன - வெம்மை, தண்மை, மென்மை, வண் மை, திண்மை, நொய்மை, சீர்மை, சர்ச்சரை.

† தொல்காப்பியம் — சொல்லதிகாரம் — இடைச்சொல்வி யல் — உசுo-வது சூத்திரம்.

முதலியவற்றோடுங்கூட்டுக. நால்வகைப்பேதமாவன — வாலை, தருணை, பிரவுடை, விருத்தை யென்பன. இவை மாதர் பருவங்க ளென்பர்.]

மருந்தும் மந்திரத்தும் திருந்துவினைபோற்றி—மருந்தினும் மந்திரத்தினும் தன்னோடியைபுறந் தக்க வேட்கையை அவர்க்குள தாமாறுபெருக்கி,

[மருந்து - அமிர்த நிலையறிந்து பரிசித்தல். மந்திரம் - மதனது மறையை அதற்குரிய தானத்தில் எழுதுதல். இவை வேட்கையை மிகுவித்தற்குத் தொடக்கத்தில் செய்யத்தக்க இன்றியமையாக்கருவிகளென்பர். பெருகல் உள்ள அளவின் மேற்படுதல்]

தேயம் பயிற்சி சேட்டை இயல்பே இன்பத்துறையே இரு வகைத் தொழிலே இங்கித வகையே இவைநனிநாடி — தேயமும் குணமும் அவத்தையும் இயற்கையும் இன்பத்தின் பாகுபாடு களும் இருபாலதான தொழிலின் பாகுபாடுகளும் இங்கிதத்தின் பாகுபாடுகளுமாகிய இவற்றைப் பெரும்பான்மையாராய்ந்து,

[எண்ணேகாரத்தைத்தேய முதலியவற்றோடுங்கூட்டுக. மக்கள் யாக்கையராதலின் அவற்றையாராய்தலும், அவ்வாறு கடைபோகத் துய்த்தலும், எளியனவன்றாமாகலின் நனிநாடியென்றார். உலகத்துள் ளதேயந்தோறும் பிறந்தமாதரது தருமம் உள்ளம் செய்கைமுதலிய வற்றை விசாரித்துத்தேறுவது தேயநாடலாம். தேவர் முதலியகண வகையுணின்ற மாதரை வாதம் பித்தம் சிலேட்டுமம் என்னு முப்ப குதியுள் இன்னதுள்ளாரென வுண்மையறிவது பயிற்சி நாடலாம். வாலை முதலிய பருவங்கட்குரைத்த காலங்களையும் உள்ளத்தின் வேட்கையினையும் பகுத்தறிவது சேட்டைநாடலாம். மானினி முத லிய மாதர்சாதியும் சசன்முதலிய ஆடவர்சாதியுமான மரபுக்குட்ப ட்ட அவ்வவர் குறிகளின் பரிமாணங்க ளின்னனவென்றறிவது இயற்கை நாடலாம். புல்லுதல் சுவைத்தல் முதலியபுணர்நிலைவகை களையறிவது இன்பத்துறை நாடலாம். புணர்ச்சி யமயத்தின்கண் புடைத்திடல் வழிபடலென் னுயிரண்டனையு மறிவது இருவகைத்

தொழிலுடலாம். கிராமியம் பௌத்திகம் முதலிய கரணங்களாகிய புணர்ச்சிப்பாகு பாடுகளறிவது இங்கிதஞைகை நாடலாம். இவற்றை விரிக்கிற் பெருகுமென விரித்திலம்.]

இருவகைப் பொழுதொடும் ஏற்பமருவிய மூன்றுகாலமும் மூன்றுவேகமும் ஒப்பக்கலவி உஞற்றுபேரின்ப அவாவுளம்பொதிந்து கொண்டு அழற்று வெம்படர்நோய் — பெரும்பொழுதுசிறுபொழுதுகளில் ஏலுமாறுற்ற முக்காலங்களும் மூன்று வேகங்களும் பிறழாதபடி கலவிபுரியாநின்ற பெரிய இன்பத்தின்கணுள்ள பேராசை உள்ளத்தை வெளிப்படாத வண்ண மூடிக்கொண்டு விரகானலத்தை மூட்டுதலாலுண்டாகின்ற கொடிய துன்பவேதுவானநோய்,

[கார்காலமுதலிய ஆறும் பெரும்பொழுதாம். மாலைக்காலமுதலிய ஆறும் சிறுபொழுதாம். மாதர் விரும்புமாறு அவர்க்கேற்ற ஆடவர் புணர்தற்குத் தக்க வமயம் காலமாம். அது மூவகை எனவும்; விரைவு, சமம், தூக்கு என்பன வேக மெனவுங்கூறுவர். முன்னர்க்கூறிய சீலமுதல் வேகம் என்பதன்றுணையுமுள்ளவற்றின் பொருள்களை யொருவாற்றானுரைத்தாம். இன்னும் விரிக்கின் மிகப் பெருகு மாகலின், இவையெல்லாவற்றையும் ஒருங்குணரவேண்டின், வடமொழியுள் இன்பநூலினுணர்ந்து கொள்க. இனிச்சீலமுதலிய வற்றால் தெரிந்து ஏற்றித்தேயமுதலிய வற்றைநாடிக் கலவியுஞற்று மின்ப அவாப் பொதிந்துகொண் டழற்று நோயென முடிக்க.]

தவாது பிறைபோலத் தணிவின்றி வளர வுவாமதிபோல வுருவேதபவும் — அந்நோய் இடையின்றி இளம்பிறை வளர்கின்றாற்போலத்தீர்வின்றி வளர்தலால் நிறைமதி குறைகின்றாற் போல உடம்பின் வலிமை முதலியவை நாள்தோறுங் குன்றாநிற்பவும்,

[நோய் வளர்தலால் உருவேதபவும் எனமுடிக்க. தபுதல் ஒருதலையாகலின் உருவேயென்றார். ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. பொருளடையால் உவமை யடைகள் வருவிக்கப்பட்டன.]

கடவுட் பொங்கர் முதல் தெளிவினைபோலா தென்னை மன்னவும் ஒரு முடிபு.

கடவுட்பொங்கரும் தடமருப்பு ஆவும் சிந்தாமணியும் நந்தாநிதிகளும் கலன்முதலான பலவளங் கொழிப்ப — தெய்வத்தன்மையுள்ள ஐந்தருக்களும் பெரிய கோடுள்ள காமதேனுவும் சிந்தாமணியும் கெடாத ஒன்பது நிதிகளும் ஆகிய அவை அணிகலன்கள் முதலிய வெவ்வேறான பொருள்களை வேண்டியாங்கு வரையாது கொடாநிற்பவும்,

பல்வகைக்கணமும் பணிந்தெழுந்தேத்தத் தெவ்வுத்தானவர் அவ்விதத்தேங்க — அமரர் சித்தர் முதலிய வெவ்வேறான பலகணங்களும் வணங்கியேத்தாநிற்பவும், அவருட்பகைமையையுடைய அசுரர்கள் தனது ஆக்கப்பெருக்கங்கண்டு மனக்கோட்டத்தால் பொறாதவர்களாய்ப் புழுங்காநிற்பவும்,

விரிகதிர்ப் பிழம்பும் அரிமான் தவிசின் களிகூர்நெஞ்சால் காவல் வைகும் ஒளிகூர்மகவான் உறுபதமாதி எளிதின் உய்த்தளிக்கும் தெளிவினைபோலாது——பரந்தகதிரொளியை மிகப்பரப்புதற்கிடமான அரியணைமேல் உவகைபெருகும் உள்ளத்தோடும் அரசு வீற்றிராநின்ற பாட்டு முறையுமான புகழ் மிக்க இந்திரற்குரிய பத முதலியவற்றை எளிதிற் கைகூட்டுவித்தற்குக் காரணமான நல்வினை போல்வதன்றி,

(பிழம்பும்என்றது பண்படியாகவந்த பெயரெச்சவினை. நெஞ்சால் என்பது வேற்றுமைத்திரிபு. காவல் வைகுமென்பதனை ஒரு சொல்லாகக் கொண்டுரைக்க. ஆதிய என்பது குறைந்து நின்றது. வீடுபேற்றிற்கு வேண்டுவனவாகிய அத்துணையாற்றலுடைமைமுத்தி பதப்பேற்றிற்கு வேண்டாமையால் எளிதினுய்த்தளிக்கு மென்றும், நல்வினையும் பிறவிக்கேதுவாமெனப் பெரியோரால் தெளியப்பட்டதாகலான் தெளிவினையென்றும், பின்னர்க் கூறப்படும் சாதனங்களாற் பெறத்தக்கவீடு பேறு ஒருவாற்றானும் இவற்றையொவ்வாதாகலான் போலாதென்றுங் கூறினர். பொங்கர் முதலியன வளங்கொழிப்ப எத்த ஏங்கத் தவிசிற்காவல்வைகும் மகவான் பதமாதிய அளிக்கும் வினைபோலாதெனமுடிக்க.)

பார் என்பது முதல் பிறக்கணித்துகவும் என்னுமளவும் ஒருமுடிபு.

பார்முதிர் புணரிப் பாயற்கடவுள் வார்மதுப் பொகுட்டு மறைமலர்ப்புத்தேள் என்று இவர்தமக்கும் எய்தற்கரிய—பாராகிய நிலத்தினிடத்தே முதிர்ந்த பாற்கடலின் கண்ணே சேடனாகிய படுக்கைமேற் கண்வளர்கின்ற நெடுமாலும் பெருகாநின்றதேனோடலர்ந்த தாமரைப்பூம் பொகுட்டினிடத்தே தங்கும் பிரமனுமான இன்னோராலும் எளிதின் அடைதற்கியலாத,

[உம்மை—உயர்வு சிறப்பு.]

சரியை கிரியை யோகத்தவநிலைப் பெயர் பொச்சாப்பப் பிறக்கணித்துகவும்—சரியை கிரியை யோகங்களென்னும் ஒப்பற்ற சாதனங்களின் பெயர்கள் மறக்குமாறு குறிக்கொள்ளாது கைவிடுதலானும்,

[தத்தம் வருணநிலை வழாது நின்று தேசிகரிடத்தே மிருதி மறைநெறி முதலியவற்றைப் பயின்று எல்லாவற்றின் முடிவான மெய்ப்பொருளைத்தேறிப் பின்னர் அம்மெய்ப்பொருளாகிய இறைவனை நோக்குமதியாலுயர்ந்து சமயதீக்கை பெற்று இறைவனது திருக்கோயிலில் திருவலகிடல் - மெழுகல் - மலர்கொய்தல் - மாலை முதலிய தொடுத்தல் - தீபமேற்றல் - மெய்யடியார் பணித்தபணி தலைநின்று மேவல் இவை முதலான நற்கருமங்களைப் புரிவது தாதநெறியாகிய சரியையாம். இதனை முற்றிய பின்னர்மகநெறிக்கான விசேடதீக்கையைப் பெற்றுப்பூசனைக்கேற்ற திருப்பள்ளித்தாமமுதலிய வற்றைச்சேகரித்துச் சுத்தி ஐந்துஞ்செய்து பதுமாசனம்பூசித்து அதன்மேல் மூர்த்தியைப்பாவித்து மூர்த்திமானாகிய இறைவனையாவாகித்துப் பத்திமையினால் ஒருமைப்பட்ட மனத்தொடுவழிபட்டுத்துதித்து ஆவரணபூசை முதலியவும் புரிந்து அழலோம்புதல்புத்திரமார்க்கமாகிய கிரியையாம். பின்பு இயம நியம முதலிய யோக வுறுப்புக்களான எண்வகையியல்பும் வாய்ந்து பின்

கலை இடைகலைகளை யடக்கிப்பிராணவாயுவை நடுநாடியினிறுத்தி ஆதாரமாறினையும் அவற்றிலுள்ள பொருள்களையு முணர்ந்துதியானித்து மூலாதாரத்தி லனலையெழுப்பி உந்தியினிடத்தே குண்டலி சத்தியுருவாயிருக்கும் அமிர்தினை யுருகப்பண்ணி மற்றையவாதாரங்களின் கீழ்முகமாயுள்ள பதுமங்களைப் பேதித்து மேலே சென்று சோமவட்டத்திற் பெறுகாநின்ற வமிர்தினையுண்டு பேரொளியான இறைவனைத்தியானித்து அவ்வொளியுடன் கூடியிருத்தல் சகமார்க்கமாகியயோகமாம். இவற்றின்பயன் முறையே இறைவனுலகு இறைவனருகு இறைவனுருவடைவது. இவற்றின் விதியைச் சிவாகமங்களி னுய்த்துணர்க. கடவுள் புத்தேள் இவர்தமக்கு மரிய சரியை கிரியை யோகத்தவநிலைப் பிறக்கணித்தகவு மெனமுடிக்க.]

ஊனநாடக மென்பது முதல் நிலைபது நீங்கவும் என்னு மளவும் ஒருமுடிபு.

ஊனநாடகம் உஞற்றிய திருவருள் ஞானநாடகம் நவிலிய மாறலும்—இதுகாறும் மாயா காரியமான நாடகத்தினை நடாத்திய (இறைவனிடத்ததான) அருட்சத்தி இனி ஞான நாடகத்தைநடாத்தும் பொருட்டுத் திருவுளந்திரும்பின வளவில்,

[உயிர் தன்னை யித்தன்மைய னென்றுணருமாற்றினை மறந்து தன்னின் வேறாய யாக்கையைத் தானாமென்று கருதிப் பொருட்சார்பு உயிர்ச்சார்புகளை நித்தமாக்கொண்டு அவத்தையுட்பட் டுழலுமதனை ஊனநாடக மெனவும், இவ்வமயத்தும் அதனுடன் கலந்து நின்றே கலப்பில்லாத தாகலான் அதனையுஞற்றிய திருவருளெனவும், அவ்வாறுழன்று தனது பதியையு மறியாது வருந்தின அவ்வுயிரைச் சத்திநிபாதாநுகுணமாகத் தீக்கை செய்து கருணையாலநுக்கிரகிக்கு முறையினை ஞான நாடக மெனவும், அத்திருவருளே அப்பருவத்தின்கண் குருவாய் வந்து அவ்வவத்தைகளினின்று முயிரை விடுவித்து மலவிருளைநீக்கி இச்சாஞானக் கிரியைகளை யிடையீடின்றி விளங்கச் செய்வதாகலின் அதனை நவிலிய மாறலு மெனவுங் கூறினர்.]

ஆணவமலப்பகை நோனுதுகழலத் தானுநந்தத் தனியுயிர்மடங் கக் கட்காண்குருமுதற் கடவுள்ஆகி—அருள்விளைவினன்றி நீங்கா து அநாதியாய்வருகின்ற ஆணவமாகிய பகைவலிமைபுரியாம லொழி யுமாறும் உயிர்தனியாய்த் தானுகவே பெருகும்படி தனது அவிச் சைத்தன்மை மடங்கு மாறும் எல்லாவற்றிற்கு முதலாய் நிற்கும் கடவுள் கண்கூடாகக்காணப் படுகின்ற குரவனுகி,

[முதற் கடவுள் குருவாகியெனமாறுக. அவிச்சை-அகங்காரம் அவா விழைவு வெறுப்புமுதலியதத்துவக்கூட்டத்தினைத் தொலைச் சித்தான் தனியா யிறைவனிடத்தே நிற்றலைத்தானுநந்தலும் மடங்க லுமென்ருர். எனவே பசுஞான நீக்கமென்றவாருயிற்று. கட்காண் குருவென்றதால் முதற்கடவுள் அருளானன்றிக் காணப்படானெ ன்பது, "அந்நியமிலாமையானு மறிவினுணிற்றலானு, முன்னிய வெல்லாமுண்ணின் றுணர்த்துவனுதலானு, மென்னதுயானெனன் ருேது மிருஞ்செருக்கறுத்தலானுந், தன்னறிவதனுற் காணுந்தகை மையனல்லனீசன்." என்னும் சித்தியார் ௯-வது சூத்திரம் ௮-வது திருவிருத்தத்தாற் கண்டுகொள்க.]

உயிரே அவத்தை உணர்த்தும் தன்மை அருளினியல் பே ஆங்கதன்பயனே பெரும்பெயர்த் திறமே பெற்றவர்முறை யென்று அனைவகையேழும் அரில்தபத் தெரிப்ப—உயிரும் அவத் தைகளும் அவற்றை விரவிக்காரியப்படுத்தாநின்ற தன்மையும் அரு ளினியற்கையும் அவ்வருளின் பயனும் இறைவனியல்பும் இறைவ னடியை யடைந்தார் முறையும்மென வேதாகமங்களாலுணர்த்தப் படுகின்ற அவ்வேழுபாகுபாடுகளையும் ஐயமறவறிவுறுத்தலால்,

[அனையவகை யென்பது குறைந்து நின்றது. தெரிப்ப என் பதனை எல்லாவற்ருேடுங் கூட்டியுரைக்க. உயிரைத் தெரிவித்தலா வது அளவற்றதாய விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் எனமூவ கைத்தாய் என்று முள்ளதாய்ச் சத்தசத்துக்களைப் பகுத்துணர்தற் றன்மைத்தாய் இருளும் ஒளியுமல்லாத கண்ணியல்பிற்ருய் நிறை விற்ருய் உணர்த்த உணர் சிற்றறிவிற்ரு யுள்ள தென்பது. அவத்

தைகளைத் தெரிவித்தலாவது சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐந்தென்றும், இவற்றிற்குத்தானங்கள் முறையே புருவநடு, அது தொடுத்துக் கண்டமுடிவு, அதுதொடுத்து இதயமளவு, அது தொடுத்து நாபியீறு, அதுதொடுத்து மூலாதார வரை யெனவும், இவற்றின் கருவிக்கொத்துக்கள் முறையே ஐந்து நான்கு மூன்று இரண்டு ஒன்றும் எனவும், அன்றியும் கேவலம் சகலம் சுத்தம் எனக்காரணாவத்தை மூன்றுமெனவும் தேற்றுதலாம். இவற்றை உணர்த்துந்தன்மை தெரிவித்தலாவது முறையே உயிர் ஒருவர் உணர்த்த உணர்தலானும், சடங்கள்போ லழியாமையானும், சதசத்தாய்ச் சுதந்தரவீனனென நிற்கு மென்றும், கீழாலவத்தைச் சாக்கிராதி நின்மலாவத்தைச்சாக்கிராதி என்னு மிரண்டுமுறையே சனனங்களையுண்டாக்கிக் கீழேதள்ளுவதென்றும், பிறப்பிறப்புக் களை யுண்டாக்காமல் மேலானநிலையையடைவிப்பதென்றும், உயிர நாதியே மலத்தான் மறைப்புண்டு கிடந்தவமயம் கேவலமென்றும், இறைவ னுடலாதியையளித்தவமயம் சகலமென்றும், மலமுற்றுநீங் கிப் பிறவியற்றவமயம் சுத்தமென்றும் விளங்குமாறும், விஞ்ஞான கலர் முதலிய மூவகையுயிர்களின் வினைகட்கும் முன்னிலையான ஆறு அத்துவாக்களினும் முறைப்படிக் கன்மங்களை யூட்டித்தொலை த்து மலபரிபாகம் பண்ணி முதிர்ந்த பக்குவத்தின்கண் இறைவன் குருவாய்வந்து அத்துவா ஆறினையுந் தூய்மைசெய்து பிராரத்த கன்மங்களையுண்பித்துத் தீக்கைக்குப்பின்னர் ஏறின ஆகாமியவா ணவங்களையும் ஞானத்தீயினால் தகிக்குமாறு மென்பது. அருளினி யல்பு தெரிவித்தலாவது உயிர்கட்கு ஞானோப தேசஞ்செய்து ஆத்மஞானந் தோற்றுவித்து அருவமான இறைவன் வெளிப்படுதற் குத்தனது கருணையினால் குருவடிவாய் வருவது அருட்சத்தியே யென்பது. அதன் பயன் தெரிவித்தலாவது அப்போது பூதமுதல் நாதமீறான பிரவஞ்சமெல்லாந் தன்னுள்ளே விளங்க இறைவன் சிறுமைக்குச்சிறுமையாகவும் பெருமைக்குப் பெருமையாகவும்உயிர் க்கு உயிராகவும் நிற்கு நிலைமைகள் விளங்கு மென்பது. பெரும்

பெயர்த்திறந் தெரிவித்தலாவது இறைவன் அருவுருவம் குறி குணங்கள் தோற்றக்கேடுகள் பந்தவீடுகளின்றி நித்தமாய்த்தானெல் லாவற்றையுங் கலந்து தன்னை யொன்றுங்கலத்தலின்றி நிருவிகாரி யாய் என்ஞான்று மொருதன்மை யுடையவனு மென்பது. பெற்றவர்முறை தெரிவித்தலாவது அம்மெய்ப்பொருளை அதனோ டொற்றுமையுற இடைவிடாது பாவனைசெய்து காண்பார்க்கு விழைவு வெகுளிகளும் காணவாதனையும் முக்குணச் செயல்க ளும் ஓரடையாளமும் நியமங்களும் வறுமை வாழ்வுகளும் இவை முதலிய இல்லையாய் இறைவனடியை நீக்கமறநினைந்திருக்கை யென்பது.]

தாழாது கேட்டு வீழாது சிந்தித்து அங்கைக்கொண்ட அமிழ் தெனத் தெளிந்து பொங்குபே ரின்பம் புணராது புணரும் நிட் டைகூட நிலையதும் நீங்கவும் — மனம் புறம்பே சென்று தங்கா மல் அவ்வெழு வகையினையுங் கேட்டு விபரீத ஐயங்களுள் வீழ் ந்து மயங்காமல் சிந்தித்து உள்ளங்கைக்கண் ணேற்ற அமிழ் தினை யுள்ளும் புறம்பும் கண்கூடாகத் தெளியுமாறுபோல் அவற் றைத் திரிபறத்தெளிந்து தலைசிறந்த பேரின்பவீட்டைக் கலவாமற் கலப்பதற்குக் காரணமான தியான சமாதியைக்கூடுகின்ற அந் நிலையும் நீங்கவும்,

[இது சன்மார்க்கமாகிய ஞானநிலையாம். நிட்டை கூட னிலையது மெனப்பாட மோதி நிட்டை கைகூடலாகிய நிலை யெனவுரைப்பது மொன்று. நிலையது என்பது ஈண்டு ஒரு சொல் நீர்மைத்தாய் நின்றது. உம்மை எச்சவும்மை. என வென்பது வினை யெச்சவுவமமாகலான் அமிழ்திற்றூய்மை இனிமைகள்போல் அவற்றில் தெளிவுண்மை நன்மைகள் கூடலின் வண்ணவுவமமும், அமிழ்து மரிப்பையொழிக்கு மாறுபோல் அவை பிறப்பிறப்புக் கட் கேதுவான அவிச்சையிருளைத் தொலைத்தலிற் றொழிலுவமமும் பெறக்கிடந்தவாறு காண்க. பொங்குபேரின்பமாவது நிரதிசயவின் பம். அதனின் மிக்கதோற் சிரிய வின்பம் பிறிதொன்றின்மை

யின் "உயர்வற வுயர் நலமென" அதனையுணர்ந்த பெரியர்பணித் ததுமது. புணராது புணர்தல் ஒருகால் நீங்கிப்பின்பு கூடாமல் இடையறக்கூடல். அங்ஙனங்கூடற்குக் கருவியாயுளது நிட்டை யாம். அது கேவலசகலங்களைப் பொருந்தாமல் மெய்யுணர்வை யடைந்து அவ்வுணர்ந்த வாற்றாற் குறிக்கொண்டு நேயத்தோடு கூடியிருக்கச் சருவவியாபகனை இறைவன்தானே தோன்றி எல் லாப்பொருள்களும் அவனாகவும் அவ்வுருவமனைத்தும் இறைவ னல்லாதனவாகவும் காணப்பட்டு அவையனைத்திற்கும் வேறாகிய நிராதாரனாகியெப்பொழுதும் தோன்ற நிற்குநிலையென்பர். இவற் றால் குருமொழியைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என மெய்யுணர்வையடைந்தார் பெறும் பயன் நால்வகைத் தென்றதாயிற்று. ஊனநாடகமுனாற்றிய அருள் ஞானநாடகநவிலிய மாறலும் கழல மடங்கக் குருவாகி உயிர்முதலெழுவகையினையுந் தெரிவிப்பக்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து புணரும் நிலை நீங்கவு மென முடிக்க.]

பலதிறப்பகைஞரென்பது முதல் இரவை என்பதனை யும் ஒரு முடிபு.

பல்திறப்பகைஞர் படையொடு நேர்ந்தென வெல்திறம் காட் டாது வீற்றுவீற் றுடற்றும் பிணிக்கோட்பட்டுப்பேதுறுமனத்தான் முந்தையோர் ஈட்டும் முழுநிதிச் செல்வமும் பொய்ம்மையாளர் புக ழெனத்தேய — பலதிறங்களாலாற்றலுடையபகைவர் படையொடு மெதிர்ந்தாற்போலத் தம்மை வெல்லு முபாய மேற்கொள வொட் டாமல் வேறுவேறாய்ப் பல வாற்றினு மூண்டு வருத்தாநின்ற நோய் களாற் பற்றப்பட்டுப் பித்துறுகின்ற மனத்தனாகித்தன் தாதை மூதா தையரீட்டின பெருஞ்செல்வங்களும் பொய்கூறுவாரது புகழ்தேயு மாறுபோலத்தேய,

[பலதிறமாவன துணை சுற்றம் பொருள் இவை முதலியன. ஆகி முற்றெச்சம். பேதைமைக்குக் காரண மிரண்டனுளிது கா

மத்தான் வந்ததாகலான் தனக்குறுதி பயவாத அவ்வொழுக்கத்தின்கண் விரும்பிச் செய்தமைபற்றி வந்தமயக்குற்ற மனத்தானென்றார். பொய்யர் பொய்கூறுவாரெனக் கூறாது பொய்யைத் தாமே யாளமாட்டாமே பொய்ம்மையால் தாம் ஆளப்பட்டாரென முன்செய்த புகழுந்தேயு மென்றற்கு அதனைவறற்புறத்தினார். இவ்வுவமத்தால் இவனாலீட்டப்பட்ட பொருளும் ஒருங்குதேய்தல் பெறப்பட்டது]

நோய்ப்பகை யாளர்க்கு நொடிந்தென் சிதரின் பல்வகை மருந்துக்குப் பகர்விலை தொலைச்சி அது வென வெறுவியது அன்று மற்றிதுவென முன்னைநாள் மருந்தை முறைமுறை இகழா பின்னைநாள் மருந்தை பெட்டுவாய் மடுத்து—நோயாகிய பகையாற் பீடிக்கப்பட்டாற் பொருட்டு யாது சொல்லினு மென்னை சிறிது சிறிதாகப் பல்வேறு வகைப்பட்ட மருந்தினுக்கும் மருத்துவன் சொல்லியளந்த விலைப்பொருள்களை யிறுத்து இது முற்பகலுண்ட மருந்துபோலப் பயனிலதன்றென்று மருத்துவனுபசரித்தலும் அவ்வாறே முன்னை நாளிலுண்ட மருந்தினை ஒரோ வொன்றாயவமதித்துப் பின்னைநாளிலேற்றின மருந்தினை யார்வமிக்கு உண்ணுதலும்,

[நோயாளர்க்கு தம்மால் தேய்ந்த செல்வத்தினை மீட்டு மீட்டுவான் தக்கவலியின்மையானும், நோயாற் றெறப்படுகின்றாராகலின் அதனைப்புறங் காண்டற்கு மருந்தென்னும் படைக்கலமன்றிப் பிறிதொன்றின்மையானும், அதனைக்கொள்வான் பொருள் கொடுக்கற்பாலதின்றி யமையாமையாகலானும் நொடிந்தென்னெனக் கூறினார். இது இரக்கக்குறிப்பு. சொல்லிப்பயனில்லை யென்பதாம். சிதரென்பது துளி, அவை சிறியனவே யாயினும் பலவும் ஒருங்கு கூடியவழி நீத்தமாமாறுபோலப் பலவகையுள் அவ்வவ் மருந்திற்கும் தனித்தனியே பகரும் விலைப்பொருள்கள் சிறியசிறிய வளவினவேனும் அவ்வகை பலவுமுள்ளிட்ட மருந்துகளனைத்திற்கும் வேறுவேறிறுத்தவை பின்னொருங் கெண்ணப்பட்டுழி அளவுபடாவாக

வின் அம்மிகுதி தோன்றப்பல்வகை யென்றார். மற்றிது அது வென வெறுவிய தன்று என்ன எனக்கூட்டுக. வாவென வேண்டாது கூறினர். மடுத்து எச்சத்திரிபு.]

பருகு பல்மருந்தால் பண்டைநோய் மேலும் மண்டு நோய் வேறு மரீஇக் கிளர்ந்து உருப்ப — அவ்வாறுண்ட பலவேறுமருந்துகள் காரணமாக முன்னையநோய்களேயன்றிப்பின் வேறு வேறு மிக்க நோய்களு மொருங்கே கூடி மூண்டு கொடுமை செய்தலும்,

உரைத்தவென் மொழிவழி யொழிகினை யல்லைகொல் நோய் பெருத்துத் தேறு மென மருத்துவனொழிய—இன்ன வின்ன அளவின்கணிற்கவென விதித்த எனது சொற்படி நின்று நடந்தாயல்லையாகலான் இனி அந்நோய்கள் மிக வளர்ந்து கேடு செய்யாநிற்கு மென்றச்சுறுத்தி மருத்துவன் கை நெகிழ்ந்து போந்ததால்,

தெய்வத்திறத்தால் தீர்வுகாண்பாமென உள்ளூர் வயின் வயின் தெள்ளிதினேங்கும் புரிமுறுக்கு அவிழ்க்கும் பூம்புனல் தீர்த்தமும் பலவகைத் தெய்வப் பசும்பொற்கோட்டமும் படிந்தும் பணிந்தும் பயன் காணமை—தெய்வதங்களை வழிபடலான் இந்நோய்கட்குப் பரிகாரம் பெறுதுமென் றெண்ணித் தான் வாழு மூருள்ளே இடங்கடோறும் அணிமையவாய நிலைபெற்ற வண்டுக ளிச்சித்து இதழ்களை முறுக் கவிழ்க்கா நின்ற மலர்களையுடையநீர்வாவிகளின் மூழ்கியும்பற்பலவான தெய்வங்களது செம்பொன்னாலான கோயில்களைப் பணிந்தும் அவற்றால் தான் வேண்டினபயன் பெறக்கிடையாமையானும்,

[ஊர் ஊர் என்பது அடுக்கு பன்மைகுறித்தது. நிலைபெற்ற புணற்றடமென வியையும். ஏழாவதும் இரண்டாவது மாகவேறுருபுகளடுக்கி வந்ததொகை. படிந்தும்பணிந்து மென்பது முறை நிரனிறைப் பொருள்கோள்.]

அணிஅயற் புறநகர் மணிகெழு கோட்டமும் விரதம் நியதி பரவு கடனுதி பல்வேறு தொழிலொடு படர்ந்து பணிந்தேத்தியும்

கவலை நெஞ்சம் கையறுபு இனைய—அணித்தாய் அயலானநகர்ப்புறத்துச் சிறப்புள்ள கோயில்களையும் நோன்புநோற்றல் பூசனைசெய்வித்தல் கடவுட்கு இறை உய்த்தல் முதலான அனந்த நியமங்களை மேற்கொண்டு ஆண்டாண்டுச் சென்று வணங்கித்தியானித்தும் (தீராமைபற்றி) கவலைப் பிணியொடு பொருந்தின நெஞ்சம் இனிச் செய்யப்படுவதோர் செயலின்றி இரங்காநிற்ப,

(கெழு "வேல்கெழுதடக்கை" யென்றதுபோ னின்றதோரிடைச்சொல். விரதம் ஓர்போ துணவு கோடல் முதலியன. நியதி சிறப்புச் செய்தன் முதலியன. ஆதி யென்றதால் உண்டிசுருக்கல் பட்டினிகிடத்தல் சாந்திசெய்வித்தல் கோயில்வலம்வரல் முதலியவுங்கொள்க.)

சேண் சென்று ஒரால் செய்து எனவலித்து—சேய்மைக்கண் பல தேயங்களிற் சென்று இதனை ஒருவுதல் செய்வலெனத்துணிந்து,

(துவ்வீறு ஈண்டு இறந்தகால வினையெச்சப் பொருட்டாய் நில்லாது, எதிர்கால ஒருமைத்தன்மை முற்றுச் சொல்லீறாய் நின்றது. ஒருவல் ஒரால் என இடை நீண்டு விகுதிமுதல் குறைந்தது.)

மிக்க நோய்க்கு இரங்கும் ஒக்கல் புறந்தழுவ வறுமைக்கவற்சியும் இறுகுறப் பிணிப்ப இல்லுந் தமரும் இசைபயில் நாடும் மென்மெலக் கழீஇ—துன்பத்தை மிகுவிக்கின்றநோய்கள்ஒழியாமையால் தாமுந்துன்புறுகின்ற சுற்றம் தன்புடைசூழ்ந்து போதர நல்குரவென்னுங் கவலைநோயும் சிக்கெனப் பற்றியாக்க அச்சுற்ற மாகிய தன்றுணைவியையும் தந்தை தாயர் முதலிய கிளைஞரையும் தாமிசையுடன் பயின்றுள்ள நாட்டினுள்ளாரையும் பையப்பைய விடுத்துத் தானீங்கி,

விரிகதிர்ப் படையால் இருள்கால் சீக்கும் எழுபரித் தேரோன் கடுஞ்சினம் திருகிய கொடுமைகூர் அமயத்து முளிமுதல் முருக்கிய முழங்கு அழல் போழ்ந்து வளியுலாய்ப் புறத்தும் வழங்குநர் தெ

றூஉம் பைதறு கானத்துப் படர்நெறி ஒதுங்கலின்—எங்கும் பாவின கதிர்க்கற்றை யாகிய படைக்கலத்தினால் இருட்பகையைத் தள்ளு கின்ற எழென்னு மெண்ணுப்பெயர்பெற்ற புரவிகட்டின தேரூர்தி யாகிய சுடரவன் மிக்கதனது வெப்ப முறுகின கொடுமை செய்கி ன்ற காலத்தின் கண் பட்டமரங்களின் அடிவேர்களையும் உட்டண வூற்றத்தால் கீழ்நிலத்து மூடுருவிப் பசையறப்பண்ணின கட்டழ லைப்போழ்ந்து அவ்வெப்பத்தை மேற்கொண்டு சூறுவளி அந்நில மெங்குமுலாவி அயற்புறங்களி லியங்குவாரையும் வாட்டுதற்கிடமான துயருறுத்தும் பாலைக்கண்ணே கல்லதரிற்போதலால்,

(கால்சீத்தல் ஒருசொல். எழுபரித்தேரோன் என்பது சுடரவ னென்னுந்துணையாய் நின்றது. இவ்வமயம் வேனிற் பருவம். தன தியற்கையான வெப்பமுதிர்ச்சியைக் கடுஞ்சினந்திருக வென்றார். படர் கன்மேடு. எச்சவும்மையை வழங்குநரொடுங் கூட்டுக. புறம் அத னயற்கண்ணதான முல்லை நிலமாம்.)

முந்து பாலுழந்த வெந்துயர்க் கொப்புள் பிந்துபா லுழத்தொ றூஉம்பிளந்துநீ ருகுப்ப இயங்காச்செல்லல் இணையடி தாங்கவெயில் பகையுழந்த வேர்ப்புறம் நனைப்ப — அக்கல்லதரினதுமுற்கூற்றில் பரற்கற்கள் உறுத்தினதா லரும்பின கொடுந்துயரைப் பண்ணுங் கொப்புள்கள் அதன் பிற்கூற்றிலுள்ள பரல்களுறுத்துந் தோறும் வாய்விட்டு வெண்ணீரையூற்றலால் அப்பா லினி யியங்கமாட்டாத நோய்களை இருகால்களுந் தாங்கவும் வெயிலாகிய வெம்பகையி லகப் பட்டதால் எழுகின்ற வெயர்வை நீரால் யாக்கையின் புறமுற்றும் நனைவுபடவும்,

சூறை மாருதம் துறைத்துறை எடுத்த பூழிபோர்த்த பொற்பறு மாசு கலுழ்நீ ரல்லது கயந்தலையின்மையின் கழுவுதல் புரியா முடை பயில் காயமோடு இலையின் மராத்த நிலையின் மென்னிழல் சேய்வ ரல் வருத்தம் சிதைபாக்கு அசைந்து நெட்டுயிர்ப்பு எறிந்து நினைத ரும் இரவல—அச்சூறுவளி துறைதொறு முகந்து வீசலால் புழுதி மூடின பொலிவற்ற மாசொடு கொப்புளிக்கின்ற வெயர்வைநீ ரன்றி

1071



ஆண்டு வேறோர் குளநீ ரின்மையால் மூழ்கிக் கழுவப் பெறாத நீனாற்றம் நிலைபெற்ற உடம்பொடு இலைகள் வளாருடன் தீந்தமரங் களினது அடிக்கூறாகிய குற்றிக ணிற்கும் நிலைக்களத்திற்கதுவிய சிறு நீழலிடத்தே நீளிடை நின்று வருதலால் முதிர்ந்த வேனிலை யைத் தொலைத்தற் பொருட்டுத்துவண்டு உயிர்ப்பு வீங்கிப் பலவாறு நினைந்து கவலாநின்ற ஆதுரனே,

(மென்மை சிறுமைகுறித்துநின்றது. மரம் என்பது சாரியை யும், இடை அகர நீட்சியும் பெற்றது. பலவாறு நினைதலாவன நோயொழிதல் வாழ்நாளளவும் அதுவுடம்பொடு கூடி நின்றழி தல், கல்லதர் கடத்தல் மீண்டு தன்னூர்ப்புகுதல் இறைவன் துணை செய்யப் பெறுதல் இவை போல்வன. இனியொருகாற் கூடுங் கொல்லோ வெனக் கணந்தோறும் பலவாறுகருதியாகுலித்தலாம். நெட்டுயிர்ப் பெறியு மிரவல வென்றது எறிந்து நினைதரு மிரவல வென இரண்டு விசேடண அடையாற் கூறிய தென்னை யெனின், உயிர்ப்பெறித லோசை யூறுகளா லெளிதினுணரப் படும் அவன் மனத்தே நிகழும் நிகழ்ச்சி அவ்வாறுணர்தற்பா ற்றோ கழிபெரு வெந்நோய்க் குடம்பையாய உடம்பினனாதலால் அவ்வாறு நோயுழத்தல் நல்கூர்தல் தனிவரல் வெஞ்சுரத்தில டிக்கண் கொப்பு ளரும்புதல் நிழலின்றி யலமரல் இவை முதலிய பல துயர்க்காரணங்களால் அவன் மனம் பிறிதோர் நிகழ் வின்றி வாளா விருத்தலமையாதோ, ஒரோவழி நிகழ்ந்துழி அஃதயற்கண் பிறராலுணர்தற்கியன்றதோ வெனின், இயலும், இவ்வாற்றுப்படுத்துவோன் தானும் முன்னர் ஆதுரனாயிருந்து ஒழிந்த வல்லாபனாதலால் உயிரதுணர்ச்சியினை முகம் கண்முதலிய வற்றாலுணர்தல் மாத்திரையன்றித் தன்னுள்ளே முன்னர் நிகழ்ந்த வற்றிற் பயிற்சியுண்மையானு முணர்தற்கியலுமது ஒரு தலையாதல் பற்றி உயிர்ப்பெறிந்து நினைதருமிரவல வென்னப்பட்டது. இவ் வாற்றுப்படுத்துவோன் கூறுங்கூற்றாகக் கற்றுவல்ல புலமை மேம் பட்ட இந் நூலாசிரியர் கூறியது தொல்லோர் வழக்கு. "குறிப்பிற்

குறிப்புணர் வாரை"யெனப்பெரியர் விதித்துரைத்ததிருக்குறளானு மிதனையுய்த்துணர்ந்து கொள்க. கயந்தலை தொடுகுளம் அடுக்குப் பண்மை நோக்கி நின்றது. கயந்தலையின்மை இடத்தி னிகழ்பொருளிடத்தின்மே னின்றது. சேப் ஆகுபெயர். பாக்கு ஒரெச்ச விகுதி ஈண்டுத் தொழிற்பெயராய் நின்றது. பிணிக்கோட்பட்டு மனத்தானுகித்தொலைச்சி இகழா மடுத்து உருப்ப ஒழிய காண்பாம்எனப் படிந்தும்பணிந்தும் காணுமை புறநகர்க் கோட்டமும் தொழிலொடு படர்ந்து எத்தியு மினைய சேட்சென்று ஓரால் செய்தென வலித்துத் தழுவப் பிணிப்ப மென்மெலக்கழீஇ நெறியொதுங்கலின் நீருகுப்பத் தாங்க நனைப்ப காயமொடுஅசைந்து உயிர்ப்பெறிந்து நினைதருமிரவலஎன முடிக்க.)

ஆற்று நின் னுளத்து அவலம் இனிஒழிக—நினது மனத்தினிடத்ததான தணிவுபடாத அவலத்தினை இதுபோழ்தே ஒழித்திடுதி,

(இரவலநின்னுளத்தவலமொழிக வெனவியையும்.)

புளிஞரு மருளும் போக்கருஞ் சுரத்து வீற்றுவீற் றொழுகும் ஆற்றினில் திரியாது ஒருநெறி எதிர்ப்பாடு உற்றது முன்னைப் பழுதறு பெருந்தவப் பயன் அதுபோலும் விழும வெந்துயர் முழுது ஒரால் வேண்டின் பாணி யாறுஇன்னே காணிய எழுமதி—மறவர்களும் (அந்நிலமாக்கள்) அஞ்சாதுசேறற்கு இயலாமை மயக்குறுகின்ற போதற்கருமைத்தானபாலைக்கண் வேறு வேறு கூறுய்ப் பிரிந்து செல்லா நின்ற அந்நெறிகளுள் யாதோர் வேறு நெறியே பிறழ்ந்து செல்லாதபடி நீயும் யானும் ஒருங்கோர் நெறிக்கண்ணே எதிர்ப்படுதலைப் பெற்றது முற்பிறப்பி லியற்றிய மாதவத்தின் பயனது விளைவு போல்கின்றதாகலின் நினது வெய்யதுன்ப நோயினைத்தினையும் ஒழிதலை விழைந்தனையாயின் காலந் தாழ்க்காமல் இதுபோழ்தே நான் நின்பொருட்டு மேற்கூறும் பரம்பொருளைக் காணுமாறு எழுவாயாக,

(உம்மை சிறப்பும்மை. முழுதும் என்பதில் முற்றும்மை தொக்கது. இன்னே என்பது விரைந்தகாலப்பொருட்டாய இடைச்

சொல். பாணியாது பாணியென்னுந்தொழிற் பெயரடியிற் பிறந்த மறைவினை யெச்சம். மதி முன்னிலை வினைக்குரியசோரசை. பயன் ஆகுபெயர். போலுமென்ற மிகையான் எதிர்ப்பாடு ஒரோவழித்தபு மாயின் ஆற்றுப்படுத்த லமையாமையும், அதனால் தவப்பயனின்மை யும் குறிப்பிக்கப்பட்டது. சுரத்துத்திரியாது எதிர்ப்பாடுற்றது முன்னைத்தவப்பயன்போலும் அதனால் துயர்ஒரால்வேண்டின்பாணி யாதெழுமதியெனமுடிக்க.)

தோல்தோர்க்கு ஒடும் திருகுகோட் டிரலையின் நோய்ப்பகை யென்ன வாய்ப்பிலா தமையும் மடுத்தடுத்து யானும் அலமரு காலை—பேய்த்தேரைப்புனலென்றுகருதி அதன் பொருட்டோடுகின்றதிரு குதலையுற்ற கோடுகளையுடைய மான்போல எனது முன்னை நோய் களைத்தீர்த்தற்குப் பகையென அமைவுபெறாத வெறுவியபரிகா ரங்களையும் விரதமுதலியவற்றையும்மாறாதுசெய்தும் பயன்பெறா மேயானும் நீயுழன்றவாறு உழன்ற வமயத்தின்கண்,

(எச்சவும்மையால் விரதநோற்றல் தெய்வம்போற்றல் தீர்த்த மாடுதல்முதலியன கொள்ளப்பட்டது. வாய்ப்பிலாதமை ஈண்டுப்பெ யராய் நின்றது. இரலையின்யானும் எனவியையும். ஓடுமிரலையின் அடுத்தடுத்தலமருகாலையெனமுடிக்க.)

ஊரூர் என்பது முதல் மணப்பவும் என்னுமளவும் ஒரு முடிபு.

ஊர் ஊர் வைகிய சீர்கெழு மாந்தருள் உண்டி கலவி உறுதொ ழில் முதலா மண்டிய பகுப்பின் வரையறைப்படாதுவேறுவேறுயிர்க் கும் வெம்பிணி யாளரும்—ஊர்கடோறுமுறைகின்ற சிறப்புமிக்க மானுடத் தொகுதியுள் உணவும் மாதர் போகமும் செய்தொழிலு மிவை முதலாகிய பலநுகர்ச்சிகளில் மிக்குச்சென்றபகுப்பினிடத் தே அவை யித்துணையென வரையறுத்தற் கமையாமல் வேறு வேறாகப் பயந்த கொடிய நோயாளரும்,

(உணவுமுதலியவற்றின் மிக்குச்சேறலாவது குணவொப்புமையும் செயல்களொப்புமையும் தத்தநிலைபிறழுதல். பகுப்பின் வரையறைப் படாமையாவது உண்டி முதலியனவும் அவற்றினளவும் காலமுதலியவும் நோக்காமை. அங்ஙனம் பிறழ்தலானும் நோக்காமையானும் வளிமுதலான முப்பகுதியும் துன்பஞ்செய்யுமென்பதாம். இவையெல்லாம் மருத்துநூலிற்காண்க. இந்நோய்கள் தம்மால் வருவன.)

கருவி போழ்ந்த பெரும்புண் ணுறுநரும்—ஆயுதங்களின் ஊறுத்தினால் பெரிய இரணமுற்றவரும்,

குட்டம் பெருநோய் முட்டிய வாதம் முயலக னாதி மொய்ப்பிணியுழவரும்—தொழுநோயும் பெருநோயும் தொழில்களையிடைபடுத்தும் வாதநோயும் முயலகனென்னும் குமாரகண்டவலியும் இவை முதலிய நோயுழக்கின்றவரும்,

(இவை தெய்வத்தான்வருவன.)

பாப்புக்கோளாதி பலவகைக் கடிஞரும்—பாம்புமுதலியநஞ்சுடையவற்றால் கடியுண்டபலதிறத்தினரும்,

(கோள்செய்வனவற்றைக்கோள் என்றதாகுபெயர்.)

பேய்கோட்படுநரும் பித்துமீக்கூர்நரும் உறுப்புக்குறைநரும் ஒண்குணமிழநரும் — பேய்பிடிக்கப்பட்டாரும் பித்துமேற்பட்டாரும் யாக்கையினங்கங்கள் குறைந்தாரும் நற்குணமிழந்தாரும்,

(இவைபிறவுயிர்களால் வருவன.)

இன்னபல் திறத்து எனைவரும் — இவ்வாற்றாற் பலவகையினரான எத்தன்மையரும்,

அன்றி—அல்லாமல்,

கல்விவேட்டவரும் காண்முளைவீழ்நரும் செல்வம்வீழ்நரும் தேயநாடுநரும் அலர்முலைமடவார் கலவிகாமுறுநரும் இரண்டறுகலப்பின் இன்பநச்சுநரும் இனையபல்வேறு நினைவினர்எவரும்—கல்விப்பொருளைக்காதலித்தாரும் மக்கட்பேற்றினையிச்சித்தாரும் செல்

வப்பொருளை அவாவினரும் தேயவரசியலைவிரும்பினரும் மார்பிட முற்றும்பரந்தமுலைகளையுடைய மாதர்புணர்ச்சியைக் காமுற்றாரும் இரண்டறக்கலப்பினதாகிய பேரின்பத்தை விழைந்தாருமாகிய இன்ன வெவ்வேறு வகைப்பட்டநினைப்புள்ளார்பலரும்,

(இரண்டறகலப்பி னின்ப நச்சுதல் பதிபசுபாசங்களைச் சிறப்பியல்பானுணர்ந்து தேறினஞானநிலைகிடைத்து ஆணவக்கட்டினை யறுத்து ஆனந்தப்பேறுமருவிப்பாசத்தை யொழிவதும் பதியிற் புகுவதுமில்லாவொருநிலைமைத்தான வியல்பின்கண்ணே ஞாதுரு ஞான ஞேயங்களை யொழியாதொழிந்து சுடரவனைப்புணர்ந்த விழி போல அப்பதியுடனே பேரின்பந்துய்க்கும் வாழ்வை நயத்தலாம்.)

வாட்டுவதணப்பவும் வேட்டனமணப்பவும்—தம்மைவாட்டும் அம்மூவகைத்துன்பங்களையும் ஒழித்துக்கோடற்பொருட்டும் தாம் வேண்டும் அக்கல்விமுதலியவற்றையும் பிறவின்பங்களையும் பெற்றுக்கோடற்பொருட்டும்,

(மாந்தருள் வரையறைபபடாது உயிர்க்கும்பிணியாளரும் புண்ணுறுநரும் பிணிக்கோட்படுநரும் உழவரும் கடிஞரும் மீக்கூர்நரும் குறைநரும் இழநரும் எனைவருமன்றி வேட்டவரும் வீழ்நரும் நாடுநரும் காமுறுநரும் நச்சுநரும் வேறுநினைவினரெவரும் தணப்பவும் மணப்பவுமெனமுடிக்க.)

மேற்கொண்டென்பது முதல் தன்ன நீங்க என்னுமளவும் ஒருமுடிபு.

மேற்கொண் டெழுந்து மேல்நாள் சேர்ந்த பொற்கிழித்திரளும் பூந்துகில் முடையும் மணிப்பூண் பேழையும் வார்தரு கவரியும் பைம்பொற் கவிகையும் செம்பொற் சிவிகையும் ஊர்தியும் கொடியும் வார் விசிமுரசும் சூட்டுவாரணமும் தோகையமயிலும் — விரதத்தினை மேற்கொண்டெழுந்து முன்னைநாளின்கண் தாம் தாம் பிரார்த்தித்த வாற்றால் பொன்னிதிப்பொதியும் பூந்தொழிலையுடையதுகிற்பொதியும் மணியணிப்பெட்டகமும்நீட்சியுற்றசாமரையும்மாற்றுயர்பொன்

ஞலாகிய குடையும் பொன்ஞலாகியசிவிகையும் அத்தகைவாகன மும் கொடியும் வார்கட்டின வாச்சியமும் செஞ்சூட்டுக்கோழியும் கலாபமுள்ள மயிலும் ஆகிய இவற்றை,

(முடைமுதலியவை சாதியொருமை.)

தத்தமக்கு இயன்ற தமீஇனர் போதும் ஓசை திக்கு அதிர்க்கும் மாசனப் பெருக்கம் காண்டொறும் காண்டொறும் ஈண்டியகளியேன் உடங்குசென்று இருப்பான் ஒருப்பட் டெழூஉம் துன்னிய விழும நோய் தன்னம் நீங்க—தமக்குத்தமக்குக் கூடினவாற்ருன் உடன் கொண்டுசெல்லாநின்றவோசை திக்குகளைநடுக்குகின்ற மிக்கசனக் கூட்டங்களைக்காணுந்தோறும் காணுந்தோறும் மிக்ககளிப்புறுகின் றேனுகி, அக்கூட்டங்களுடன் கூடிச்சென்று சேர்தற்கு மனவொ ருமையுற்று எழுந்தவளவின் என்னைத்தொடர்ந்துள்ள துன்பநோய் சிறிது ஒழிதலான்,

(ஆகி குறிப்பு முற்றெச்சம். விழுமம் என்பது ஈறுகுறைந்து நின்றது. சிறிதென்பது காற் கூறும். மேலே யிருகூற்றெருகூறு விலங்க என்பவாகலான். எழுந்து திரள் முதலியவற்றைத் தமீஇ னர்போதும் சனப்பெருக்கம் காண்டொறும் களியேனுகிக் கூடிச் சென்றிருப்பான் எழூஉம் நோய் தன்னம் நீங்க எனமுடிக்க.)

உறுதுயர் என்பது முதல் ஈர்த்தலினென்னுமளவும் ஒருமுடிபு.

உறுதுயர் யாக்கை சிறிதுவலி யெய்த—மிக்கதுன்பத்தையெய் திய உடம்பு சிறிது நோன்மையைப்பொருந்த,

ஒய்யெனக் கிளர்ந்த உவகைநெஞ்சத்துப் படர்பே ருக்கம் பிடர் பிடித்துந்த எழுந்தனன் இம்மென—விரைந்து தலைக்கொண்ட களிப்பு உள்ளத்தின்கண்சென்று புக்கதால் மிக்கமனவெழுச்சிபின் புறம்பற்றித் தள்ளா நிற்ப இம்மென்றெழுந்து,

(இதுவிரைவுக்குறிப்பு.)

லாகிய குடையும் பொன்னலாகியசிவிகையும் அத்தகைவாகன மும் கொடியும் வார்கட்டின வாச்சியமும் செஞ்சூட்டுக்கோழியும் கலாபமுள்ள மயிலும் ஆகிய இவற்றை,

(முடைமுதலியவை சாதியொருமை.)

தத்தமக்கு இயன்ற தழீஇனர் போதும் ஓசை திக்கு அதிர்க்கும் மாசனப்பெருக்கம் காண்டொறும் காண்டொறும் ஈண்டியகளியேன் உடங்குசென்று இருப்பான் ஒருப்பட் டெழலும் துன்னிய விழும நோய் தன்னம் நீங்க—தமக்குத்தமக்குக் கூடினவாற்றான் உடன் கொண்டுசெல்லாநின்றவோசை திக்குகளை நடுக்குகின்ற மிக்கசனக் கூட்டங்களைக்காணுந்தோறும் காணுந்தோறும் மிக்ககளிப்புறுகின் றேனாகி, அக்கூட்டங்களுடன் கூடிச்சென்று சேர்தற்கு மனமொ ருமையுற்று எழுந்தவளவின் என்னைத்தொடர்ந்துள்ள துன்பநோய் சிறிது ஒழிதலான்,

(ஆகி குறிப்பு முற்றெச்சம். விழுமம் என்பது ஈறுகுறைந்து நின்றது. சிறிதென்பது காற் கூறும். மேலே யிருகூற்றொருகூறு விலங்க என்பவாகலான். எழுந்து திரள் முதலியவற்றைத் தழீஇ னர்போதும் சனப்பெருக்கம் காண்டொறும் களியேனாகிக் கூடிச் சென்றிருப்பான் எழலும் நோய் தன்னம் நீங்க எனமுடிக்க.)

உறுதுயர் என்பது முதல் ஈர்த்தலினென்னுமளவும் ஒருமுடிபு.

உறுதுயர் யாக்கை சிறிதுவலி யெய்த—மிக்கதுன்பத்தையெய் திய உடம்பு சிறிது நோன்மையைப்பொருந்த,

ஒய்யெனக் கிளர்ந்த உவகைநெஞ்சத்துப் படர்பேருக்கம் பிடர் பிடித்துந்த எழுந்தனன் இம்மென—விரைந்து தலைக்கொண்ட களிப்பு உள்ளத்தின்கண்சென்று புக்கதால் மிக்கமனவெழுச்சிபின் புறம்பற்றித் தள்ளா நிற்ப இம்மென்றெழுந்து,

(இதுவிரைவுக்குறிப்பு.)

அகற்றும் சரவணப் பொய்கை தடம்புனல் துளைந்து—(மலர்களின்) இனியமணம் வாசிக்கின்ற நந்தியாற்றின் மூழ்காமலும் எழுமுனிவரது எழுசுனைநீரிற்குளியாமலும் அலைந்தமலைகட்குப் பகைஞனை இந்திரனது (அருளைப்பயக்குந்) தீர்த்தத்தின்முழுகாமலும் நாகரது பெரியசுனையின்கண் நன்மைதரும் நீரிற்படியாமலும் திருமாலது தீர்த்தத்தில் இச்சித்தவை பெறுமாறு முழுகாமலும் பிரமனது பெரிய சுனையின் மிக்க நீரிற்குளியாமலும் எவ்வகைப்பட்டதுயர முற்றும் மூழ்கின அத்தினத்தினே தீர்த்திடத்தக்க சரவணமெனப் பெயர்பெற்றதடாகத்தின்தெய்வத்தகைமைமிக்கதான நீரின்மூழ்கி,

(இவைமேற்கூறிய நந்திதேவர் முதலிய அவ்வவரும் முன்னை நாட்கண் நிருமித்து மூழ்கிப் பிள்ளையாரைப் பூசித்துவரம்பெற்ற தீர்த்தங்களாம். அவையெல்லாவற்றினும் வேறுவேறு மூழ்கிக்கடை முறையிற் சரவணத்தின்மூழ்குதல்வேண்டின் காலநீட்டித்துக் காட்சிப்பேறெய்தல் தாழ்க்குமாகலான் அவற்றின் மூழ்காதென்றும், சரவண தீர்த்தமொன்றே மூழ்கினர்க்கு எத்துயரங்களையும் அந்நிலையே நீக்குமென்பது ஒருதலையாகலின் அந்நீரொன்றினே மூழ்கியென்றுங்கூறினர்.)

மென்மெலக் குன்றம் மீமிசை யிவர்ந்து காலை நண்பகல் மாலை முப்போதும் வைகல் வைகல் மலர்மூன்று தெரிக்கும் நீலப் பைஞ்சுனை நேர்கண்டு தொழுது — பையப்பையத்திருமலைச்சிகரத்தின் கண் சென்று வைகறை உச்சி அந்தியாகிய மூன்றுபோழ்திலும் நாடோறும் மூன்றுமலர்கள் பூவாநின்றநீலோற்பலம் நிலைபெற்றுள்ள பசுமைத்தான சுனையை யெதிரிற்கண்டுவணங்கி,

(நோயுடமைபற்றி மென்மெல என்றது. அம்மலர் இந்திரன் பிள்ளையாரைப் பூசித்தற்பொருட்டு முன்னேருகத்தில் வைத்தது. இதனானே அத்திருமலைக்கு உற்பலப்பருப்பதமெனவோர் பெயருமுள்ளது. குடையாது ஆடாது படியாது தோயாது குளியாது முழுகாது துளைந்து இவர்ந்து நேர்கண்டு தொழுது எனமுடிக்க.)

புரண்டனர் என்பது முதல் நுழைந்து என்னுமளவும் ஒருமுடிபு.

புரண்டனர் சூழும் பொற்பினர் மிடைதலின் அடியிடப் படாஅ ஆரிடைவீதி—யாக்கை நிலத்தின்கண் படியுமாறு புரண்டு வலம் வருகின்ற பொலிவையுடையார் எப்பாலினும் நெருங்குத லான் ஏனையோர் கால்வைத்தற் கியலாத அரிய இடத்தை யுடைய திருவீதியினிடத்தே,

(அருமையென்னும் பண்பு விகுதியொடு நடு நின்ற வுகரமு நீங்கி முதல் நீண்டது. அருமை இன்மை குறித்தது. இடை யரிது எனவிகுதி பிரித்துக்கூட்டினுமமையும்.)

ஒதுங்குபு பைப்பைய ஒருமுறை சூழ்ந்து தூவும் எண் நிலத்து தோயாது வெறுத்த தேவர்கள் குழுவும் தேயத் தொழு தியும் தடைஇய வாயல் தடையாது நுழைந்து—மெல்லமெல்ல ஒதுங்கிப் பெயர்ந்து ஒருமுறை வலம் வந்து தூவின என் நிலத்தே வீழாமை (நெருக்குற்ற சனப்பெருக்கத்தால்) வெறுத்ததேவர் கூட் டமும் தேயத்தார் கூட்டமும் உள்ளே புகப்பெறாமல் தகைவுற்ற திருவாய்தலுள் தடைபடாமல் நுழைந்து,

(ஆரிடைபற்றி ஒருமுறை சூழ்ந்தென்றார். எனவே அஃதும் மிகுந்த வருத்தத்துடன் முயன்று சூழ்ந்தவா றாயிற்று. இது குறிப் பெச்சம். தேயம் ஆகுபெயர். வீதியில் சூழ்ந்து நுழைந்தென்க. பொற்பினர் மிடைதலின் ஒதுங்குபு சூழ்ந்துவாய்தல்நுழைந்தென முடிக்க.)

ஆங்கு என்பது முதல் துவன்ற என்னுமளவும் ஒரு முடிபு.

ஆங்கு ஒருவர் மெய்மணிப்பூண் ஒருவர்மெய் வடுச்செய நெருங்கிச் சென்று நித்தில வாணகை வள்ளி நாயகி மணத்தினை முடித்த கள்ள வேழக் கடவுளைப் பணியா வீரர் ஒன்பதின்மர் வார்

கழல் தாழ்ந்து மற்று ஆவயின் வதியும் அமரரைத் தொழுது— ஆண்டு ஒருவாது மெய்யின்கண்ணவாகிய மணியணிகள் ஒருவாது மெய்யிற் றுக்கிவடுச்செய்யாநிற்ப நெருக்குண் டுள்ளேபுகுந்து முத்துக்களையொத்த ஒள்ளியபற்களையுள்ள இளையநாச்சியாரது திருமணத்தை முற்றுவித்த கள்ளவிநாயகமூர்த்தியை (முதற்கண்)பணிந்து பின்னர் வீர வாகுதேவர் முதலிய ஒன்பதின்மரையும் கழல் கட்டிய பாதங்களில் வணங்கி ஆண்டாண்டு வீற்றுறைகின்ற ஏனைப் பரிவாரதெய்வதங்களையும் அம்முறையே போற்றி,

(கழல்ஆகுபெயர். மற்று அசை. கள்ளவேடிக்கடவுளென்பது கடவுள் வாழ்த்துக்கூறிய வெண்பாவுரையிற் சுருங்கவுரைத்துப் போந்தது. அவ்வரலாற்றைத் தலபுராணத்துட்காண்க.)

பூதப் பகுப்பும் பூத காரணமும் இந்தியக் கூட்டம் இரண்டும் முக்குணமும் நந்தும் ஆங்காரமும் நலத்தகு காரணமும் இறுவாய் மாயை எழுவாய் ஏழும் சுற்ற மென்னத் தோன்றிய ஐந்தும்—ஐவகையாகிய பூதங்களும் அவற்றின் காரணமான தன்மாத்திரையும் ஞானம் கன்மமென இருதொகுதியாகிய இந்திரியங்களும் மூன்றாகிய குணங்களும் யான் எனதென் றெழு மகங்காரங்களும் நன்மைக்குத் தக்க மனமும் இறுதியாக மாயை முதலாகத்தோற்றா நின்ற இவ்வேழுள்ளும் மாயையின்கிளையென்றுதோன்றிய ஆணவம் மாயை கன்மம் மாயேயம் திரோதையென ஐந்துள்ளும்,

(நலத்தகுஎன்பதுவலிந்துநின்றது. எழாவது தொக்குநின்றது )

விராய் நின்று இயக்கி மாறாது நின்று ஒளிரும் ஆரா இன்ப அருள்நிலை அம்ம தீரா மலப்பிணி தீர்த்து அருள் கொழிப்ப அருள் திரு வுருவு கொண்டு அவிர்மணித் தவிசின் ஞான சத்தியும் கிரியா சத்தியும் வானவர் கோமான் வளம்பயில் மகளும் கானவர் நலம்கூர் கன்னியும் என்ன இரண்டுபாலும் இருந்தனர் களிப்ப — கலந்து நின்று காரியப்படுத்தி அவற்றொடு மருவாமனின்று விளங்குகின்ற தேக்காதபேரின்பக் காரணமான திருவருளே தனதிடனாகப்பிறி

தொன்றானும் நீக்கற்பாலதன்றாய அநாதிமலப்பிணிப்பைக் கட்டவிழ்த்துக் கருணையிரதம்பெருக அத்திருவருளேதனது திருமேனியாகச் சகளீகரித்து ஒளிர்கின்ற மணிகுயின்ற தவிசின்கண் ஞானக்கிரியைகளாகிய சத்திகளிருவரும் முறையே தேவர் அரையனான இந்திரனுக்குப் பெருமைதங்கிய மகளெனவும் வேட்டுவர் மன்னனுக்கு நன்மைகூர்ந்த மகளெனவும் அவதரித்துப் பிள்ளையாரதிருமருங்கினும் வீற்றிருந்து மகிழ்சிறப்பவும்,

(மருவாது என்பதுமராது எனவிகார மாயிற்று. அம்மஎன்பது ஈண்டுக்கேட்டி என்னும்பொருளது.)

கண்டமெய் அடியர் கலவினர் போற்ற காணு விண்ணவர் கலவாது எத்த கண்கடை ஒழுகும் கருணை நோக்கமோடு இனிதுவீற்றிருக்கும் எழில்நேர் காண்டலும் எஞ்சும் நோய் துவா இரியல் போக விஞ்சுநாற்பொருளும்மேவந்துதுவன்ற—(அன்னதிருவோலக்கத்தினைக்) காணப்பெற்ற மெய்யுணர்வுள்ள அடியர்கலப்புற்றவராயிறைஞ்சவும் காணப்படாத விண்ணுலகத்தார் கலப்புறாது நின்றேத்தவும் கடைக்கண்ணிடத்தேயிடையறாது வாராநின்றகருணைச் செவ்வி உடன் நிகழ உயிர்கட்கு இன்பம்தோன்றும் நிலைமையின் வீற்றிருந்தருள்கின்ற காட்சியை எதிருறச்சேவைசெய்த அளவினே நீங்காது மிகையாய்நின்றநோய்முற்றும் நீங்கினவாற்றால் பிறவற்றுண் மேம்பட்ட நால்வகைப்பொருளும் தாமேவந்துநிறம்புதலும்,

(மெய்ஆகுபெயர். அடிமை சுதந்திரமின்மை. மேவந்துஎன்பது மேவரல் என்னும் வினைப்பெயரடியாகப் பிறந்து அதுபோல ஒருசொல்லாய் நின்றது. சென்று பணிந்து தாழ்ந்து தொழுது எழும் ஐந்தும் விராயியக்கி ஒளிரும் அருணிலை பிணிதீர்த்தருள் கொழிப்ப இருந்தனர்களிப்ப போற்ற எத்த நோக்கமொடுவீற்றிருக்கும் எழில் காண்டலும் நோயிரியல்போக நாற்பொருளுந்துவன்ற என முடிக்க.)

ஆற்றுக்கடுந்துயர் என்பதுமுதல் திருமுன்னிற்ப என்னுமளவும் ஒரு முடிபு.

ஆற்றுக் கடுந்துயர் அரு நரகு உழப்பவர் நோற்றமுன் ஊழ் நனி நூக்கலும் நொடிப்பின் ஆயிடைநின்று மாயிருந் துறக்கம் புக்குழி பொலிவித்து ஒக்க தோற்றத்து விம்மித மகிழ்ச்சி மெய்தவ வீக்க—தணிக்கப்படாத பெருந்துயராகிய கடத்தற்கரிய நரகத்துட் டுன்புற்றோர் தாம்செய்துள்ள முன்னையநல்லூழ் (முறைபிறழாது) பின்வந்து கைதரலும் நொடித்தலளவைத் தானதோர் சிறுவரையினே அந்நரகினின்று நீங்கி மிகப்பெரிய துறக்கத்தின்கண் புகுந்தக்கால் பொலிவித்தாற் போன்ற வண்ணமே அதிசய வழித்தான கிளர்ச்சி மெய்ப்பாடுற மீக்கூர்தலான்,

(ஆற்றுத என்பது ஈறுகுறைந்து நின்றது. நரகுழப்பதற்கு முன் ஊற்றுகாமல் அதனிலுழந்த வரையிறுதியின்கண் தற் செய்தான் அடியில்தீயவைமுன்னும் நல்லவைபின்னுமாகச்செய்த முறைபிறழாதுவந்துதவியவாற்றால் முன்னூழ்நனிநூக்கவென்றார். நொடிப்பு என்பது நொடிக்குங்காலம். அது ஒரு மாத்திரையளவாம். மாயிருந்துறக்கம் என்பது மரூஉ. தவ என்பது ஈண்டெச்சவினையாய் நின்றது.)

ஒருகதிவிட்டு மற்று ஒருகதி அடைந்தவர் மயங்கு அறிவென்ன உயங்கும் முன் உயங்கல் எய்யே ஞகி இறுமாப்பு எய்தி செய்முறை தெரியாது திருமுன் நிற்ப—நாற்கதியுள்ஒன்றினையடைந்துஅதனை நீங்கிப்பிறிதோர்கதியையடைந்தோரது மயக்குற்றஅறிவையொப்ப முன்னர் நோய்முதலிய பீழைவயத்தானே வருந்தின அம்மயக்கத்தினை இந்நிலைக்கண்ணே அறியேனாகி யிறுமாந்து(இன்னதுசெய்வலெனச்) செய்யுங்கடப்பாட்டினை யறியாது பிள்ளையாரது திருமுன்னர்நிற்ப,

(கதிநான்கு தேவர் மக்கள் விலங்கு நரகர் என்பன. இறுமாப்பெய்தி என்பது ஒரு சொல்லாயது. புக்குழிப்பொலிவித்தொக்க என்பது பிறவித்துன்பங்களொழிந்தமைக்கும், மயங்கறிவென்ன என்பது உயிர் தன்னறிவுமறைப்புண்டமையால் தான் பழையபயிற்

சிவயத்தானே தொடர்ந்துநின்று செய்தவினையாற்செலுத்தப்பட்ட தான கதிக்கண்சென்று வேறுபட்டமைக்கும் உவமங்களாயின. ஆக வே அவ்வேறுபாடு தன்பால் அறத்தொலைந்ததென் றவாறாயிற்று. மூன்றுயங்கலெய்யாமை ஆன்மா மாயை காரணமாகவருகின்ற ஆணவமுதலிய குற்றந்தீர்தலாம். செய்முறைதெரியாமைதன்னை றிவுமறைப்புண்டு ஆன்மாபிறப்பிற்கு வித்தினைத்தேடிக்கொள்ளு முயற்சியைக்கைவிட்டமையாம். திருமுன்னிற்றல் அப்பரம்பொருளையிடைவிடாது பாவித்தசைவற நிற்றலாம். மகிழ்ச்சிவீக்க மூன்றுயங்கல் எய்யேனாகியிறுமாப் பெய்திததெரியாது திருமுன்னிற்ப வெனமுடிக்க.)

இருமைப் பயனும் எளிதினுற் றளிக்கும் பூதியும் திருவுருப் பூச்சும் நன்கு அளித்திட்டு என்னை தன்வசம்ஆக்கிய உலகை என்வ சம்ஆக்கி என்றும் ஓர் இயல்பின் நின்ற தன்நிலையில் நீங்கா திருத்தி விடாதுவிட் டருள மெய்அருள் மேற்கொண்டு ஒழியா தொழிந்து வழிவருகின்றனன்—இம்மைமறுமைப் பயன்களை வேண்டியவாறு பொருந்திநின்றுதருவதாய திருநீறும் திருவுருவிற் பூசுதற்கமைந்த சந்தனத்தேய்வையும் நலனுறத்தந்தருளி முன் தன்வயத்தேஎன்னை அகப்படுத்தினவுலகினை இதுபோழ்து என்வயத்தாகப்பண்ணி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாய்நிலைபெற்றதமது நிலையின்கண்நீக்க முறாமேயிருக்கவைத்துப் பிரியாவிடைதந்தருளியவாற்றால் அம்மெய்யுணர்விற்குநிமித்தமான அருளைக்கவயமாகமேற்கொண்டு நீங்காமனீங்கி இந்நெறிக்கண் வருகின்றேனாக,

(உலகைஎன்வசமாக்கினவாறு இறைவன்இந்திரியவிலக்கணங்களை இதுகாறுங்காட்டிநின்றதன்மை. இனிநமது அன்றென் றுநீங்கித் தற்சொருபத்தினைக்கண்டு நிற்குமாறுஆன்மாவையநுக்கிரகித்து அனைத்துந்தன்வயமாக அவற்றை முற்றுங்கடந்து நின்றதன்னையுமறிவித்து அநாதித்தான அவிச்சையினின்றும் ஒழிவித்தவியல்பாம். ஞானநாடகம்நவிலியமாறலும் என்றதற்கேற்ப மெய்யருளென்றார். விடாதுவிட்டருள எனலும் ஒழியாதொழிந்தெனலும்

கூறியவாறு. ஆண்டான் அடிமைக்கு இயல்பெனல்புலப்படுத்தியபடி. இருமைப்பயனுமளிக்கும் பூதியும் பூச்சுமளித்திட்டு உலகைஎன்வயமாக்கித் தன்னிலேயிலிருத்தி விட்டருள அருள்கொண்டு ஒழியாது ஒழிந்து வருகின்றனன் எனமுடிக்க.)

அத்தகு பெருமான் அருள்விளை யாடலை சற்றிது கேள்மதி தவமேம் படுந—அத்தன்மையவானபிள்ளையாரது அருட்கிடனாகிய திருவிளையாடல்களை (யான்கூறச்) சற்றே கேட்டி தவத்தால்மேம்படுகின்றோய்,

(இனித்தானுய்ந்தவாறு இரவலனுமுய்ந்துவாழ்தல் திண்ணமாகலான் மேம்படுந என உயர்த்துக்கூறியது. பிள்ளையார் அருளால் ஆன்மாவையுணர்ந்த தமதுசந்நிதிமாத்திரத்தால் உலகம் சீவித்தொடங்கின வாற்றினையறியும்அறிவு உதித்ததென்பதாம். அப்பெருமானருள் விளையாடலைத் தவமேம்படுந கேண்மதி எனமுடிக்க.)

விச்சு என்பது முதல் பெற்றியன் என்னுமளவும் ஒரு முடிபு.

விச்சு ஒன்று இன்றி விளைவு மிக்கு ஆக்கியும்—வித்துஒன்றுமில்லாதிருக்கவும் விளையுள்மிகுதியாயுளவாக்கியும்,

(இஃது அருவமாகியமாயையினின்றும் உலகமெல்லாம் தோற்றுவித்தது.)

விச்சுமிக் கிருப்ப விளைவு முழுது ஒழித்தும் — வித்துமிகுதியாயிருக்கவும் விளையுள்முழுது மில்லையாகப்பண்ணியும்,

(ஆன்மா ஊழ்வகையான் போகங்களை யெல்லாமநுபவித்தற்கிருந்தும் உவர்ப்பாக அவை முற்றுந்தன்னைத் தொடராவண்ணம் புணர்த்தது.)

ஒளிதலை வளர்ப்ப ஒளிகளைத் தணித்தும்—ஞானத்தினை உயிர்கண்மாட்டு வளர்விப்பதற்கு அவைக்குரிய ஞானங்களைக்குறைத்தும்,

(ஒளிஆகுபெயர். இதுபாசஞானத்தினை நன்குணர்ந்து நீக்கின பசுஞானத்தையும் நீக்கிப் பதிஞானம் ஒன்றினையேவளர்வித்தல்.)

அழுக்கினைக் கழுவ அழுக்கினை ஏற்றியும்—அவ்வுயிர்களதுமல மாசினைப் போக்குதற்கு மலமாசினைப் பின்னு மேற்றியும்,

(இது ஆணவமலமாகிய அழுக்கினைமாயாமலமாகிய அழுக்கை யேற்றித்தொலைத்தல். உதாரணம்-சிவஞானசித்தியார்சுபக்கம் உ-வது சூத்திரம் ருஉ-வது திருவிருத்தம்-எழுமுடல் கரண மாதி யிவை மல மலம லத்தாற், கழுவுவ னென்று சொன்ன காரண மென்னை யென்னிற், செழுநவை யறுவை சாணி யுவர்செறி வித்த ழுக்கை, முழுவதுங் கழிப்பன் மாயை கொடுமல மொழிப்பன் முன்னோன்.)

உறுந்தொழி லாளர்க்கு உறாது சேண் அகன்றும் — தம்மை யடைதற்கு இடைவிடாதுமுயலும் வினைஞர்களிடத்தே அவரடை யப்பெறாவண்ணம் சேணிடை நீங்கியும்,

(இது வேதங்களும் பிரமாதியரும் துதித்தும் பூசித்தும் பல வாற்றாற் பன்னாள்காறுந் தேடியும் அவைக்கு மவர்க்கும் எளிதி னணியராகாமல் அப்பாலைக்கப்பாலா யகன்று நிற்றல்.)

வறுந்தொழி லாளர்க்கு வந்து உடன் கலந்தும்—அவ்வாறுமுய லாத வறிய வினைஞர்க ளிடத்தே காலம் பாணியாம லடுத்துக் கலந் தும்,

(இது அத்துணைவலியரல்லராய எளிய அன்பர்க்குத்தாம்நினை ந்த வடிவொடு சென்று அவருள்ளத்தின்க ணிற்றல்.)

விதித்தநல் விதிகளை விலக்கென உவர்த்தும்—விதிக்கப்பட்ட நல்லவிதிகளை விலக்காமெனவெறுத்தும்,

(இது தக்கன்செய்தயாகம் தீமையாயினது முதலிய. வெறுத் தல் கடைப்படுத்தல்.)

விலக்கினை விதியென மேதக நயந்தும் — விலக்குகளை விதித்தனவாமெனச் சிறப்புறநயந்தும்,

(இது தண்டியடிகள் தந்தையைப்பேணுமையை நயத்தல் முதலிய. நயத்தல் தலைப்படுத்தல். இவைக்குதாரணம் — சிவஞானசித்தியார் சுபக்கம் உ-வது சூ. உகூ-வது திருவிருத்தம். அரனடிக் கன்பர் செய்யும் பாவமு மறம தாகும், பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும், வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி,நரரினிற் பாலன் செய்த பாவமும் நன்மை யாய்த்தே.)

இத்தகு தொழின்மை நித்தலும் இயற்றி பொற்றபே ரின்பு அருள் பெற்றியன் — இன்னவகைப்பட்டசெய்கைத் திறங்களை எக்காலும் செய்யாநின்று நித்தமான வீடுபேற்றை நல்காநின்ற நோன்மையர்,

(இத்தகு தொழின்மையாவன ஒன்றினைச்செய்கை செய்யா தொழிகை வேறொன்றுசெய்கை முதலியன. ஆக்கியும் ஒழித்தும் தணித்தும் எற்றியும் அகன்றும் கலந்தும் உவர்த்தும் நயந்தும் தொழின்மை இயற்றி இன்பருள் பெற்றியன் எனமுடிக்க.)

அஃதான்று—அதுவன்றி,

இருமுதுகுரவர் என்பது முதல் காட்டுவன் என்னுமளவும் ஒரு முடிபு.

இருமுது குரவர் எழுவாய்ச் சுற்றமொடு துயர்இலங்கு உலகம் தோற்றுதல் பொருட்டு—இறைவனுமிறைவியுமாகிய அநாதியான இருவர்முதலான சுற்றத்துடனே கன்மம்பயில்கின்ற வுலகங்களைப் படைத்தற்பொருட்டு,

(இருமுதுகுரவராவார் சுத்தசிவமும் சிற்சத்தியும்.)

தந்தை என்ன ஐந்துமுக னாகியும் அன்னை என்ன மனோன்மனியாகியும்—தமக்குத்தந்தையும்தாயும் என்னும்படி ஐம்முகமுள்ள சதாசிவமூர்த்தியும் மனோன்மனியுமாகியும்,

முன்முறை தந்தையர் தாயர் என்ன நாதம் சிவமே நலத்தகு விந்து மேதகு சத்தி வேறுவே றாகியும்—முதற்கட்கூறிய இறைவ

னும் இறைவியும்போல நாதமேசிவமும் நன்மையுள்ள விந்துவே மேன்மைத்தான் சத்தியுமெனவேறுவேறாகியும்,

பின்முறை தந்தையர் தாயர் என்ன மகேசன் உருத்திரன் மகேசை உமை ஆகியும்—பின்னர்க்கூறிய ஐம்முகனு மஞ்ஞன்மனியும் போல மகேசனுமகேசையும் உருத்திரனுமுமையுமாகியும்,

தமையன் என்ன தந்திமுகன் ஆகியும் — மூத்தோனென்னும் படி யானைமுக மூர்த்தியாகியும்,

தனையனென்ன தாமரை மருட்டும் மூவிரு முகமும் மூந் நான்குகரமும் மருவிவீற் றிருக்கும் ஒருதா னாகியும்—சேயனென் னும்படி தாமரைப்பூவைமருட்டாநின்ற ஆறுதிருமுகமும் பன்னிரு நெடுங்கரமுங்கொண்டுவீற்றிராநின்ற ஒப்பற்ற தாமேயாகியும்,

கடப்படும் இரண்டு கைகோள் இயங்க நாணவார் குழல்நகை யிழை யானையைக் கானவர் அரும்பெறல் காமரு மாதினைக் கற்பி னில் களவினில் பொற்புறமணந்தும்—தமதுகடமைப்பாடான இரு வகை ஒழுக்கங்களும் நடக்குமாறு நாணங்கமழநீண்ட கூந்தலையும் ஒளியுள்ள அணிகளையுமுடைய தெய்வயானை நாயகியையும் வேடர் களது பெறுதற்கரிய அழகு தங்கிய வள்ளி நாயகியையும் முறை யே கற்பியலினும் களவியலினும் (உயிர்கள்ஞானப்) பொலிவைக் கொள்ளுமாறு வதுவைசெய்தும்,

(இரண்டுகைகோளாவன ஞானமும்கிரியையுமாம். முற்றும்மை தொக்குநின்றது. கற்பியல் தந்தைதாயர் தாமேவிரும்பிக்கொடுப்பத் தலைமகனும் தலைமகளும் வதுவைபுனைந் தெய்துவது. களவியல் எஞ் ஞான்றும் ஒருதன்மையராய் அத்தலைமகனும் தலைமகளும் எதிர்ப் பட்டுத் தாமே (எண்வகைமணத்துள் ஒன்றாய கந்தருவமணத்தின ராய்ப்) புணர்ந்துவருவது. இவற்றின்விரிவை அகத்திணையியலுட் காண்க. உலகந்தோற்றுதற்பொருட்டு இருமுது குரவருமாகிய முதற்சுற்றமொடு சதாசிவன் சிவம் நாதம் மகேசன் உருத்திரனும் இவர்களுக்குரிய சத்திகளும் தமையனும் தனையனுகிய தாமுமாகி

ஞானக்கிரியைக ளியங்கத் தெய்வயானை வள்ளியம்மையென்னும் பெயருள்ள இரண்டு சத்திகளை மணந்தவென்றவாறாயிற்று.

பொருட்டுறை முழுதும் புரையின்றி நடப்ப அண்டகோடிகளும் அரைக்கணத்து அளவையின் வறிதுநகைதோற்றி இறுவது புரியும்எறுழ் வலிஆற்றல் எய்யான்போல—எல்லாப்பொருள்களின் பாகுபாடுகளனைத்தும் வழாமல் நடக்குமாறு அரைமாத்திரைப் போழ்தினே ஆயிரகோடி அண்டங்களையும் (இதற்கென வேண்டாது) வறிய நகை புரிதலால் படைத்து இறுதியுறப்பண்ணுநின்ற தமது கழிபேராற்றலுடைமையைத் தாமே யறியார்போல,

(இயற்கையாய் முற்று முணர்ந்தானை அறியான்போல வென்றது உபசாரவழக்கு. பொருட்டுறை என்பது சிருட்டியாதியைந்தொழிலும்.)

மந்திரம் தூது செலவு இகல்மற்றும் ஆற்றி வெஞ்சூர்வலி காற்றி உலகு ஓம்பியும்—அமைச்சொடு சூழ்தலும் ஒற்றுவிடுத்தலும் பகைவர்மேற் சேறலும் இகல்செய்தலும் இவை முதலியவுமியற்றி கொடிய சூர்மாவின் வலியை இல்லையாகப்பண்ணி உயிர்களைப் பாதுகாத்தும்,

(காற்றி என்பது கால் என்னும் வினைப்பெயரடியாய்ப் பிறந்த எச்சம். காற்று என்னும் வளியின் பெயர்க்கும் இதுவே முதனிலையாகும். அன்றியும் இக்கால் என்னு முதனிலைப் பெயரே அதற்கு ஆகுபெயராக நின்று காலென்று வழங்கும்.)

எல்லாம் அறிந்து அறிவிக்கும் அவ்வியல்பை கண்கூடாக காட்டுவன்—அனைத்தினையும் தாமேயுணர்ந்து உயிர்களையுணர்த்தாநின்ற அந்நிலையை வெளிப்படையாகத் தோற்றுவிப்பன்.

(அரையர் பகைவர்மாட்டு மந்திரம் தூதுமுதலிய இவைசெயற்பாலனவென்னும் அறநூற்பொருளை யுணர்த்தற்பொருட்டு இங்ஙனமியற்றினவாறு. இருமுதுகுரவராகிய முதற்சுற்றமொடு உலகம்தோற்றுதற்பொருட்டு ஐம்முகன் முதலிய இறைவரும் மனோன்மணி

முதலிய சத்திகளுமெனவேறு வேறாகியும் மகேசனுமுருத்திரனும் இவர் சத்திகளும் தந்திமுகனும் தாமுமாகியும் ஞானக்கிரியைகளியங்க யானையையும் மாதையும் மணந்தும்பொருட்டுறை நடப்பத்தோற்றிப் புரியும் ஆற்றலெய்யான்போல மந்திரமற்றும் ஆற்றிச்சூர்வலி காற்றியோம்பியும் அறிந்து அறிவிக்கும் அவ்வியல்பைக் காட்டுவனென முடிக்க.)

அஃதான்று—அதுவன்றி,

மூவகை என்பதுமுதல் - அளவனென்னுமளவும் ஒருமுடிபு.

மூவகை உருவாய் மூவுலகு உயிர்த்தும் மூவகை உருவும் முயங்கா பரம்பொருள்—அயனரியரனென முத்தொழிற் கடவுளராய்ப் பெரியவுலகங்களை யீன்றளித்தழித்தும் அம்மூன்றுருவையுங் கலவாது நின்ற மெய்ப்பொருளாய்,

(மூவகையுருவென்றதால் இனம்பற்றி எனையிருதொழில்களுங் கூட்டியுரைக்கப் பட்டன.)

பந்தம் வீடு பல் உயிர்க்கு அமைத்தும் பந்தம் வீடு படாதபெருந்தகை—பந்தமு முத்தியும்பல்வகையுயிர்கட்கும் அமைத்தும் அப்பந்த வீடுகளுள் தாமுயங்காது நிற்கும் பிரானாய்,

(சிவஞான சித்தியார் - முதற்சூத்திரம் - சச-வது செய்யுள். பந்தமும் வீடுமாய பதபதார்த் தங்க ளல்லா, னந்தமு மாதி யில்லா னளப்பில னாத லாலே, யெந்தைதா னின்ன னென்று மின்னதா மின்ன தாகி, வந்திடா னென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே. என்றதனாற் காண்க. வீடு விடு என்னு முதனிலையிற் பிறந்ததோர் வினைப்பெயர்.)

ஆருயிர்க்கு உயிராய் அமைந்தன நடாவியும் ஆருயிர்காட்சிக்கு அணுகா அருந்திறல் தானாய் நின்று தன்காண் தனி முதல்—தாமேயுணர்தற்கரிய உயிர்க்குள் ளுயிராய் நின்று அவைக்கு அநாதியே

தொடர்ந்துள்ள வினைப்பயன்களை நுகர்வித்து இயக்கியும் அவ்வரிய உயிர்களாற் காண்டற்குறாத அளவிடற்கரிய ஆற்றல்களுடைய தாமே யோர் தனியராய் நிலைபெற்றுத் தம்மை ஒருங்குணர்ந்துள்ள ஒப்பற்ற இறைவராய்,

அளிகளின் அளியா அளிகளுஉங்கு அளியன்—அளிகளென் பவை யெல்லாவற்றுளும் தண்ணளியாகவும் அவற்றின் மேம்பட்ட தலையளியினராய்,

ஒளிகளின் ஒளியா ஒளிகளுஉங்கு ஒளியன்—ஒளிகளென்ப வையெல்லாவற்றுள்ளும் பேரொளியாகவும் அவற்றின் மேம்பட்ட அருளொளியினராய்,

வெளிகளின் வெளியா வெளிகளுஉங்கு வெளியன்—வெளிக ளென்பவை யெல்லாவற்றுள்ளும் பெருவெளியாகவும் அவற்றின் மேம்பட்ட பர வெளியினராய்,

அளவினின் அளவா அளவினுஉங்கு அளவன்—அளவுகள் என்பவை யெல்லாவற்றுள்ளும்மிக்க அளவாகவும் அவற்றின்மேம் பட்ட தனியளவினராய்,

(அளியன் ஒளியன் வெளியன் அளவன் என்பவை குறிப்பு முற்று எச்சங்கள். அளிகள் தாய்தந்தையர் அரசர் முதலியோர் செய்யுமளிகண் முதலியன. தண்ணளி மழைநிறைமதி முதலியவை செய்வன. மேம்பட்ட தலையளி பிறப்பிறப்புக்களின் வேடையைத் தொலைப்பது. ஒளிகள் விளக்கொளி விண்மீன் முதலியவை செய் வன. பேரொளி இருசுடர் முதலியவை செய்வன. மேற்பட்ட அரு ளொளி அருளுருவாய்த்தோற்றி அவிச்சைத் தொடக்கினைக் கட் டறுப்பது. வெளிகள் கடவெளி முதலியன. பெருவெளி மனவெளி முதலியன. மேற்பட்ட பரவெளி சிதாகாயம். அளவுகள் எண்ணல் எடுத்தல் முதலியன. மிக்க அளவு காட்சிமுதலியன. தனியளவு முதல் நடுவீறின்மையாம். மூவகையுருவாய் உயிர்த்தும் முயங்காப் பொருள் அமைத்தும் படாதபெருந்தகை அமைந்தன நடாவியும்

10 15 (8284)



அருந்திறற்ருஞய் நின்று காண் தனிமுதல் அளியன் ஒளியன் வெளியன் அளவன் எனமுடிக்க.

இன்னன் என்பதுமுதல் அழுத்துவன் என்னுமளவும் ஒரு முடிபு.

இனனை ஒருவனை முன்னுபு சென்று அவன்பூங் கழல் சேவடி போற்றுதி ஆயின்—இத்தன்மையாகிய ஒருவரை (பத்திமையால்) சிந்தித்து (ஆண்டுச்) சென்று அம்முதல்வாது பூங்கழலையணிந்த செய்ய திருவடிகளைப் போற்றல் செய்தனையாயின்.

(பூங்கழல் என்பது வருமொழி முதற்கு இனம் தோன்றியது. சேவடிபோற்றல் வீடுபேற்றிற்குக் காரணம். இதனைமுருகாற்றுப்படைக்கண் முதற்படை வீட்டகவலில் "சேவடிபடருஞ் செம்மலுள்ளமொடு" என்னுந் தொடரிற்குப் பெரியருரைத்தவுரையானுய்த் துணர்க.)

பேர்அஞர் உறுத்த பேதுறு நோயும் காரண நோயும் கையிகந்து இரிய கடைக்கணித் தருளி கரையில் நாற்பொருளும் கொடைக்கடன் நீயிர் குறித்த அளவையின் எண்மடங்கு ஆற்றி என்றும் தீரா அகம்படித் தொழின்மையின் அழுத்துவன் அன்றே—பெருந்துன்பத்துளாழ்த்தின மயக்கமிக்க நோயும் அதனையுறுத்துதற்குக் காரணமாய் நின்ற நோயும் கைவிட்டோடுமாறு தமது கடைக்கணேக்கம் செய்தருளி வரையில்லாத அறமுதலிய நான்கு பொருள்களையும் நீயிர் (தம்மாட்டுப் பெறத்தக்க) கொடைப்பொருளாகக் கருதிய அளவினும் எண்மடங்கு மிக்கருளி அகம்படித் தொழில் புரியுமாற்றின்கண் நிலையுதலுறுத்துவர்,

அன்று ஏ அசைகள். மேம்படுந கேண்மதி போற்றுதி யென்னும் ஒருமை முன்னிலைப்பெயர் வினைகளுக்கேற்ப நீ குறித்த அளவையினென்னுது நீயிரென்றது நின்னன்னுர் என ஒருகுடியுளொருவன் மெய்ந்நிலையை யடையப்பெறின் அவன்முன்னேரும் பின்னேரும் தனது நற்றவம் காரணமாக உய்வுபெறுவரென்பது அருள்

வழக்காதலின் பன்மையிற் கூறியவாறு. "எத்தி யேத்தித் தொழு வோம்யாமே" எனப்பெரியர் கூறுமாறு போல எனக்கொள்க. அன்றேல் ஒருமையிற் பன்மைதழுவிய வழுவமைதியுமாம். அகம்படித் தொழின்மையாவது சன்மார்க்கநிலை முதலிய மூன்றிற்கும் மூலமான தாதநெறியாம். இவை முன்னர் ஒருவாறுரைக்கப்பட்டன. இந்நெறி உண்முகச் சரியைநிலை.பேதுறுநோய் ஆகாமியபிராரத்தங்கள். காரணநோய் சஞ்சிதம். முன்புசென்று சேவடிபோற்றுநர்க்கு கடைக் கணித்து நாற்பொருளு மிக்கருளல் வேண்டுமென்பது கடப்பாடாதலின் கொடைக்கடனென்றார். கடைக்கண் என்னும் சினைப்பெயரிற்பிறந்தது. கடைக்கணித்த லென்னும் வினைப்பெயர் ஈண்டு எச்சமாய் நின்றது. கண்ணல் நுதலல் சுட்டல் எண்ணல் குறித்தவிவை முதலியன கருதலென்னும் ஒருபொருட்கிளவி. அங்ஙனம் அகம்படித்தொழின்மையி னழுத்துமிறைவர் யாண்டைக் குரியரெனின் இச்சொற்கள் அவாய் நிலையான் வருவித்துரைத்தவாறு. அன்றி இவ்வாறு சொல்லக்கேட்ட ஆதுரன் கூற்றாக இவ்வினைவை ஆசங்கித்துரைத்த தெனினுமமையும். இன்றொருவனை முன்பு சென்று போற்றுதியாயின் பேதுறுநோயும் காரணநோயும் இரிய கடைக் கணித்தருளி கொடைக் கடன் ஆற்றி அகம்படித்தொழின்மையின் அழுத்துவன்எனமுடிக்க.)

ஆடகமென்பது முதல் கீழ்க்கோட்டம் என்னுமளவும்

ஒருமுடிபு.

ஆடகப் பசும்பொன் பாடகச் சீறடி நாடகம் மகளீர் நவிற்றிய ஆடல் சிலம்பு கிண்கிணி தீங்குழல் முழவம் முரசம் தூரி முழங்கு ஒலியானும்—ஆடகமென்னு முயர்பொன்னிளுகிய பாதகடகத்தை யணிந்த மெல்லிய அடியினராகிய நாடகமாதர் (அரங்கின்கண்) ஆடுகின்ற ஆடலில் சிலம்புகளும் கிண்கிணிகளும் இன்னோசைத் தாய தண்ணுமையுமெனமுரசமும் தூரியுமென இவை இடையறாது முழங்கும் ஒலியினுலும்,

(ஆடகப்பொன் இரு பெயரொட்டுப் பண்பு. ஆடகம் நால்வகையுள் ஒர்வகைப்பொன். பாடகம் மரூஉமொழி. சிலம்பு என்பதைப் பெயரெச்சமாக்கி கிண்கிணிக்கு அடையாகவுரைப்பினுமாம். சிறுமை மென்மை குறித்துநின்றது.)

விண் தலம் உரிஞும் வியன்மணிப் புரிசை கொண்டல் கண்படுக்கும் கோபுர நிரைகள் ஆடுகொடி சுமந்த மாடம் நெடுமாளிகை இன்னன பிறவும் மன்னுதலானும்—விண்ணிடத்தை யுரிஞ்சுகின்ற உயர்ந்த மணிகள் குயின்ற மதில்களும் மேகம்தங்குதற்கிடமான கோபுர நிரைகளும் அசையுங் கொடிகளை மேலே பொருத்த மேனிலைகளால் நெடிய மாளிகைகளும் இவை போல்வன பிறவும் நிலைபெற் றிருக்கையாலும்,

(பிறவென்பது மண்டபம் விமானம் நிலத்தேர் செய்குன்று முதலியவற்றை. புரிசை சூழ்ந்த கோபுரமெனினுமாம்.)

ஒலிதிரைக் கடலும் ஒங்குபல் வரையும் உடங்கு தொக்கு அண்மி ஒண்துறை யாடி இருபகுப் பினவாய் இருகரை மருங்கும் நோற்றன வதியும் பேற்றினைத் தெரிக்கும்—ஒலித்தெழுந்திரைகளையுள்ள கடலும் மேலுயர்ந்த பன்னிறமலைகளும் ஒருங்குசேர்ந்தெய்தித்திவ்விய தீர்த்தத்திலாடி இரண்டுபெகுப்புக்களாய அத்தீர்த்தத்தினிருகரைப் புறத்தும் நின்று நோற்கின்றவையாய் நிலைபெற்றிருக்கப் பெற்ற தமது பெரும்பயனைப்புலப்படுத்துகின்ற,

(இப்பெயரெச்சம் மேல்வரும் கோட்டமென்பதொடு இயையும். கிண்கிணி முதலியவற்றின் ஓசையை ஒலிகடலாகவும் புரிசை முதலியவற்றின் மிகுதியை பல்வரையாகவும் உருவகப்படுத்தினவாறு. ஒலியாற் கடலும் நிறம் தோற்றங்களால் வரையும் உருவகம். பன்னிறமலையென்றது வெண்மலை பொன்மலை நீலமலை முதலியவற்றை. இவ்வண்ணமுள்ள மலைகளுள்ளன மேருவரைக்கு நாற்புடையினும். தீர்த்தம் சரவணப்பொய்கை. ஓண்மைமாசின்மை.)

மும்மையும் அளிக்கும் மூவா முழுமுதல் ஐம்முக னாகி அமர்ந்த வீரட்டமும் அறுமுகனாகி அமர்ந்த கீழ்க்கோட்டமும்—இம்மைமறுமை வீடு என்னும் முத்திறத் தின்பங்களையும் உயிர்களைப்பெறுவியாநின்ற மூத்தலில்லாத தனிமுதலாகிய பிள்ளையார் ஐந்துமுகமுள்ள இறைவனாகி வீற்றிருக்கும் வீரட்டமும் ஆறுமுகமுள்ள கடவுளாகி வீற்றிருக்கும் கீழ்க்கோட்டமும்,

(மூவா என்பது மூத்த லென்னு மெச்சவினையின் எதிர்மறைச் சொல்லாய் ஈறுகுறைந்து நின்றது. முழுமுதல் தன்னின் பிறிதொன்றில்லையென்னும் பொருட்டு. கோட்டம் கோயில். நாடக மகளிர் ஆடற்கிண்கிணி முதலியவை முழங்கொலியானும் புரிசை முதலியவும் பிறவும் மன்னுதலானும் கடலும் வரையும் தொக்கு அண்மி துறையாடி இருமருங்கும் வதியும்பேற்றினைத்தெரிக்கும் வீரட்டமும் கோட்டமுமெனமுடிக்க.)

பொன்னு மென்பது முதல் பண்ணை ஒருபுறஞ் சூழ என்னு மளவும் ஒரு முடிபு.

பொன்னும் மணியும் புதுமலர்க்குவையும் திரைக்கையின் தூஉய்த்திளைத்து எழுந்து ஒழுகும் நந்தி ஆற்று நறும்புனல்மடுக்கும்—பொன்னையும் மணிகளையும் புதுமைத்தான பூத்திரளையும் அலைகளாகியகைகளால் எடுத்துத் தூவிக் கலந்து மேலுயர்ந் தொழுகாநின்ற நந்தி நதியின் இனிமைத்தான நீர்ப் பாய்ச்சலால் வளர்ந்த,

(நீர்பாய்கின்ற வெனினுமாம். முன்னையது மேல்வரும் கதிர்ச் சாலி யொடும் பின்னையது பண்ணையொடுமியையும்.)

சூரங்கு கதிர்ச்சாலியும் கொழுதீம் கரும்பும் குலை பூ கதலியும் கோள் தெங்கினமும் கோள்கள் மீ பரிக்கும் பாளைக்கமுகும் வயின் வயின் பொதுளி வளம்பல உறந்த முருகுஅலர் பண்ணை ஒருபுறம் சூழ—கூனிய கதிர்செறிந்த செந்நெல்லும் இனிமை மிக்க கரும்புகளும் தாற்றுவாழைகளும் குலைகளால் மிக்கதெங்கின்வகையும் விண் கோள்களைத்தம்மேல் சுமவாநின்ற பாளைகளையுள்ள கமுகுகளும்

இடங்கடோறும் நிறைந்து பல்வேறுபயன்களை உதவுமதான நறுமணங்கமழும் மருதம் ஒருபுடைதழுவாநிற்ப,

(இடங்கள் வயல் சோலை படப்பை முதலியன. இனம் என்பதனைச் சாலிமுதலியவற்றிற்குங் கூட்டுக. பொன் முதலியவற்றைத் திரைக்கையால் தூஉய்த்திளைத்து எழுந்து ஒழுகும் நந்தியாற்றுப் புனல் மடுக்கும் சாலியும் கரும்பும் கதலியும் தெங்கும் கமுகும் பொதுளிவளம் பலவுறந்த பண்ணை சூழ என முடிக்க)

அவரை முதல் புறவமொருபுறஞ் சூழ என்னு மளவும் ஒரு முடிபு.

அவரை துவரை அரில்கதிர் வரகு சாமை இறுங்கு தழைந்தன விளையும் கொல்லை—அவரையும் துவரையும் சிறுதூறுகள்போலும் கதிர்களுள்ளவரகும் சாமையும் இறுங்கும் நிரம்பினவாய் விளைதற்கிடமாகிய கொல்லைகளும்,

முல்லை கோழிணர் பூவையும் பந்தர்மாதவி உந்திய கோங்கும் பைங்கால் கொன்றை பசும்பொன் சுண்ணமும் வளி உளர்ந்து எடுப்ப மறுபுல வரைப்பும் போர்த்தன கமழ்ந்து பொறி வண்டு அழைக்கும் அரும்புலப் புறவம் ஒருபுறம்சூழ—முல்லைக்கொடிகளும் கொழுவிய பூங்கொத்துக்கணிறைந்தகாயாவும் பந்தர்போற்படரும் குருக்கத்திகளுட மேலெழுந்த கோங்குகளும் பசிய அரையுள்ள கொன்றைகளும் பசுமைத்தான பொன்னிறத்தபராகங்களும் இவற்றிற்படிந்து காற்றுவீசலால் வேற்றுநிலவெல்லையினும் நிறைந்து மணந்து பொறிகளையுள்ள வண்டினத்தை வரிக்கா நின்ற வெற்றிடமாகிதான முல்லைநிலட ஒருபுடைதழுவா நிற்ப,

(மறுபுலவரைப்பு தனக்கணியவாகிய குறிஞ்சி மருதங்கள். அரும்புலம் காடுபொதுளாவெற்றிடமின்மை. அவரை முதலியவை விளையும் கொல்லையுள்ளபுறவமெனவும் முல்லை பூவைமுதலியவையுடைத்தாய் வளியூர்ந்து எடுப்ப மறுபுலவரைப்புங்கமழ்துவண்டின மழைக்கு மரும்புலப்புறவ மொருபுறப் சூழ என முடிக்க.)

செருந்தி என்பது முதல் மருங்குகால்வளைஇ என்னு மளவும் ஒருமுடிபு.

செருந்தி மந்தாரம் குருந்து வழை பாடலம் கோங்கு சண்பகம் வேங்கை மகிழ் சந்தனம் குங்குமம் மாவம் கோழகில் கப்புரம் இல்லம் ஆவிரை வில்லம் பாங்கர் பிடர் ஞெமை நமை ஆண்டுஅடர்வரை எகின் சே அசோகம் தேக்கு ஆத்தி சூதம் மருது போதி வஞ்சி காஞ்சி ஞாழல் புன்னை நரந்தை மாதுளை பொகுட்டுஅரை இருப்பை பூஞ்சினைச்சரளம் முன்னம் பலாசு முருக்கை வருக்கைசோதிமாமரம் தொத்தினநாகம் அன்றி அனைத்தும் துன்றிய கறிக்கொடி மல்லிகை முசுண்டை—செருந்திமுதல் நாகமீறாகக்கிடந்த மரவகைகளும் அவையன்றிக் காணிகள் அனைத்தும் நெருங்கிப்படர்ந்த மிளகு மலைமல்லிகை முசுண்டை முதலிய கொடிவகைகளும்,

(கப்புரம் கப்புரமரம். இல்லம் தேற்று. அவற்றுள் பாங்கர் பிடர் ஞெமை நமை சரளம் இவை ஒரோவோர் மரச்சாதி. பொகுட்டரையிருப்பை பொருக்காகிய அடியையுள்ள இருப்பை. வரை மூங்கில். சே செம்மரம். போதி அரசு. பலாசு வெண்முருக்கு. சோதி மாமரம் பெருமையுள்ள சோதிவிருக்கம் காணி கொடிமருந்து. அவை சல்லியகாணி சந்தானகாணி சமநியகாணி சீவகாணி முதலியன. அனைத்துந்துன்றியகறிக்கொடி என்பதற்கு இம்மரங்களெல்லாவற்றினும் சூழ்ந்து படர்ந்தகறிக்கொடி எனினுமாம்.

மற்றும் பரித்து—பிறவகைமரங்களையு மேற்கொண்டு,
(அவை அத்தி ஆல் இலந்தை எலுமிச்சை ஏலம் எழிலம்பாலை ஓமை கடு குரா கோட்டம் சிந்தூரம் சிவந்தி நறுவிலி நாவல் பச்சிலை மஞ்சாடி மரா வன்னி வெட்பாலை வேல் முதலியனவுங் கொள்க.)

மணம் கமழ் காமர் வல்லி ஒன்றே இணங்கு தரும் தன் இகழ்ச்சியைநாடி—மணமிக்க காமவல்லியென்னும் அஃதொன்று தானே தனக்கு ஏற்றபூத்தருகின்ற சிறுமையைநாடி

(காமவல்லி தேவருலகிற் கற்பகத்தின்மேற் படர்ந்துள்ளதோர் பூக்கொடி. ஆண்டு ஐந்தென்னுமெண்ணுள்ள தருக்களேயன்றி ஈண்டுள்ளபலவேறு கோட்டுப்பூக்கள்மலிந்த எண்ணில்லாத்தருக்களின்மை நோக்கி வல்லியொன்றே என்றும், அக்கொடியொன்றே யன்றிப் பலவின்மைபற்றி இகழ்ச்சியைநாடி என்றுங்கூறினர். ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது இகழ்ச்சிக்கு சிறுமை ஆகுபெயர்.)

வசைபட தத்தம் இசைவிளக்குவபோல் பொறிவரி சுரும்பும் வெறி நுகர் தேனும் தோகைமா மயிலும் தொடி கண் பூவையும் கிள்ளையும் குயிலும் தெள்ளுகுரல்காட்டி—பொன்னகர்அவ்வசை பட்டதால் தமது தமது இசையைப் புலப்படுத்துவனபோல, பொறியுள்ள பண்வல்ல சுரும்பினமும் கள்ளுண்ணும் தேனினமும் பெரியகலாபமயில்களும் தொடிபோலும் கண்ணையுடைய பூவைகளும் கிள்ளைகளும் குயில்களுமாகிய இவை இனியகுரலோசையைக்காட்டி,

(சுரும்பு வண்டினாண். தேன் அதன்பெடை. தொடி வளை. இசை புகழ் பண் என்னும் பலபொருளொருசொல்.

வண்தளிர் பொதும்பர் மருங்குகால் வளைஇ—பச்சென்ற தளிர்களையுடைய சோலைகளின் பாங்கர்ப்பயில,

(வளைஇ எச்சத்திரிபு. வண்மை பசுமை. செருந்திமுதல் நாகமீறாகக்கிடந்தமரங்களும் அன்றியனைத்தும் சுறிக்கொடி முதலியவும் மற்றும்பரித்து வல்லியொன்றே பூத்தருந்தன் இகழ்ச்சியை நாடித் தத்தமிசை விளக்குவபோலச் சுரும்புமுதல் குயிலீறாகவுள்ளவை குரற் காட்டிப்பொதும்பர்மருங்கு கால்வளைஇ என முடிக்க.)

நுண்டளி யென்பது முதல் தணிகைமலை கிழவோன் என்னு மளவும் ஒரு முடிபு.

நுண்தளி நறுந்தேன் சோலாது திவளும் தலைத மலர் சினைய தரு ஐந்து உடுத்த பொன் நகர் வறுமையை முன்னிநக் காங்கு—நுண்ணிய திவலையான நறியதேனை உடைத்தாயிராது துவளுகின்ற

மலர் நிறைந்தகிளைகளையுள்ள ஐந்தருக்கள் சூழ்ந்த பொன்னகரத்தினது நல்குரவை நோக்கிநகைத்தாற்போல,

(திவளல் துவளலுமாம். பொன்னகர்க்குவறுமை பொன்மலர்க்குத் தேனின்மையும் மணமின்மையுமாகிய இவற்றால் வறுமை புணர்த்தது)

வேரல் நரன்று உக்க வெள் மணிக்குப்பையும் பிறழ் பல்பேழ் வாய் பின்முன் பார்வை சிங்க வல்லேறு பொங்குசினம்திருகி எழுந்து தாய் துமிப்ப இரும் கடாயானை மத்தகம் பிளந்து மாயிரும் குன்றத்து வெண்புனல் அருவி வீழ்வனபோல சலசல வுக்க தரளக்குவாலும்—மூங்கில்கள் கணுக்கள் பீறிஉதிர்ந்த முத்தின் திரளும் வரிசைபிறழ்ந்த பற்களையும் பெரியவாயையும் பின்னு முன்னு நோக்கும் பார்வையையு முடைய வலிமைத்தான சிங்கவேறு பொங்கிய சினமுதிர்த்து மேலெழுந்துபாய்ந்துமோதலால் மிக்கமதம் பொழியும் யானைகளுடைய மத்தகமிருகூறுகி மிகவுமுயர்வாகிய மலையினின்றும் வெள்ளிய நீரருவிகள் விழுவனபோலச் சலசலவென்றுதிர்ந்த முத்தின் திரளும் (சேர்ந்து,)

(கடா என்பதில் அயனீட்சி சொற்சுவை நோக்கிவந்தது சலசல என்பது அநுகரணவொலி.)

நில உராய் தவழ நெமிர்ந்தன மிளிரும் கவான்மலைப் புனத்து—மதியொளியை விரித்து எங்கும்பொருந்துமாறு பரவியொளிர்தற்கிடமாகிய மலைப்புறத்திற் புனங்களிடத்தே,

(நகரமும் ஞகரமும் தம்முளொக்கும். கவான்மலை என்பது இலக்கணப்போலி.)

கதிர்தினை காக்கும் உவாமதி முகத்தார் ஒச்சினர் விடுக்கும் கவணையில் மணியோ கங்குல் கானவர் விலங்கினம் தூக்கும் இலங்கு கூர்கணையோ அலைத்தரவிசும்பின் நிலைத்தருகலன்கள் பல்வகையின்

கொடி ஒல்கி வீழ்ந்து என்ன வெல்வரை நிரையும் பில்குகதிர் மணி பூங்காழும் தாமமும் கவின தழைஇய மண்டபம் மேடை மாடம் மேனிலைகள்—கதிர்விளையுளின்பொருட்டுத் தினைப்பயிரை ஓம்புகின்ற நிறைமதிபோலும் முகத்தழகுள்ள கொடிச்சியர் மேலெறிந்து விடுக்காநின்ற கவணையின் மணிக்கற்களோ? இருணிறமுடைய வேட்டுவர்மாவினத்தைப்பற்றுமாறு எய்கின்ற வடித்தமுனைகூரிய அம்புகளோ? அலைத்தலால் விண்ணுலகிலுள்ள பலவகையணிகளும் பலவேறுமின்னுக் கொடிகளும் நிலைபெயர்ந்து வீழ்ந்தாற்போலஇருளையோட்டின மலைகளிடத்தே நிரைத்தகதிரொளியை யுமிழாநின்ற பொலிவுள்ளமணிவடங்களும் பொன்னரிமாலைகளும் அழகுறநெருங்கின மண்டபங்களும் மேடைகளும் மாடங்களும் உபரிகைகளும்,

(பல்வகை என்பதை கலன்களுக்குங்கூட்டுக. கலன்களும் மின்னுக்கொடிகளும் கவணைமணிகளாலும் கூர்ங்கணைகளாலும் அலைப்புண்டு வீழ்ந்தாற்போலும் என்றது அவை விண்ணிற் பெயர்தற்குக்காரணந்தோன்ற நின்றது. வீழ்ந்தென்ன என்பதில் விகுதிகுறைந்து நின்றது. வரை என்பதை மூங்கில் என்றுரைத்துக் காழும் தாமமும் மூங்கில் நிரையும் என எண்ணியுரைப்பதுமொன்று. முன்னையதில் வரை புடைவரைகள்.)

இயங்கா நிலைத்தேர் இயங்கும் மணி பஃறேர் விமான வூர்திகளும் வேற்றுமை தோற்றா வளம்பல தழீஇ—இயக்கமில்லாத நிலைத்தேர்களும் இயக்கமுள்ள மணிகுயின்றபலதேர்களும் விமானயானங்களும் தம்முள் வேறுபாடறியப்படாதனவாய்ப் பலவளப்பங்களையு மொருங்குகொண்டு,

(தோற்றா என்பது வினையெச்சமுற்று.)

எம்மருங்கும் மெய் அடியார் இடும் அகில் தூமமும் எக்கரின் குவைஇய படரொளி யூட்ட பளிதம் குப்பை கான்றதீம் புகையும் கழுமி விண் கெழுமி—எப்புடையினும் மெய்யுணர்வுள்ளதொண்டர்களிடுகின்ற அகிற்புகையும் குவாலாகக்கூப்பிய பரந்த ஒளியைத்தம்

மிடத்தேயுடைய கப்பூரக்குவைகள் வெளிப்படுத்தின இனிய புகையும் ஒருசேரக்கூடி விண்ணிற் பரந்துலாவி,

இமையார் நாட்டம் இமைப்பன செய்ய—ஆண்டுத்தேவரது கண்களை இமைக்கும்படி செய்தலானும்,

மல்லல் ஆவணமறுகும் வீதியும் நாள்தொறும் எழிலான் நவம் நவம் ஆகி இமைக்குநர் நாட்டம் இமையாமை செய்ய—பலபண்டங்களுமுண்மையால் வளப்பமிக்க அங்காடிவீதிகளும் மற்றைவீதிகளும் (நிலைபெற்ற) எழிலால் நாள்தோறும் மிக்கபுதுமை பயப்பனவாய்க்கண்ணிமைக்குமனித்தரது கண்களை இமையாவண்ணம் செய்தலானும்,

(அடுக்கு மிகுதி குறித்து நின்றது.)

மண்டலம் விண்டலம் மாற்றியது என்ன—மண்ணுலகினை விண்ணுலகாமெனவும் விண்ணுலகினை மண்ணுலகாமெனவும் மாற்றினதென்னும்படி,

இறும்பூது பயவா ஏர்குலாய் கிடந்த—அதிசயத்தையுண்டாக்கி அழகு அடைகிடக்கின்ற,

திசைகாப் பாளர் இசைநிறை தேவர் அலரவன் நெடுமால் ஆதியகடவுளர் முதுக்குறை அன்பின் முறைமுறை பழிச்ச—திக்குகளைக் காவா நின்ற இமையவரும் புகழ்மிக்கதேவரும் பிரமன் நெடுமால் முதலிய பெருந்தேவரும் பேரறிவொடு கூடின அன்பினராய் நிரை நிரையாய் நின்று துதிசெய்யா நிற்ப,

சாறுநாள் அல்லது வேறுநாள் அறியாது—எந்நாளினும் திருவிழாவதுவை முதலியவையியலும் நாளேயன்றி வேறுவெற்று நாள் காணுதலில்லாமை,

(வேறுநாள் சிறப்புக்களியலாமே வாளா கழியுநாட்கள்.)

உலகமுழுது ஓம்பு பல் சிறப்பின்—உலகமனைத்தையும் தலையளிசெய்து காவாநின்ற பலவகைச்சிறப்பின் மாண்பினதாய்,

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.



(பல் சிறப்பு மூர்த்தி தலம் தீர்த்தமுதலியவை. முற்றும்மை தொக்கு நின்றது.)

நிலைபெறு தணிகைமலை கிழவோனே—நிலைபெற்ற திருத்தணிகை மலைக்குரியவன் என்க

(ஏ அசைநிலை. நுண்டளித்தேனொலாதுதிவளும் பொன்னகர் வறுமையை முன்னிநக்காங்கு மணிக்குப்பையும் தாளக்குவாலும் தவழுமிளிரும் மலைப்புனத்துக் சாக்கும் மதிமுகத்தார் விடுக்கும் மணியோ கானவர்கணையோ அலைத்தர விசும்பிற் கலன்களும் மின்னுக்கொடிகளும் வீழ்ந்தென்ன வரையில் காழுந்தாமமுந்ததைஇய தணிகையெனவும், மண்டபமுதலியவை வேற்றுமைதோற்றாவாய்வளந்தழீஇ எம்மருங்கும் அகிற்றாமமும் பளிதக்குப்பை கான்றதீம்புகையும் விண்கெழுமியிமைப்பன செய்யவும், மறுகும் வீதியும் நவமாகியிமையாமை செய்யவும், மண்டலம் விண்டலம் மாற்றியதென்ன ஏர்குலாய்க்கிடந்த தணிகையெனவும், திசைகாப்பாளரும் தேவரும் ஆகியகடவுளரும் பழிச்ச சாறுநாளல்லதறியாது பல்சிறப்பினதாய் நிலைபெற்றுள்ள தணிகைமலைக் கிழவோன் எனவுமுடிக்க.)

தாயக்குரிசிலது (௨) தோகிய நிலனும் (௪) வழங்குதற் கமையா வண்மையுடைமையால் (௫) புலவர் உள்ளத்தினையொத்த (௬ + ௭) சங்கப்பலகையி னிடத்தே (௯) அவ்வெண்டோள் முதல்வனோடு (௧௦) பயிலிய அருமறைக்கேள்வியும் (௧௧) தீஞ்சுவைத்திரளும் (௧௫) ஆராதுவைப்பவும் (௧௬) இளமையும் (௨௦) யாக்கையும் (௨௩) செல்வமும் (௨௫) இரியும் நிலைமை நாடிக் (௨௬) கொடைக்கடனிறுத்து (௨௭) நோற்கும் உறுதியாக்கம் கழலவும் (௨௮ + ௨௯) கடன்மேற்கலம் செறித்தும் (௩௧) அடர்த்து (௩௨) கொண்டு (௩௪)நேர்நாடாவியும் (௩௬) சில்லோதியும்(௪௧)வாள்நுதலும் (௪௪) மழைக்கண்ணும் (௪௭) வெண்பல்லும் (௪௯) செஞ்செவியும் (௫௧) திருமுகமும் (௫௯) வேய்த்தோளும் (௬௩) சுடர்ப்பூண்கொங்கையும் (௬௫) மணிமயிர்வல்லியும் (௬௯) கொப்பூழும் (௭௨) கொடிமருங்குலும் (௭௪) பேரல்குலும் (௭௭) செறிகுறங்கும் (௭௯) சீரடியும்(௮௨)

இயலும் உடையடமாதரை (௮௩) சீலமுதலியவற்றால் (௮௪) தெரிந்து(௮௫)எற்றித் (௮௬) தேயமுதலியவற்றை (௮௭) நாடிக்(௮௯) கலவியுறாற்றுமின்பம்(௯௨)அவாப்பொதிந்து கொண்டழற்று நோய் (௯௩) வளர (௯௪) உருவேதபவும் (௯௫) பொங்கர் முதலியன(௯௬) வளங்கொழிப்ப (௯௮) எத்த (௯௯) எங்கத் (௧௦௦) தவிசிற் காவல் வைகும் (௧௦௧ + ௧௦௨) மகவான்பதமாகிய (௧௦௩) அளிக்கும் வினை போலாது (௧௦௪) கடவுள்புத்தேள் (௧௦௫ + ௧௦௬) இவர் தமச்குமரிய (௧௦௭) சரியைகிரியையோகத்தவநிலைப் (௧௦௮) பிறக்கணித்துகவும் (௧௦௯) ஊனநாடக முஞற்றிய (௧௧௦) அருள்ஞான நாடகநவிலிய மாறலும் (௧௧௦ + ௧௧௧) கழல (௧௧௨) மடங்கக் (௧௧௩) குருவாகி (௧௧௪) உயிர்முதலெழுவகையினையுந் தெரிப்பக் (௧௧௫ + ௧௧௮) கேட்டுச் சிந்தித்துத் (௧௧௯) தெளிந்து (௧௨௦) புணரும் நிலை நீங்கவும் (௧௨௧ + ௧௨௨) பிணிக்கோட்பட்டு மனத்தாஞகித் (௧௨௫) தொலைச்சி (௧௨௯) இகழா (௧௩௧) மடுத்து (௧௩௨) உருப்ப (௧௩௪) ஒழிய (௧௩௬) காண்பாம் எனப் (௧௩௭) படிந்தும் பணிந்தும் காணமை (௧௪௧) புறநகர்க்கோட்டமும் (௧௪௨) தொழிலொடுபடர்ந்து வத்தியும் (௧௪௪) இனையச் (௧௪௫) சேட்சென்று ஒராஅல் செய்தென வலித்துத் (௧௪௬) தழுவப் (௧௪௭) பிணிப்ப (௧௪௮) மென்மெலக் கழீஇ (௧௫௦) நெறியொதுங்கலின் (௧௫௫) நீருகுப்பத் (௧௫௭) தாங்க (௧௫௮) நனைப்பக் (௧௫௯) காயமொடு (௧௬௩) அசைந்து (௧௬௫) உயிர்ப்பெரிந்து நினைதருமிரவல! (௧௬௬) சுரத்துத் (௧௬௮) திரியாது (௧௬௯) எதிர்ப்பாடுற்றது முன்னைத் (௧௭௦) தவப்பயன் போலும் (௧௭௧) அதனால் துயர்ஒரால் வேண்டின் (௧௭௨) பாணியாது எழுமதி. (௧௭௩) ஒடுமிரலையின் (௧௭௪) அடுத்தடுத்தலமருகாலை (௧௭௬) மாந்தருள் (௧௭௭) வரையறைப்படாது (௧௭௯) உயிர்க்கும் பிணியாளரும் (௧௮௦) புண்ணுறுநரும் (௧௮௧) பிணியுழவரும் (௧௮௩) கடிஞரும் (௧௮௪) பேய்க்கோட்படுநரும் பித்துமீக்கூர்நரும் (௧௮௫) உறுப்புக் குறைநரும் குணம் இழநரும் (௧௮௬) எனைவருமன்றி(௧௮௭)கல்வி வேட்டவரும் கான்முளைவீழ்நரும் (௧௮௮) செல்வம் வீழ்நரும் நாடுநரும் (௧௮௯) காமுறுநரும்(௧௯௦)நச்சுநரும் (௧௯௧)

வேறுநினைவினரெவரும் (௧௯௨) தணப்பவும் மணப்பவும் (௧௯௩) எழுந்து (௧௯௪) திரள் முதலியவற்றைத் (௧௯௫ + ௧௯௬) தழீஇனர் போதும் (௨௦௦) சனப்பெருக்கம் (௨௦௧) காண்டொறும் களியேனாகி (௨௦௨) உடங்கு சென்றிறுப்பான் எழலும் ௨௦௩) நோய் தன்னம் நீங்க (௨௦௪) யாக்கைவலியெய்த (௨௦௫) ஊக்கம் உந்த எழுந்து (௨௦௭ + ௨௦௮) அடி பெயர்த்தோறும் பிணிநழுவ (௨௦௯) மகிழ்வாற் பாடாஅச் (௨௧௦ + ௨௧௧) சென்று நகர் நுழைதலும் (௨௧௨) நோய் ஒருகூறு விலங்கக் (௨௧௩) காட்சியார்வமீர்த்தலின் (௨௧௪) நந்திநதி குடையாது (௨௧௫) முனிவர்சுனை ஆடாது (௨௧௬) மலைப்பசைனான்கயம் படியாது (௨௧௭) நாகவண்சுனை தோயாது (௨௧௮) விண்டு தீர்த்தம் குளியாது (௨௧௯) அலரவன்சுனை முழுகாது (௨௨௦) சரவணப்பொய்கை துளைந்து (௨௨௨) இவர்ந்து (௨௨௩) நேர்கண்டுதொழுது (௨௨௬) பொற்பினர் மிடைதலின் (௨௨௭) ஒதுங்குபு சூழ்ந்து (௨௨௯) வாய்தல்நுழைந்து (௨௩௨) சென்று (௨௩௪) பணியா (௨௩௬) தாழ்ந்து (௨௩௭) தொழுது (௨௩௮) எழும் ஐந்தும் விராயியக்கி ஒளிரும் (௨௪௨ + ௨௪௩ + ௨௪௪) அருணிலை பிணிதீர்த்தருள் கொழிப்ப (௨௪௫ + ௨௪௬) இருந்தனர் களிப்பப் (௨௫௧) போற்ற (௨௫௨) ஏத்த (௨௫௩) நோக்கமொடு வீற்றிருக்கும் (௨௫௪ + ௨௫௫) எழில்காண்டலும் (௨௫௫) நோயிரியல்போக (௨௫௬) நாற்பொருளுந்துவன்ற (௨௫௭) மகிழ்ச்சி வீக்க (௨௬௨) முன்னுயங்கல் எய்யேனாகி இறுமாப்பெய்தித் (௨௬௪ + ௨௬௫) தெரியாது திருமுன்னிற்ப (௨௬௬) இருமைப் பயனு மளிக்கும் (௨௬௭) பூதியும் பூச்சு மளித்திட்டு (௨௬௮) உலகை என்வசமாக்கித் (௨௬௯ + ௨௭௦) தன்னிலையிலிருத்தி (௨௭௧) விட்டருள அருள்கொண்டு (௨௭௨) ஒழியாது ஒழிந்து வருகின்றனன் (௨௭௩). அப்பெருமானருள் விளையாடலைத் (௨௭௪) தவமேம்படுந கேண்மதி (௨௭௫). ஆக்கியும் (௨௭௬) ஒழித்தும் (௨௭௭) தணித்தும் (௨௭௮) ஏற்றியும் (௨௭௯) அகன்றும் (௨௮௦) கலந்தும் (௨௮௧) உவர்த்தும்(௨௮௨)நயந்தும்(௨௮௩) தொழின்மை இயற்றி (௨௮௪) இன்பருள்பெற்றியன் (௨௮௫). அதுவன்றி; இருமுதுகுரவராகியமு

தற்சுற்றமொடு (௨௮௬) உலகம் தோற்றுதற்பொருட்டு (௨௮௭) ஐம்முகன் முதலிய இறைவரும் (௨௮௮) மனோன்மணி முதலிய சத்திகளும் எனவேறு வேறாகியும் (௨௮௯ + ௨௯௨) மகேசனு முருத்திரனும் இவர்சத்திகளும் (௨௯௪) தந்திமுகனும் தாமுமாகியும் (௨௯௫ + ௨௯௮) ஞானக்கிரியைகளியங்க (௨௯௯) யானையைக்கானவர் மாதினை மணந்தும் (௩௦௦ + ௩௦௧ + ௩௦௨) பொருட்டுறை நடப்பத் தோற்றிப்புரியும் ஆற்றலெய்யான் போல (௩௦௩ + ௩௦௫ + ௩௦௬) மந்திரமற்றும் ஆற்றிச்சூர்வலிகாற்றியோம்பியும் (௩௦௭ + ௩௦௮) அறிந்து அறிவிக்கும் அவ்வியல்பைக்காட்டுவென் (௩௦௯ + ௩௧௦) அதுவன்றி; மூவகையுருவாய் (௩௧௧) உயிர்த்தும் முயங்காப்பொருள் (௩௧௧ + ௩௧௨) அமைத்தும் படாதபெருந்தகை (௩௧௩ + ௩௧௪) அமைந்தன நடாவியும் (௩௧௫) அருந்திறற்றனாய் நின்றுகாண்தனி முதல் (௩௧௬ + ௩௧௭) அளியன் (௩௧௮) ஒளியன் (௩௧௯) வெளியன் (௩௨௦) அளவன் (௩௨௧) இன்னொருவனை முன்பு சென்று (௩௨௨) போற்றுதியாயின் (௩௨௩) பேதுறு நோயும்காரணநோயும் இரியக் (௩௨௪ + ௩௨௫) கடைக்கணித்தருளி (௩௨௬) கொடைக்கடன் ஆற்றி (௩௨௭ + ௩௨௮) அகம்படித் தொழின்மயின் அழுத்துவன் (௩௨௯). நாடகமகளிர் (௩௩௧) ஆடற்கிண்கிணி முதலியவை (௩௩௧ + ௩௩௨) முழங்கொலியானும் (௩௩௩) புரிசைமுதலியவும் (௩௩௪ + ௩௩௬) பிறவும்மன்னுதலானும் (௩௩௭) கடலும் வரையும் (௩௩௮) தொக்கு அண்மித் துறையாடி (௩௩௯) இருமருங்கும் (௩௪௦) வதியும் பேற்றினைத்தெரிக்கும் (௩௪௧) வீரட்டமும் (௩௪௩) கோட்டமும் (௩௪௪) பொன்முதலியவற்றை (௩௪௫) திரைக்கையிற்றாஉய்த்திளைத்து எழுந்து (௩௪௬) ஒழுகும் நந்தியாற்றுப் புனல்மடுக்கும் (௩௪௬ + ௩௪௭) சாலியும் கரும்பும் (௩௪௮) கதலியும் தெங்கும் (௩௪௯) கமுகும் (௩௫௦) பொதுளிவளம் பலவுறந்த (௩௫௧) பண்ணைசூழ (௩௫௨) அவரைமுதலியவை விளையும் (௩௫௩ + ௩௫௪) கொல்லையுள்ள புறவம் எனவும் (௩௫௫ + ௩௬௦ முல்லைபூவை முதலியவையுடைத்தாய் (௩௫௫) வளியுளார்ந்து எடுப்ப மறுபுலவரைப்புங் கமழ்ந்து (௩௫௮ + ௩௫௯) வண்டின மழைக்

கும் (௩௫௯) அரும்புலப்புறவம் ஒருபுறஞ்சூழ (௩௬௦) செருந்தி முதல் நாகமீறாகக்கிடந்த மரங்களும் (௩௬௧ + ௩௭௧) அன்றி யனைத்தும் கறிக்கொடிமுதலியவும் (௩௭௨) மற்றும் பரித்து (௩௭௩) வல்லியொன்றே பூத்தருந்தன் இகழ்ச்சியை நாடித்தத்தமிசை விளக்குவபோல் (௩௭௪ + ௩௭௫ + ௩௭௬) சுரும்புமுதல் குயில் ஈறாகவுள்ளவை குரற்காட்டிப் (௩௭௭ + ௩௭௮ + ௩௭௯) பொதும் பர் மருங்குவளைஇ (௩௮௦) நுண்டளித்தே னொலாதுதிவளும் (௩௮௧) பொன்னகர் வறுமையை முன்னிநக் காங்கு (௩௮௩) மணிக்குப்பையும் தாளக்குவாலும் (௩௮௪ + ௩௯௦) சவழமினிரும் மலைப்புனத்துக்காக்கும் (௩௯௧ + ௩௯௨) மதிமுகத்தார்விடுக்கும் மணியோ கானவர்கணையோ (௩௯௩ + ௩௯௪ + ௩௯௫) அலைத்தர (௩௯௬) விசும்பின்கலன்களும் மின்னுக்கொடிகளும்வீழ்ந்தென்ன (௩௯௬ + ௩௯௭) வரையில்காழுந்தாமமுந்ததைஇய(தணிகை) (௩௯௮- ௩௯௯ + ௪௧௮) மண்டபமுதலியவை (௪௦௦) வேற்றுமை தோற்றா வாய் (௪௦௨) வளந்தழீஇ (௪௦௩) எம்மருங்கும் அகிற்றூமமும் பனித் தக் குப்பைகான்ற தீம்புகையும் (௪௦௩ + ௪௦௪ + ௪௦௫ + ௪௦௬) விண்கெழுமியிமைப் பனசெய்யவும் (௪௦௬ + ௪௦௭) மறுகும் வீதியும் நவமாகியிமையாமைசெய்யவும்(௪௦௮ + ௪௦௯ + ௪௧௦)மண்டலம்விண் டலம் மாற்றியதென்ன (௪௧௧) ஏர்குலாய்க்கிடந்த (தணிகை) (௪௧௨ + ௪௧௮) திசைகாப்பாளரும் தேவரும் (௪௧௩) ஆதியகடவுளரும் (௪௧௪) பழிச்ச (௪௧௫) சாறுநாளல்ல தறியாது (௪௧௬) பல் சிறப்பினதாய் நிலைபெற்றுள்ள தணிகை மலைக்கிழவோன் எனவினை முடிக்க. (௪௧௭ + ௪௧௮)

தணிகையாற்றுப்படை யென்றதற்கு வீடுபெறச் சமைந்
தானோர் இரவலனை வீடுபெற்றானொருவன் தணி
கையினிடத்தே ஆற்றுப் படுத்ததென்று
பொருள் கூறுக.

திருத்தணிகையாற்றுப்படை விருத்தியுரை
முற்றிற்று.
வேலுமயிலுந்துணை.

மகாமகோபாத்யாய,
வே. சாமிநாதையர்

கணபதி துணை.

# திருத்தணிகையாற்றுப்படை

## பிழையும் திருத்தமும்.

| பக்கம் | வரி | பிழை — மூலம் | திருத்தம் — மூலம் |
|---|---|---|---|
| க | கஉ | பகழி | பகழித் |
| உ | கஅ | விலங்கின் | விலங்கின |
| ,, | கஅ | விழுக்கனல் | விழுக்கலன் |
| ,, | ,, | மலர்பொழின் | மலர்ப்பொழின் |
| ந | உ | மேவாத்தடை | மேவரத்தடை |
| ,, | ந | ரமிழ்த்த | ரமிழ்தத் |
| ரு | எ | வினைப்போலாது | வினைபோலாது |
| சு | உசு | கால்சிய்க்கு | கால்சிக்கு |
| அ | உஉ | ஞெருபட் | ஞெருப்பட் |
| க0 | கஎ | வண்ணவர் | விண்ணவர் |
| கந | கந | வாடன் | வாடற் |
| ,, | கச | முழுவ | முழவ |
| கச | உ | குரயகு | குரங்கு |
| கசு | உ | றாபமு | றாமமு |
| | | **உரை** | **உரை** |
| ச | கக | வண்மயி | வண்மையி |
| எ | ந | நோர்ப்போர் | நோற்போர் |
| அ | சு | தெவ்வரிருக்குங் | தெவ்வரிறுக்குங் |
| ,, | எ | செரித்து | செறித்து |
| ,, | கக | பெறுக்கா | பெருக்கா |
| கூ | அ | தங்கும்படித் | தங்கும்படி |
| கஅ | எ | பெறுகா | பெருகா |
| உச | கசு | பலவகைத் | பல்வகைத் |
| உகூ | க0 | மடுத்தடுத்து | அடுத்தடுத்து |
| ,, | கஎ | பட்டது | பட்டன |

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| | | உரை | உரை |
| ௩0 | கஉ | யிடைபடுத்தும் | யிடைப்படுத்தும் |
| ௩உ | அ | இருப்பான் | இறுப்பான் |
| ,, | கக | சென்றிருப்பான் | சென்றிறுப்பான் |
| ௩௩ | கரு | இவ்வறலாற்றை | இவ்வரலாற்றை |
| ௩௪ | உரு | நோயுடமை | நோயுடைமை |
| ௩எ | உக | நிறம்புதலும் | நிரம்புதலும் |
| ௪அ | எ | பிரார்த்தங்கள் | பிராரத்தங்கள் |
| ,, | கஉ | குறித்தவிவை | குறித்தலிவை |
| ,, | உஅ | தண்ணுமையுமென | தண்ணுமையும் |
| ௪கூ | ௩ | ஒர்வகை | ஓர்வகை |
| ,, | ௪ | பெயரெச்சமாக்கி | பெயரெச்சமாக்கிக் |
| ,, | உ௪ | மிகுதியை | மிகுதியைப் |
| ருக | உஅ | கமழ்து | கமழ்ந்து |
| ருஉ | உ௩ | எழிலைம்பாலை | எழிலைம்பாலை |
| ருஎ | உ௬ | நேர்நாடாவியும் | நேர்நடாவியும் |
| ருஅ | உஉ | உயிர்ப்பெரிந்து | உயிர்ப்பெறிந்து |
| ௬0 | கக | மயின் | மையின் |

மகாமகோபாத்யாய, டா[illegible]
உ. வே. [illegible]
அடை[illegible] சென்னை-20.